
# வெள்ளிமலை

05 SEP 2012
நூலகம்

இதழ் 12

சித்திரை 2012



சூழலியற் கட்டுரை;

## வலிகாமம் பகுதிப் பறவைகள்

சௌ. ஸ்ரீஹர்ஷன்

பக்கம்: 40


நேர்காணல்:

"சாகித்திய இரத்தினம்"

## சபா ஜெயராசா

சு. துரைசிங்கம்

பக்கம்: 13



## பெண்ணியத் தோற்றமும் அதன் வளர்ச்சியும்

பக்கம்: 52

சி. ரமேஷ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் திரு. மரியதாசன் ஜெகூ அவர்களும் நல்லூர் பிரதேசசபைச் செயலாளர் திரு. மே. சாந்தசீலன் அவர்களும் சுன்னாகம் நூலகத்தைப் பார்வையிடுகிறார்கள்



நிகழ்வுகளின் பதிவுகள்



யாழ். பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. செ. பிரணவநாதன் சுன்னாகம் நூலகத்தைப் பார்வையிடுவதுடன் மேம்படுத்தப்பட்ட சிறுவர் நூலகப் பகுதியை வலிகாமம் தெற்கு பிரதேசசபை தவிசாளர் கௌரவ தி. பிரகாஷ் அவர்களுடன் சேர்ந்து திறந்து வைக்கின்றார்



உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. செ. பிரணவநாதன் உரையாற்றுகிறார்




நாணயங்கள் சம்பந்தமான முப்பரிமாண நூலகம் சுன்னாகம் நூலகம் 09.03.2012

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# வெள்ளிமலை

**வலிகாமம் பிரதேச வளங்கள், திறன்கள் வெளிக்காட்டிடும் சஞ்சிகை**


மலை : 05 சித்திரை 2012 வெள்ளி : 12


**இனிதினிதாய் எழுந்த உயர் எண்ணமெல்லாம்**
**இலகுவது புலவர்தரு சுவடிச்சாலை**
**புனிதமுற்று மக்கள்புது வாழ்வுவேண்டில்**
**புத்தக சாலைவேண்டும் நாட்டில்யாண்டும்**
**- பாவேந்தர் பாரதிதாசன் -**

## வலிகாமம் தெற்கு பிரதேச வாசகர் வட்ட வெளியீடு


**இணை ஆசிரியர்கள்**
க. சௌந்தரராஜன்
திருமதி இ. கருணாநிதி

**ஆசிரியர் குழு**
திரு. சு. துரைசிங்கம் (கவிஞர் துரையர்)
திரு. பா. பாலச்சந்திரன்
திரு. சு. ஸ்ரீகுமரன்
திரு. இரா. ஜெயக்குமார்
திரு. சி. ரமேஷ்
திரு. பா. துவாரகன்
திரு. த. அருள்குமரன்

**தொடர்புகளுக்கு**
வெள்ளிமலை
சுன்னாகம் பொதுநூலகம்
சுன்னாகம்.

**அச்சுப்பதிப்பு**
கிருஷ்ணா பிறிண்டேர்ஸ்,
டாக்டர். சுப்பிரமணியம் வீதி,
சுன்னாகம்.



இச்சஞ்சிகையில் வெளியாகியுள்ள ஆக்கங்களுக்கு அவற்றை எழுதியவர்களே பொறுப்பாளிகளாவர்.


**பக்கம்**


எண்ணச்சாரல் 02
விசாலாட்சி மாதாஜி அம்மையார் – *செ. ரவிசாந்* 03
கவிதை – சாதிக்கப் பிறந்தவளே பெண் – *அ. நேதிகா* 05
திருக்குறள் காட்டும் பொதுமைப் பண்புகள் – *தம்பு சிவா* 06
பொய்மையாளரைப் பாடாதீர் – விழிசிட்டி கா. சுப்பிரமணியம் 09
கவிதை – *பெண்ணினம்* – *ஜெ. தர்சிகா* 10
நடந்த கதை - மீண்டும் உயிராபத்தா – *'விதி'* 11
நேர்காணல் – சாகித்திய இரத்தினம் சபா ஜெயராசா – *கலாபூஷணம் சு. துரைசிங்கம்* 13
நினைவலைகள் – *சு. திருச்செல்வம்* 17
வாசிப்போம் வளம் பெறுவோம் – இரா. ஜெயக்குமார் 20
கவிதை – ஒலிபெருக்கி ஒழிக – *'கேளாச்செவியன்'* 21
குறுங்கதை - வேண்டுதல் – *இணுவையூர் சிதம்பர திருச்செந்திநாதன்* 22
ஒன்றேகடவுள் என ஒலிக்கும் ஒண் தமிழ்ப்பாடல்கள் – *'உதங்கா'* 23
கவிதை – வெறுமை உலகம் – *கௌதமி இராஜசூரியர்* 24
அரங்கினூடாக சிறுவர்களின் உளரன் மேம்பாடு – *எஸ். ரி. அருள்குமரன்* 25
ஈழத்தின் பெருமைமிகு கவி மஹாகவி – *ஆ. இரகுபதி பாலஸ்ரீதரன்* 27
சிறுகதை - ஆபத்தில் மீட்ட தொண்டு – *பா. பாலச்சந்திரன்* 29
கவிதை – புதுயுகம் படைப்போம் – *ஞா. கஜந்தா* 33
இசைக்கலைஞர் வயலின் சோமாஸ்கந்தசர்மா – *மு.பா. துவாரகன்* 34
அரியானே மொச்சுகினி – *எஸ். ரி. குமரன்* 37
வலிகாமம் பகுதி பறவைகள் – *சௌ. ஸ்ரீஹர்ஷன்* 40
எங்கே செல்கிறோம் ஒரு சைவசமய நோக்கு – *த. சண்முகநாதன்* 50
பெண்ணியத் தோற்றமும் அதன் வளர்ச்சியும் – *சி. ரமேஷ்* 52



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னுரைச்சாரல்

உள்ளூராட்சி மாகாண சபைகள் அமைச்சு பொதுசன நூலகங்களை வலுப்படுத்தும் செயற்றிட்டத்தை இவ்வாண்டில் நடைமுறைப்படுத்துகின்றது. உள்ளூராட்சி மறுசீரமைப்புக்கான ஆணைக்குழு நூலகத்துறையில் எடுக்கப்படவேண்டிய அக்கறையையிட்டுச் சுட்டிக்காட்டியுள்ளதுடன், பல்வேறு சிபார்சுகளைக் குறிப்பிட்டுமிருந்தது.

யாழ். மாவட்ட பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளராகக் கடந்த ஆண்டு இறுதியில் பொறுப்பேற்ற நிர்வாகசேவை அதிகாரி திரு. செ. பிரணவநாதன் அவர்கள் முதன்மை நூலக செயற்றிட்டத்தையும் மாவட்ட நூலக அபிவிருத்தி குழுவூடாக வலுவூட்டல் பணிகளையும் சிறப்பாக முன்னெடுத்து வருகின்றார்.

பொதுவாக உள்ளூராட்சி சபைகளின் முக்கிய நலன்புரி, கல்விச் சேவையாக நூலகத்துறை இருந்தபோதிலும் போதிய கரிசனை காட்டப்படாத சூழ்நிலையே இருந்துவருகின்றது. வாசிப்புப்பழக்கம் அருகி வருவதாகத் தற்போது குறைபட்டுக் கொள்ளும் நிலை உருவாகுவதற்குரிய காரணங்களை ஆராய்ந்தால் கரிசனையற்றுப் போனதன் விளைவும் பங்களிப்பதை உணரமுடியும். இந்நிலையை மாற்றியமைக்க, உள்ளூராட்சி உதவி ஆணையாளரும் சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர்களும் உள்ளூராட்சி மன்ற செயலாளர்களும் நூலகர்களும் ஒன்றிணைந்து உருவாக்கிய செயற்றிட்டங்கள் மாவட்ட நூலகங்களில் நடைமுறையிலுள்ளன.

- ❖ நூலக விழிப்புணர்வு நிறுவகத்தின் அனுசரணையுடன் முப்பரிமாண நூலக அறிமுகம்.
- ❖ பிரதேச எழுத்தாளர்களின் நூல்கள், சஞ்சிகைகளைக் கொள்வனவு செய்து மாவட்ட நூலகங்களில் இடம்பெறச் செய்தல்.
- ❖ பாடசாலை மாணவர்களிடையே எழுத்தாற்றலையும் வாசிப்புப் பழக்கத்தையும் மேம்படுத்த கையெழுத்துச் சஞ்சிகைப்போட்டி.
- ❖ பிரதேச தகவல், வரலாறுகளை தொகுத்து ஆவணப்படுத்தும் முயற்சி.
- ❖ சிறுவர் நூலகங்களை மேம்படுத்தி சிறுவர்களை அங்கத்தவர்களாக்க இலகுபடுத்திய நடைமுறைகளை மேற்கொள்ளுதல்.
- ❖ கதைவேளை, பேச்சுப்போட்டி, கலை கலாசார நிகழ்வுகளை மேற்கொள்ளுதல்.

என எழுச்சி மிகு நூலகத்தை மக்கள் மத்தியில் நிலைநிறுத்த பாடுபடும் நிலை காணப்படுகின்றது.

வீடுகள்தோறும் நூல்கள்; வீதிகள் தோறும் வாசிகசாலைகள்
பாடசாலைகள், பணியகம் எங்கும் படிப்பு வசதிகள்;
நாடுநகர் கிராமம் எங்கணும் நலமிகு நூலகம்
கூடுமாமெனில் வாசிப்பு தேடுமோர் நிலை தோன்றுமா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குப்பிளான் தந்த பெண் புலவர்
# விசாலாட்சி மாதாஜி அம்மையார்



சிவபூமி எனப் பெயர் பெற்ற ஈழத் திருநாட்டின் வடக்கே செந்தமிழும் சைவசமயமும் செழித்தோங்கும் சிற்றூர்களில் ஒன்றான குப்பிளான் கிராமத்தை ''ஈழத்தின் திருப்பரங்குன்றம்'' எனப் பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள் விதந்து போற்றுவார். இங்கே காலத்திற்குக் காலம் பல கல்விமான்களும் சைவத் தமிழ்ப் பெரியார்களும் தோன்றி தமது ஊரின் பெருமையை உலகறியச் செய்த வண்ணமிருக்கிறார்கள். அந்த வகையில் நாவலரின் மாணவ பரம்பரையைச் சேர்ந்த சித்தாந்த வித்தகர் செந்திநாதையர் தொடக்கம் தற்போது வாழ்ந்த கொண்டிருக்கும் சிவத்தமிழ் வித்தகர் சிவமகாலிங்கம் வரை இவர்களின் பட்டியல் நீண்டு கொண்டே போகின்றது.

இவர்களின் வழியில் தற்போது ஆன்மீக அன்னையாக, அருள்ஞானத் துறவியாக எம் மத்தியில் வாழ்ந்து கொண்டிருப்பவர் சைவநன்மணி புலவர்மணி ஸ்ரீவிசுவாம்பா விசாலாட்சி மாதாஜி அவர்கள் ஆவார். 1931ம் ஆண்டு நவம்பர் மாதம் 12ம் நாள் சீனியர் சின்னையா, உமையம்மை தம்பதிக்குச் செல்வப் புதல்வியாகப் பிறந்த விசாலாட்சி அம்மையார் தனது ஆரம்பக்கல்வியைக் குப்பிளான் விக்னேஸ்வரா மகாவித்தியாலயத்திலும், இடைநிலைக் கல்வியைப் புன்னாலைக் கட்டுவன் அமெரிக்கன் மிஷன் பாடசாலையிலும் பெற்றார். இதன் பின் மிகுந்த பிரயாசையின் மத்தியில் ஏழாலை அரசினர் பாடசாலையில் உயர் கல்வி கற்று தமிழ் S.S.C (சிரேஸ்ட தராதரம்) பரீட்சையில் திறமைச்சித்தி அடைந்தார். தொடர்ந்து இதே பாடசாலையில் மாணவ ஆசிரியராகக் கடமையாற்றினார்.


செ. ரவிசாந்
குப்பிளான்


1955இல் ஈழத்துச் சித்தர் தவத்திரு. சிவயோக சுவாமிகளைத் தனது மானசீகக் குருவாக அடைந்து உபதேசம் பெற்றார். திருநெல்வேலி பரமேஸ்வராக் கல்லூரியின் அப்போதைய அதிபர் சைவப்பெரியார் மு. ஞானப்பிரகாசம் அவர்களிடம் சைவ சித்தாந்தம் பயின்ற அம்மையார் பிரவேச பண்டிதர், பாலபண்டிதர் பரீட்சைகளில் சிறப்புத்தேர்ச்சி பெற்றார். 1960இல் தம்பியாரின் ஆதரவுடன் தென்னிந்தியாவின் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் தமிழ்ப்புலவர் பயிற்சி முடித்த மாதாஜி அம்மையார் நன்னூல், சங்க இலக்கியங்கள், இதிகாச புராணங்கள், தொல்காப்பியம் முதலானவற்றை ஐயந்திரிபறக் கற்றுத் தேறினார். இதன்பின் சிதம்பரம் கவியோகி சுத்தானந்த பாரதியாரைத் தரிசித்தார். தொடர்ந்து வடலூர் இராமலிங்க வள்ளலாரிடம் ஞானசமய தீட்சை பெற்று ''மாதாஜி'' ஆயினார். இதன் பின் தூயதுறவறத்தில் தன் வாழ்வை முழுமையாக அர்ப்பணித்தார்.

1964 இல் இலங்கை திரும்பிய மாதாஜி அவர்கள் ஏழாலை ஆத்மஜோதி நா. முத்தையா அவர்களின் அழைப்பின் பேரில் மலையகம் முழுவதும் சைவப்பிரசங்கம் மூலம் ஆன்மீக நெறியைப் பரப்பினார். 1965இல் திருக்கேதீஸ்வரத் திருவாசக மடத்தில் திருவெம்பாவைக் காலத்தில் இடம்பெற்ற சிவபூசை மாநாட்டில் கலந்துகொண்டு சிறப்புச் சொற்பொழிவாற்றினார். இலங்கை, இந்தியா சைவத்தமிழ் பெரியோர்கள் பலர் கலந்த கொண்ட இவ்விழாவில் சிவத்தமிழ் செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டியை முதன் முதலில் சந்தித்தார். இந்தச்சந்திப்பு காலப்போக்கில் இவர்களிடையே ஆழமான நட்புறவாக மலர்ந்தது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதே காலப்பகுதியில் மலையக நாவலப்பிட்டிப் பகுதியில் தாமரை வல்லித் தோட்டத்திலும், மாசிவலைத் தோட்டத்திலும் சிறப்பான வகையில் ஆசிரியப் பணியாற்றினார். அப்போது வறுமைக்குட்பட்ட மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்காகத் தன்னாலான பொருளாதார உதவிகளை வழங்கி ஏழைகளின் சிரிப்பில் இறைவனைக் கண்டார்.

1972இல் கிளிநொச்சி குருகுலம் சென்று அங்குள்ள அநாதை மாணவிகளின் விடுதி மேற்பார்வையாளராக வேதனமின்றிக் கடமை யாற்றினார். அக்காலங்களில் கிளிநொச்சி, வவுனியா முதலான மாவட்டங்களில் சைவப் பிரசாரத்தில் ஈடுபட்டார். 1975இல் கிளிநொச்சி இந்து மகாவித்தியாலய சிறப்புத்தமிழ் சமய ஆசானாக நியமனம் பெற்றார். 1986இல் யாழ்ப்பாணம் ஊரெழு கணேச வித்தியா லயத்தில் கலாநிதி துர்க்கா துரந்தரி அவர்களுடன் ஆசிரியப் பணிபுரிந்தார்.

1995இல் மிகுந்த சிரமத்திற்கு மத்தியில் கொழும்பிலிருந்தபடியே சைவம். தமிழ் சார்பான நூல்களை யாத்தார். இக்காலத்தில் இந்து கலாசார அமைச்சின் அழைப்பில் இலங்கை வந்திருந்த தவத்திரு. கிருபானந்தா சுவாமிகளிடம் ஆசீர்வாதமும் விருதும் பெற்றநாள் இவரது 'வாழ்வில் பொன்னெழுத் துக்களால் பொறிக்கப்பட வேண்டிய நன்னாள்' என்பார்.

1997இல் மீண்டும் இந்தியாவின் திருச்சி நகருக்குச் சென்ற மாதாஜி அம்மா அவர்கள் அங்குள்ள திருஈங்கோய் மலை ஸ்ரீலலிதா சமாஜத்தில் ஸ்ரீவித்தியாமோகினி அவர்களிடம் சந்நியாசம் பெற்று ஆன்மீக ஞானியானார். 2003இல் சிவத்தமிழ்ச் செல்வியின் அழைப்பின் பேரில் துர்க்காபுரம் சென்று அங்குள்ள மகளிர் இல்லச் சிறார்களுக்குச் சமயம் தொடர்பான கல்வியைப் புகட்டியதோடு, சமய சமூகப் பணிகளிலும் ஈடுபட்டார். இக்காலப் பகுதியில் கொழும்புத் தமிழ்ச்சங்கச் செயலாளர் கலாநிதி தமிழவேள் அவர்களால் ஈழத்துப் பூதந்தேவனார் விழாவில் வைத்து ''முதுபெரும் புலவர்'' என்றும் சிறப்புப் பட்டம் கையளிக்கப் பெற்றார்.

2008இல் சிவத்தமிழ்ச்செல்வி அம்மாவின் மறைவுக்குப்பின் மீண்டும் சொந்த மண்ணான குப்பிளானில் கால்பதித்தார். இக்காலப் பகுதியில் தனிச் சைவக்கிராமமான குப்பிளானில் பிறமத ஊடுருவலைக் கண்டு மனம் வெதும்பினார். குப்பிளான் சைவசித்தாந்த கலாநிதி. காசிவாசி செந்திநாதையர் திருவுருவச் சிலையின் அருகே அமைந்த அருளோங்கு சொக்கர்வளவுசோதி விநாயகர் ஆலய மணிமண்டபத்தில் தங்கியிருந்து முதுமைப் பிணியையும் பொருட்படுத்தாது தற்போது தம்மாலான சமய, சமூகப் பணிகளை நிறைவேற்றி வருகிறார்.

இதுவரை ஏறக்குறைய முப்பதுக்கும் மேற்பட்ட நூல்களை எழுதி வெளியிட்டுள்ள மாதாஜி அம்மா அவர்கள் இன்னும் சில நூல்களை எழுதித் தம்வசம் வைத்துக்கொண்டு அவற்றை அச்சேற்றுவதற்குப் போதிய பொருளாதார வசதி வேண்டிக் காத்திருக்கிறார். இவர் எழுதிய வெளியிட்டுள்ள நூல்களில் சிறுவர் ஞானத்தமிழ் நாடகம், சிவவிரத மான்மியக் கதைகள், சிவராத்திரி புராண படனம், திருக்கேதீஸ்வரம் - சிறுகுறிப்பு, கந்தபுராண அமுதம், நல்லூர்க் கந்தன் நான்மணிக்கோவை, குப்பிளான் சோதிவிநாயகர் கவசமணி மாலை முதலானவை குறிப்பிடத் தக்கவை. 1965இல் தொடங்கி அண்மைக்காலம் வரை இவரது கட்டுரைகள் வீரகேசரி, ஈழநாடு, தினகரன், தினபதி, வலம்புரி, தினக்குரல், போன்ற பத்திரிகைகளிலும் ஆத்மஜோதி, இலண்டன் முரசு, கலசம், கோபுரம், இந்துசாதனம் போன்ற சஞ்சிகைகளிலும் வெளியாகி இந்துமக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தி வருகின்றன.

''நீறில்லா நெற்றி பாழ்'' என்ற கூற்றிற்கமைய சைவசமய ஆசார ஒழுக்க நெறிகளைத் தவறாது கடைப்பிடித்து வாழும் புலவர் மாதாஜி அம்மையார் ஒரு நடமாடும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆன்மீகச் சுரங்கம் மட்டுமல்ல என்போன்ற இன்றைய இளைய தலைமுறையினருக்கு நல்லதொரு வழிகாட்டியுமாவார். இவரது கனவு தான் வாழும் காலத்தில் மாணவர்களின் அறிவு, ஆற்றல் மேம்பாட்டுக்காகத் தான் பிறந்த குப்பிளான் மண்ணில் நவீனமயப்படுத்தப்பட்ட விசாலமானதோர் நூலகம் அமைக்க வேண்டுமென்பதே.

கடந்த 12.11.2011 அன்று தனது எண்பதாவது அகவையைப் பூர்த்தி செய்த ஆன்மீக அன்னை மாதாஜியின் சமய, சமூக சேவைகளைப் பாராட்டி 04.02.2012 அன்று குப்பிளான் ஊரவர்கள் முத்துவிழாவும், முத்துவிழாச் சிறப்புமலர் வெளியீடும் நிகழ்ந்தியுள்ளமை வரவேற்புக்குரியது.

முதுபெரும் ஈழத்துப் பெண் புலவர் மாதாஜி அம்மையார் இன்னும் பல ஆண்டுகள் நலமே வாழ்ந்து சைவத்தமிழ் உலகுக்குத் தம்மாலான ஆன்மீகத் தொண்டாற்றப் பிரார்த்திப்போம். ■

# சாதிக்கப் பிறந்தவளே பெண்

*பூமித்தாய் காலஅன்னைஎன*
*பெண்ணாக உருவகித்திடும் இவ்வுலகம்,*
*பூமித்தாய் தானே கால அன்னை தானே என*
*பெண்ணை மிதித்திட்ட காலம் இது.*

*பூமித்தாய் நம்மவர் கொடுமைதனைத் தாங்கிட முடியாது*
*தனது சீற்றம் தனைப் பலவடிவில் காட்டுவது போல*
*பெண்மையும் நம்மவர் கட்டுக்களைத் தாங்கிட முடியாது*
*தன் விருப்பில் செயற்படத் தொடங்கிவிட்ட காலம் இது.*

*குழந்தை பெற்றெடுக்கும் இயந்திரமும் அல்ல;*
*பணிக்கும் வேலை செய்யும் ரோபோவும் அல்ல;*
*விருப்பு, ஆசாபாசங்கள் இல்லாத ஜடமும் அல்ல;*
*சாதிக்கப் பிறந்தவளே பெண்.*

*மண்ணுலக ஆய்வு தொட்டு விண்ணுலக ஆய்வுவரை*
*அன்னை எனும் பதவி முதல் அரசியல் எனும் பதவிவரை*
*கல்வி முதல் கொண்டு உலகவர்த்தகம் வரை*
*சாதிக்கப் பிறந்து சாதித்துக் காட்டியவளே பெண்.*



ஓவியம்: சுபாஸ் சந்திரபோஸ் – அளவெட்டி.

அ. நேதிகா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# திருக்குறள் காட்டும் பொதுமைப் பண்புகள்

இணுவில் தம்பு சிவா

மனிதன் மனிதனாக வையத்துள் வாழ்வாங்கு வாழ்வதற்கு வேண்டிய நெறிமுறைகளை சுட்டிக்காட்டும் பொதுமை நூலாக திருவள்ளுவர் தந்த திருக்குறள் அமைந்துள்ளது. ''கடுகைத் துளைத்து ஏழ்கடலைப் புகுத்தி குறுகத் தறித்த குறள்'' என்று போற்றப்படும் திருக்குறளை முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்தர் தமது அளவுகோல் கொண்டு பின்வருமாறு இயம்பியுள்ளார்.

''பல்வேறுவகைத் தொடர்பு பெற்றானொருவனுக்கு ஒவ்வொரு தொடர்புடையார் மட்டும் அவன் இன்னவாறு ஒழுகுதல் வேண்டும் என்று கற்பிக்கும் நூலே யாவற்றினும் மேம்பட்ட நூலாகும். அதுவே உயிர்களை உய்விக்கும் பான்மையுடையது. ஆயின், அப்பெற்றியதாயநூல்தான் யாதெனில், அதுவே திருத்தகுசீர் தெய்வத் திருவள்ளுவர் அருளிய ஒப்புயர்வற்ற மாணிக்கத் திருக்குறளாகும். என்னையோவெனின், கருவி நூல்களும் கலை ஞானங்களும் மனித வாழ்க்கைக்கு இன்றியமையாத் துணையவாயினும், அவையனைத்தையும் தராசின் ஒரு தட்டிலிட்டு, உயிர்க்குறிதி பயப்பதாய திருக்குறட் செந்தமிழ் நூலை மற்றோர் தட்டிலிட்டால் திருக்குறட் தட்டு பொருட் சிறப்பினால் தாழ்ந்து நிற்குமெனில் மிகையாகாது'' என்று ஆழ்ந்து நோக்கியுள்ளார்.

**''தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்கல் தானென்றாங்கு**
**ஐம்புலத்து ஆறுஓம்பல் தலை''**

''அதாவது வையத்துள் வாழ்வாங்கு வாழ்வோர் இல்லத்திற்குப் புதிதாக வரும் விருந்தினர், உறவினர், தன் குடும்பத்தார் ஆகிய ஐவகையினரையும் உரிய முறையில் பேணிக் காப்பாற்றுதல் இல்வாழ்வார்தம் தலையாய கடமையாகும்'' என்கிறார்.
தான் வாழ்ந்தால் மட்டும் போதாது மற்றவர்களையும் வாழ வைக்க வேண்டும் என்ற பொதுமைத் தத்துவத்தை வள்ளுவனாரும் முன்வைத்துள்ளார்.

**''பழியஞ்சிப் பாத்தூண் உடைத்தாயின், வாழ்க்கை**
**வழியெஞ்சல் எஞ்ஞான்றும் இல்''**

பழி எதுவும் நேராது தன்னைக் காத்துக்கொண்டு தன்னிடம் இருப்பவற்றை மற்றவர்க்குப் பகுத்து அளித்து வாழ்பவனின் வாழ்க்கை எக்காலத்தும் வளம் குன்றுவது இல்லை.

**''அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார்**
**என்பும் உரியர் பிறர்க்கு''**

தன்னைக்கூடப் பிறர்க்காகத் தானம் செய்வார் அன்புடையார். தன்னைக் காக்க பிறர்பொருளைத் தட்டிக்கொள்வார் அன்பில்லார். இதன் மூலம் பிறர் பொருளைச் சுரண்டுவது பொருத்தமற்றது என்பதை அன்பால் உணர்த்துகின்றார். என்னே அவர்தம் பெருந்தன்மை.

**''இருந்தோம்பி இவ்வாழ்வது எல்லாம் விருந்தோம்பி**
**வேளாண்மை செய்தல் பொருட்டு''** என்னும் குறளுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**''மனைவி மக்கள் தமைக்காத்து**
**மகிழ்வாய் உழைத்து வாழ்வதெலாம்**
**மனைக்கே வந்த விருந்தினரை**
**மனதால் ஊட்டி மகிழ்தற்கே!''**

என்று புலவர் இராச. கண்ணையன் கவிதை தந்துள்ளார். எல்லோருடனும் மனமகிழ்ச்சியுடன் வாழ்வதே பண்பாகும், என்ற உன்னத கோட்பாட்டை இக்குறள் தந்து நிற்கிறது.

**''இல்லாரை எல்லோரும் எள்ளுவர்''** என்ற குறள் பதங்களும் **''இலனென்று தீயவை செய்யற்க''** என்ற வரிகளும் பொதுமைக் கருத்தைக் கூறுவனவாக அமைந்திருப்பதைக் குறிப்பனவாகவே உள்ளன. ''திருக்குறள் எளிது இனியது பழுத்த அறிவின் பிழிவாய் வெளிவந்தது புதியதோர் சமுதாயம் படைக்க, பொதுநல சமுதாயம் படைக்க எழுந்த நூல்'' என்கிறார் ஒரு அறிஞர்.

**''வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து**
**வான்புகழ்கொண்டது தமிழ்நாடு''**

என்று பாரதியாரும் வள்ளுவன் புகழைப் பாடியுள்ளார்.

**''தாளாற்றித் தந்த பொருளெல்லாம் தக்கார்க்கு**
**வேளாண்மை செய்தற் பொருட்டு''**

அதாவது பொதுநலங் கருதுபவர் விடாமுயற்சியோடு பொருள் தேடிச் சேர்ப்பதெல்லாம் தகுதி வாய்ந்தவர் வளர்ச்சிக்கு உதவி செய்ய வேண்டும் என்பதற்கே.

**''ஊருணி நீர்நிறைந் தற்றே உலகவாம்**
**பேரறி வாளன் திரு''**

பொதுநல நோக்குடன் வாழ்கின்ற பேரறிவாளனின் செல்வமானது ஊர்மக்கள் அனைவருக்கும் பயன்தரும் நீர் நிறைந்த ஊருணியைப் போன்றதாகும். இங்கே பொருட்கள் ஒரு இடத்தில் குவிந்து கிடக்காமல் எல்லோரையும் சென்றடைய வேண்டும் என்னும் பொதுவுடமைக் கருத்தை நீருடன் ஒப்பிட்டுத் தெளிவாக விளக்கியுள்ளார். திருவள்ளுவனார்.

**''களவினால் ஆகிய ஆக்கம் அளவிறந்து**
**ஆவது போலக் கெடும்''**

''கொள்ளை அடித்துப் பொருள் குவிப்பது, முதலில் பெரிதாகத் தோன்றினாலும், அந்தச் செயல் ஏற்கனவே இருந்த செல்வத்தையும் அடித்துக்கொண்டு போய்விடும்'' என்கிறார். மற்றவர்களைச் சுரண்டி வாழுகின்ற செயலானது முறையற்றது என்னும் பொதுமைக் கருத்தைத் திருவள்ளுவர் இக்குறள் மூலம் வலியுறுத்தியுள்ளார்.

''பிறர் படும் துயரத்தைப் போக்க முடியாத ஒருவன், அவ்வுயிரின் துயரத்தை தானும் ஏற்று அனுபவித்தால் ஒழிய, ஒருவன் தன்னை மெய்யறிவுடையவன் என்று கூறிக்கொள்ள முடியாது என்பதே குறள் காட்டும் வாழ்க்கை நெறி. இதை மறந்துவிட்டு எவற்றை எல்லாமோ நாம் இன்று அறிவு' என்று சொல்லிக்கொண்டு திரிகிறோம். 'மற்றோர் உயிரின் நோயைத் தன்நோய் போலப் போற்றி அனுபவிக்காவிட்டால் அறிவு பெற்றதனால் பயன் என்ன? என்னும் பொருளில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''அறிவினால் ஆகுவது உண்டோ? பிறிதின் நோய்
தன்னோய்போல் போற்றாக்கடை''

என்று கூறுகிறது குறள். இதை குறள் கண்ட வாழ்வு என்னும் நூலில் திரு.அ.ச. ஞானசம்பந்தன் விளக்கியுள்ளார்.

''விருந்து புறத்ததாற் தானுண்டல் சாவா
மருந்தெனினும் வேண்டற்பாற் றன்று''

என்ற குறளும்

''பகுத்து உண்டு, பல்உயிர் ஓம்புதல் நூலோர்
தொகுத்தவற்றுள் எல்லாம் தலை''

என்ற குறளும் இயம்புவதை நோக்குவோம். விருந்தினராக வந்தவர் வீட்டின் புறத்தே இருக்கத் தான் மட்டும் உண்பது சாவாமருந்தாகிய அமிழ்தமே ஆனாலும் அது விரும்பத்தக்கது அன்று என்று முதலில் சொன்னவர், தான் உண்ண இருப்பதனைப் பசித்த உயிர்கள் அனைத்திற்கும் பகுத்துக்கொடுத்து உண்ணச்செய்து அனைத்து உயிர்களையும் காத்தல் அறநூலுடையார் தொகுத்த அறங்கள் எல்லாவற்றிலும் தலையாயதாகும். என்று அடுத்த குறளில் சொல்லியுள்ளார். பகிர்ந்து உண்ணல் என்னும் பொதுமைக்கருத்து இங்கு வேரூன்றியுள்ளதை அவதானிக்கலாம்.

''இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த
வகுத்தலும் வல்ல தரசு''

முறையாக நிதி ஆதாரங்களை வகுத்து, அரசாங்கக் கருவூலத்திற்கான வருவாயைப் பெருக்கி, அதைப் பாதுகாத்துத் திட்டமிட்டுச் செலவிடுவதுதான் திறமையான நல்லாட்சிக்கு இலக்கணமாகும் என்று சொல்லப்பட்டுள்ளது. திட்டமிட்டுச் செயற்படுவது என்பது பொதுவுடமைக் கருத்தாகவே இங்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.

''காக்கை கரவா கரைந்து உண்ணும் ஆக்கமும்
அன்னநீ ரார்க்கே உள''

தனக்குக் கிடைத்ததை மறைக்காமல் தனது சுற்றத்தைக் கூவி அழைத்துக் காக்கை உண்ணும். அந்தக்குணம் உடையவர்களுக்கு மட்டுமே உலகில் உயர்வு உண்டு.

''தெய்வத்தான் ஆகாது எனினும் முயற்சிதன்
மெய்வருந்தக் கூலி தரும்''

கடவுளே என்று கூவி அழைப்பதால் நடக்காத காரியம் ஒருவர் முயற்சியுடன் உழைக்கும்போது அந்த உழைப்புக்கேற்ற வெற்றியைத் தரும். உழைப்பின் பெருமை இக்குறளில் உணர்த்தப்பட்டுள்ளது. அதாவது உற்பத்தியின் முக்கியத்துவம் இங்கு கூறப்பட்டுள்ளது. திருவள்ளுவர் தந்த அநேகமான குறள்கள் சமுதாய நன்மை நோக்கிய அர்த்தமுள்ள பொதுமைக்கருத்துக்களை தாங்கியிருப்பதை அவதானிக்க முடிகிறது. ■

## வாழ்க்கை

**வாழ்க்கை என்பது ஓர் அனுபவம். ஆளுக்கு ஆள் மாறுபடும். சுகமோ, துக்கமோ அனுபவம் நம்மைப் பலப்படுத்துகின்றது; காயப்படுத்துகின்றது; சிரிக்க வைக்கின்றது. முடிவில் இதில் எது வாழ்க்கை என்று சிந்திக்க வைக்கின்றது.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொய்மையாளரைப் பாடாதீர்

விழிசிட்டி
கா. சுப்பிரமணியம்

புலவர்கள் புரவலரைப் புகழ்ந்து பாடிப்பரிசு பெறுவது அந்நாள் இயற்கை. திருமகளும், கலைமகளும் மாமிமருமகள் உறவென்றும் அதனால்தான் செல்வமும் கல்வியும் கூட வராதென்பர். உண்மையில் சத்திமுத்தப்புலவரின் வாழ்க்கையை அறியும்போது இருக்க நல்லிடமும் உடுக்க ஆடையும் இன்றி அலைந்தார் என்றும் அறியக்கிடக்கிறது. அவர் குமண வள்ளலிடம் வந்தபோது

*''ஆடெரி படர்ந்த கோடு யர் அடுப்பில்*
*ஆம்பி பூப்பத் தேம் பசியுழல*
*இல்லிதூர்ந்த பொல்லாவறுமுலை*
*சுவை தொறுஞ் சுவை தொறும் பால்காணாமற்*
*குழவி தாய் முகம் நோக்க மனைவியென் முகம் நோக்க யானும்*
*உன் முகம் நோக்கி வந்தனன் குமணா''*

என்ற பாடல் மூலம் ''அடுப்பில் காளான் முளைத்துவிட்டது. பால் குடிக்கும் குழந்தைக்கு பாலில்லாது அடிக்கடி சுவைத்து சுவைத்து தாய்முகத்தைப் பிள்ளை பார்க்கிறது. அவளோ என் முகத்தைப் பார்க்கிறாள். நான் உன்முகம் நோக்கி வந்தேன்'' என்று குமணவள்ளலிடம் எடுத்துரைக்கும் சொற்கள் இன்றும் எம் கண்களைப் பனிக்க வைக்கின்றன.

புலவர்களை ஆதரித்த வள்ளல்கள் பலர், கம்பரை யாதரித்த சடையப்ப வள்ளலும், புகழேந்திப் புலவரை ஆதரித்த சந்திரன் சுவர்க்கியும் யாவரும் அறிந்த வள்ளல்கள்.

அதேவேளை புலவர்களுக்கு ஈயாத உலோபிகளும் இருக்கத்தான் செய்கிறார்கள். ஒருமுறை இப்படியான உலோபிகளுடைய வீட்டில் இருந்து பொருள் ஏதும் பெறாது வாடிய முகத்துடன் புலவர்கள் வெளியே வந்து கொண்டிருந்தார்கள். அவர்களை எதிர்கொண்டார் சுந்தரமூர்த்தி நாயனாரவர்கள். அவரோ இறைவனைப்பாடி பொன்பெற்றவர் அல்லவா? அப்புலவர்களை நோக்கி

*''தம்மையே புகழ்ந்திச்சை பேசினுஞ் சார்விலுந் தொண்டர் தருகிலாப்*
*பொய்மை யாளரைப் பாடாதே எந்தை புகலூர் பாடுமின் புலவீர்காள்*
*இம்மையே தரும் சோறும் கூறையும் ஏத்தலாம் இடர்கெடலும் ஆம்*
*அம்மையே சிவலோகம் ஆள்வதற்கு யாதும் ஐயுறவில்லையே''*

என்ற தேவாரத்தைப்பாடி

''தம்மையே மிகப்புகழ்ந்து இச்சகமாகப் பேசினாலும், எப்போதும் அவர்களை அடுத்திருந்தாலும், உண்மையான தொண்டருக்கு சிறிதும் தரமாட்டாத அதாவது எச்சிற்கையால் கூட காக்கை ஓட்டாத உலோபித்தன்மையுடைய பொய்மையாளரைப் பற்றிப் பாடாமல் திருப்புகலூரில் வாழும் எங்கள் அப்பனைப் பணிந்து பாடினால் இப்பிறப்பிலே வேண்டுவனவாகிய உணவும் உடையும் தருவது மாத்திரமன்றி, அவனைத் துதித்த பலனும் சேரும். அதனால் துன்பங்களை போக்குதலும் இலகுவாகும். அத்துடன் மறுமையிலே சிவயோகத்தை அவனுடைய அருளால் உரிமையுடன் ஆளுவதற்குக்கூடச் சந்தேகமில்லை'' என்று புலவர்களை விளித்துக் கூறுகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதே கருத்தை திருவாய்மொழியில் நம்வாழ்வாரின் பாடலில்,

*''வம்மின் புலவீர்! நும்மெய் வருந்திக்கை செய்து உய்மினோ*
*இம்மன்னுலகில் செல்வர் இப்போதில்லை நோக்கினோம்*
*நும்இன் கவிகொண்டு நும் நும் இட்டதெய்வமேத்தினால்*
*செம்மின் சுடர் முடி என் திருமாலுக்குச் சேருமே''*


''வாருங்கள் நல்லதை அறியும் புலவர்களே! வயிறு பிழைக்க வழிவேண்டாவோ என் பீராகில் உமது உடலை வருத்தியும், கைத்தொழில் செய்தும் மானமுடன் பிழையுங்கள். நிலையற்ற மனிதர்களைப் புகழ்ந்தால் அவர்களிடத்துக் கொடையும் இல்லை; புகழும் பொருந்தாது. உங்களது நன்மை கருதி இப்போது ஆராய்ந்து பார்த்தோம்; அப்படியான மனிதர் ஒருவருமில்லை. பின்னை செய்வது யாது? என்பீராகில் உமது இனிய கவிகளைக் கொண்டு உங்கள் உங்கள் இஷ்ட தெய்வங்களை புகழ்ந்து பாடினால் அது செம்மையான பேரொளியை உடைய திருமுடியை உடைய எனது இஷ்ட தெய்வமான பரம்பொருளுக்கே வந்து சேரும். எனவே அப்படி வாழ்த்தி இம்மைக்கும் மறுமைக்குமான செல்வத்தை அடைந்து இவ்வுலகில் சிறந்த வாழ்க்கையும் பின்னர் பிறவியில்லாப் பெருவாழ்வையும் பெற்று வாழலாம், அவனருளாலே'' என்று குறிப்பாக உணர்த்துகிறார்.

பக்தர்களில் சைவ, வைஷ்ணவம் போன்ற சமய பேதங்கள் கிடையாது. அவர்களிடம் வரும் வார்த்தை தெய்வாம்சமானவையே என்று சிவபத்தராகிய சுந்தரமூர்த்தி நாயனாரும் திருவாய்மொழி இயற்றிய வைஷ்ணவ ஆழ்வாரான நம்மாழ்வாரும் ஒன்றையே உணர்த்துவதைக் காணலாம்.

■

# பெண்ணினம்

ஜெ. தர்சிகா



பெண்ணினம் புனிதம் தான்;
திங்களை விஞ்சிய பிரகாசம் தான்.
சந்தன வேர்களின் சரித்திரம் தான்;
காற்றில் மிதக்கும் கற்பனை தான்.

மனத்தின் ஆழ அடுக்குகளில்
மறைந்திடும் உணர்வுகள் அறிவாருண்டோ?

குணத்தின் சீல நடப்புகளில்,
நிறைந்திடும் அதிர்வுகள் நினைப்பாருண்டோ?
அன்பில் பண்பில் நிகரில்லாள்,
அடையும் வேதனைகள் குறைப்பாருண்டோ?

மென்மையான மேனிக்குள்ளே
மூளும் அனலை மூடிக்கொண்டு,
பெண்மை நலங்களைப் பேசுவாரின்
உண்மை உருவை மறைந்தேதான்
நன்மை செய்யும் நினைப்புடனே
நாளும் நாளும் நடிக்கின்றோம்.

வீட்டுக்குள்ளே சிறைவைப்பார்;
வீதியிலே பொறி வைப்பார்;
கூட்டுக்குள் தடைசெய்வார்;
கோபுரத்தே சிலை செய்வார்,

பாட்டுக்குள் நிறை சொல்வார்;
பாவையர் துயர் பகர்வார் யார்;
நாட்டுக்குள் நடப்பவை கண்டும்
நமக்கென்ன என்பார் நன்றாமோ?

விதையும் விளைவும் பெண்ணே! பெண்ணே!!
வித்தும் விருட்சமும் பெண்ணே! பெண்ணே!!
கதையும் கவியும் பெண்ணே! பெண்ணே!!
காணும் கனவும் பெண்ணே! பெண்ணே!!

வா வா பெண்ணே வலிதீர,
எடுப்பாய் ஏடு எழுத்தாணி
தீயாய்பெண்மை சுடர்கையிலே,
தீமை என்ன உனைச் செய்யும்?




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடந்த கதை

# மீண்டும் "விதி" உயிராயத்தா?

நயினாதீவை நோக்கி ''லோஞ்ச்'' (இயந்திரவள்ளம்) மூவின மக்களுடனும் சென்று கொண்டிருக்கிறது. வள்ளம் நிறையச் சனங்கள். நடுக்கடலினுள் செல்லும்போது காற்று பலமாக வீசத் தொடங்கியது. அலைகள் பெரிதாக எழுந்து ஆர்ப்பரிக்கின்றன. லோஞ்ச் ஆட்டம் காணத் தொடங்கிவிட்டது. சனங்களின் முகங்களில் பயம் குடிகொண்டது. ''இதற்குள் ஒன்று நடந்தால் எம் கதி என்னாவது? நயினைத் தாயே எம்மைக் காப்பாற்று'' என்று வாய்விட்டு கூவி அழுகிறாள் ஒரு பெண்.



இப்படித்தானே அன்றொரு நாள் அவளும் என் கதி என்ன? என்று கலங்கி நின்றாள். அவள்தான் மாலா. கடந்தகால சிந்தனைகள் பின்னோக்கிச் சிறகடிக்க மெய்சிலிர்த்துப் போயிருந்தாள்.

* * *

திருமலையில் பணிபுரியும் வங்கியாளர் அவள். 1985ஆம் ஆண்டின் ஒருநாள். இரவில் எங்கோ குண்டுச் சத்தங்கள் கேட்டுக்கொண்டே யிருந்ததால் அவள் தூக்கம் கெட்டு விட்டது. விடிய விடிய பயத்துடன் விழித்திருந்துவிட்டு காலையில் வேலைக்குச் செல்ல ஆயத்தமானாள். இப்போது குண்டுச் சத்தமும் வெடிச் சத்தமும் கிட்ட கிட்ட கேட்க ஆரம்பித்துவிட்டன. உள்துறைமுகவீதியிலுள்ள அலுவலகத்துக்குச் சென்று கொண்டிருந்தபோது ஒருவர் சிங்களத்தில் சொன்னார், 'நோனா விரைவாக அலுவலகத்திற்குச் சென்று உள்ளேயே இருங்கள். இங்கு கலவரம் வெடித்து விட்டது' என்று. அவருக்கு நன்றி கூறி அலுவலகம் சென்றாள். அங்கு எல்லோரும் பயந்து கொண்டு வெளியில் விறாந்தையில் நிற்கிறார்கள். முகாமையாளர் வராததால் கதவு திறக்கப்படவில்லை. அரை மணித்தியாலங்களின் பின்னர் முகாமையாளர் பதட்டத்துடன் ஓடி வந்தார். அவர் சொன்னார் ''திருமலையில் குழப்பம் தொடங்கி விட்டது. எங்கும் குண்டு வெடிக்கிறது. சனங்கள் அநேகர் செத்தும் காயப்பட்டுமுள்ளார்கள். எனது வீடும் சேதமடைந்துள்ளது. பாதுகாப்புத் தேடி நானும் வேறு இடம் சென்றுள்ளேன். நீங்களும் உங்களைப் பாதுகாத்துக் கொள்ளுங்கள். ''மாலா, உமக்கு இங்கு பாதுகாப்பு இல்லை. நீரும் இவர்களுடன் மூதூர் சென்று உங்கள் விடுதியில் தங்கும். கலவரம் அடங்கிய பின்னர் திரும்பி வாரும்'', என்று கூறிவிட்டு விரைவாக சென்று விட்டார். அவருக்கு அவர் குடும்பத்தை காப்பாற்றும் அவசரம்.

கூட்டத்தோடு கூட்டமாக ஷலோஞ்ச்' ஏறுவதற்காக துறைமுகத்துக்குச் சென்றால் அங்கு தமது உயிரைக் காப்பாற்றிக் கொள்வதற்காக மூவின மக்களும் இருநூறு பேருக்கு மேல் நின்றார்கள். எல்லோர் முகத்திலும் பயம் குடிகொண்டிருந்தது. ஷதிமர்' என ஒரு வாகனம் நிறைய காடையர்கள் தமது பொல்லு, ஆயுதங்கள் சகிதம் துறைமுக வாசலில் வந்து குதித்தார்கள். துறைமுக பொலிஸ் அதிகாரி அதிரடி நடவடிக்கையாக, வானத்தை நோக்கி வேட்டுக்களைத் தீர்த்த வண்ணம், தனது படையினரையும் அவ்வாறே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழைத்துக் கொண்டு, வாசலை நோக்கி ஓடி வந்தவர்களை உட்புக விடாது விரட்டி அடித்து விட்டார். பயத்தால் உறைந்து நின்றவர்கள் எல்லோரும் 'உயிர் தப்பினோம்' என்று ஒரு கணம் மகிழ்ந்து லோஞ்சில் ஏறி மூதூர் பயணமானார்கள். திருகோணமலையில் இருந்து 15 கடல்மைல் தூரத்தில் இருக்கும் மூதூருக்குச் செல்ல பெருங்கடலைத் தாண்டிச் செல்ல வேண்டும். அவ்வாறு செல்லும் வழியில் ''பாதாள மலை'' என்னும் வெளிச்சவீட்டுடன் கூடிய மலை ஒன்று உள்ளது. அவ்விடத்துக் கடலின் ஆழத்தை - கடல்வள ஆராய்ச்சியாளர் களாலும் அறிந்து காணமுடியாத காரணத்தால் அந்த மலையை பாதாள மலை என்று அழைப்பதுண்டு. இவர்கள் பயணித்த வள்ளம் அந்த இடத்தை அடைந்போது பழுதடைந்து விட்டது. சனங்களின் கதி அதோ கதியாகிவிட்டது. தரையில் தப்பி கடலில் இறக்கப்போகிறோமே என்று பயந்து எல்லோரும் தெய்வங்களை வேண்டத் தொடங்கிவிட்டார்கள். வள்ளமும் தத்தளிக்கத் தொடங்கிவிட்டது. கண்ணுக்கெட்டிய தூரம் வரை வேறு வள்ளங் களையோ படகுகளையோ காணவில்லை.

கடற் படையினரும் பொலீசாரும் காயப்பட்டவர்களைத் தமது கப்பல்களில் ஏற்றிக்கொண்டு துறைமுகத்தை நோக்கி விரைகிறார்களேயொழிய இவர்களைக் காப்பாற்ற முன்வரவில்லை. பீரங்கிக் கப்பல்கள் பீரங்கி வேட்டுகளைத் தீர்த்துக்கொண்டு ஆழ்கடலில் செல்கின்றன. ஆனால் பீரங்கிகளை இவர்கள் பக்கம் திருப்பவில்லை. அந்த மட்டில் ஷதப்பினோம்' என கடவுளுக்கு நன்றி கூறிக் காத்திருந்தார்கள். நேரம் போய்க்கொண்டே யிருக்கின்றது. இவர்களுக்கு இறப்பு நெருங்கிவிட்டது. வள்ளமும் கிண்ணியாவை நோக்கி அடிபட்டுச் செல்கிறது.

இவ்வேளையில் வெகு தூரத்தில் ஒரு சிறு மீன்பிடிப்படகு மூதூரை நோக்கிச் செல்வது தெரிந்தது. எல்லோரும் பார்த்துக் கொண்டிருக்கும் போதே திரும்பிய படகு இவர்களை நோக்கி வந்தது. அதிலும் இவர்களைப்போலப் பலர் இருப்பதை அவதானிக்க முடிந்தது. இவர்களுடன் இருந்த போதகர் கூறினார் ''அந்த மக்களும் எம்மைப்போல் உயிர் தப்பி ஓடுபவர்கள் போலத்தான் தெரிகிறது. பெண்கள் வீட்டு உடுப்புடனும் ஆண்கள் மேல்சட்டை இல்லாமலும் இருக்கிறார்கள். யாருமே எம்மைக் காப்பாற்ற முன்வராதபோது அவர்கள் எம்மைக்காப்பாற்ற வருகிறார்கள். நாம் சிறிது பணம் சேகரித்து அவர்களுக்கு வழங்குவதைத் தவிர அவர்கள் செய்யப்போகும் பேருதவிக்கு நாம் வேறு கைம்மாறு செய்ய முடியாது'' என்று கூறிய உடனேயே எல்லோரும் தம்மாலான பங்களிப்பினை போதகரிடம் வழங்கினார்கள். படகு சிறிது தூரம் அருகில் வந்ததும் தமது படகிலிருந்த கயிறுகளை எறிந்து இரண்டு படகுகளையும் இணைத்துக்கொண்டார்கள். மெல்ல மெல்லப் பயணம் தொடர்ந்தது. சுமார் ஒரு மணித்தியாலத்தில் செல்லவேண்டிய கடல்பயணம் ஐந்து மணித்தியாலங்களின் பின் முடிவடைந்தது. நிம்மதிப் பெருமூச்சுடன் மூதூர் இறங்கு துறையை அடைந்தபோது தான் தெரிந்தது, அந்தப்படகில் 2 இறந்த உடல்களும் நான்கு காயப்பட்ட மனிதர்களும் இருப்பது. கரையில் நின்றவர்கள் ஓடிவந்து காயப் பட்டவர்களைத் தூக்கிச் சென்று ''பஸ்'' வண்டியில் ஏற்றுவதிலும் இறந்த உடல்களைச் சுமந்து செல்லுவதிலும் அக்கறையுடன் செயற்பட்டார்கள். இறந்தவர்களின் தகனத்திற் காகவும் காயப்பட்டவர்களுக்கு வைத்திய உதவிக்காகவும் போதகர் பணத்துடன் அவர்களுடன் சென்றார். உயிர் தப்பி வந்த சனங்களை ஆதரிக்க மூதூர் மக்கள் தயாராகக் காத்திருந்தார்கள். எல்லோரும் பஸ்களில் ஏறிக்கொண்டார்கள். அவர்களுடன் மாலாவும் ஏறி தனது நண்பிகள் தங்கியிருக்கும் விடுதியை நோக்கிப் பயணித்தாள்.

* * *

சனங்களின் ஆரவாரத்தால் சிந்தனை தடைப்படுகின்றது. நிமிர்ந்து பார்த்தால் நயினைத்தாயின் கோபுரம் தெரிகின்றதுளூ இன்றும் மக்களோடு மக்களாக லோஞ்சை விட்டு இறங்கி கோயிலை நோக்கி விரைகிறாள்.

■



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூலகம்

## நேர்காணல்:

## “சாகித்ய ரத்தினம்”

# பேராசிரியர் சபா. ஜெயராசா



நேர்கண்டவர்:

**கலாபூஷணம் சு. துரைசிங்கம்**

“வாழும் பொழுதே நல்லனவற்றைச் செய்ய வேண்டும் அதனால் மக்கள் அறிவு ஜீவிகளாய் நீதி நெறியுடன் வாழ வேண்டும் என்றும், சுரண்டும் வர்க்கத்தினரைத் தடுத்து சுரண்டப்படுவோர்க்கு நல்ல வழியைக் காட்ட வேண்டும் என்று பாடுபடுபவர்கள் எப்பொழுதும் உலகத்தார் உள்ளமதில் இருப்பவர்களே.”

இந்த வகையில் நல்வழியை எழுத்துமூலமும் வாழ்வு மூலமும் காட்டுபவர் பேராசிரியர். சபா ஜெயராசா அவர்கள். இவர் சிறுவர்களுக்கும் பெரியவர்களுக்கும் ஏற்ற வகையில் மார்க்சீய கோட்பாட்டில் நின்று குறிப்பாக உளவியலைப் பேணி கல்விசார்ந்த நூல்களையும் ஆக்க இலக்கிய நூல்களையும் தந்துகொண்டிருப்பவர். இதனடிப்படையில் இற்றைவரை எழுபதுக்கு மேற்பட்ட நூல்களைத் தந்துள்ளார். இன்னும் எழுதிக்கொண்டேயிருக்கிறார்.

இவரது இலக்கிய நோக்கையும் படைப்பாற்றலையும் அறிந்த அரசு, குறிப்பாகக் கலாச்சார அமைச்சு “சாகித்திய இரத்தினம்” எனும் உயர்விருதை அளித்துக் கௌரவித்தது. இதனால் இணுவிலுடன் வலிகாமம் தெற்கு பிரதேசமும் ஏன் தமிழ்பேசும் பிரதேசங்கள் யாவும் பெருமை பெற்றது.

புகழ் பூத்த கலைஞர்களும் கல்விமான்களும் வாழ்ந்த, வாழ்கின்ற இணுவிலில் சபாரத்தினம் தம்பதியினருக்கு மகனாகப் பிறந்த இவர் ஆரம்ப இடைநிலைக்கல்விகளை முறையே இணுவில் மத்திய கல்லூரி, கொக்குவில் இந்துக்கல்லூரி, யாழ் மத்திய கல்லூரி ஆகியவற்றில் தொடர்ந்ததுடன் பல்கலைக்கழகத்தின் கலைப்பட்டதாரியாகி கல்லூரி ஆசிரியரானார்.

பல்கலைக்கழகத்தில் பயின்ற வேளை பேராசிரியர்களான க. கணபதிப்பிள்ளை, ப. சந்திரசேகரம் சு. வித்தியானந்தன், க. கைலாசபதி, கா. சிவத்தம்பி போன்றவர்களால் வழிநடத்தப்பட்டவர். பல்கலைக்கழகம் புகுமுகத்திற்கு ஆயத்தமான வேளையில், சிருஷ்டி இலக்கியத்துறையில் ஈடுபட்டதுடன் யாழ் இளம் எழுத்தாளர் சங்கத்தினை கலாபரமேஸ்வரன், டாக்டர் சு. மகாலிங்கம், சு. துரைசிங்கம், ச. வே. பஞ்சாட்சரம் மற்றும் பலருடன் இணைந்து உருவாக்கி, நாடுதழுவிய இலக்கியப்போட்டிகள் பலவற்றை நடத்தினார். இன்று பிரபலம் பெற்றுள்ள எழுத்தாளர்களில் பலர் யாழ். இளம் எழுத்தாளர்கள் சங்கத்தில் உருவானவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இன்று பேராசிரியருக்குப் பல விருதுகள் கிடைத்துள்ளன. இவருக்கு விசேடமாக கிடைத்த பல்கலைக்கழக “இலக்கிய கலாநிதி” விருதும் “வடமாகாண ஆளுநர்” விருதும், இலங்கை அரசின் “சாகித்திய ரத்தினம்” விருதும் குறிப்பிடத்தக்கன.

அண்மையில் இவருக்குச் சாகித்திய ரத்தினம் விருது கிடைத்தமையையொட்டி “வெள்ளிமலை” சஞ்சிகைக்காக நேர்கண்டபோது கூறியவற்றைப் பார்ப்போம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**கல்வி, கலை, இலக்கியம், விமர்சனம், மொழிபெயர்ப்பு என்று பல்துறைப் பரிமாணங்களுடன் இன்றும் எம் மத்தியில் ஆளுமையுடன் பிரகாசித்துக் கொண்டிருக்கும் பேராசிரியர் சபா ஜெயராசா அவர்கள் சீரும் சிறப்புடனும் நெடுநாள் வாழ்ந்து சமுதாய மறுமலர்ச்சிக்குத் தனது பங்களிப்பைத் தொடர்ந்து நல்க 'வெள்ளிமலை' வாழ்த்துகின்றது.**

***வெள்ளிமலை இதழுக்காக பேராசிரியர் சபா. ஜெயராசாவுடன் நிகழ்த்திய நேர்காணல்***

**கேள்வி: பேராசிரியர் அவர்களே நீங்கள் மார்க்சிய நோக்கில் இலக்கியங்களைத் தரிசிப்பதற்குரிய காரணம் என்ன?**

பதில்: உலகெங்கும் நிகழும் ஒடுக்கு முறைகளுக்கும் சுரண்டலுக்குமுரிய விடிவையும் தருக்கத்தையும் மார்க்சியமே தெளிவுபடுத்தியுள்ளது. மார்க்சிய எதிர்ப்பாளர்கள் அதனைத் திரிபுபடுத்திக் கூறும் நிலையே தமிழ் இலக்கிய உலகிற் காணப்படுகின்றது. அவர்கள் சுரண்டலுக்கும் ஒடுக்குமுறைக்கும் துணை செய்பவர்களாவேயுள்ளனர் அந்நிலையில் மார்க்சிய நோக்கை முன்னெடுத்தல் ஓர் அறக்கடமையாகின்றது.

**கேள்வி: வளர்ந்தோர் இலக்கியங்களை மார்க்சிய நோக்கில் அணுகலாம். சிறுவர் இலக்கியங்களில் அதனை எவ்வாறு கையாளலாம்?**

பதில்: மார்க்சியம் அனைத்துத் துறைகளையும் உள்ளடக்கிய இயங்கியல் அணுகுமுறையைக் கொண்டது. மார்க்சிய மரபில் வந்த உளவியலாளர் வைகோட்சி முன்வைத்த "அண்மைவிருத்திவலயம்" என்ற கருத்து சிறுவர் கல்வியிலும், கலையாக்கங்களிலும் பெரும் செல்வாக்கை ஏற்படுத்தியுள்ளது. மேலைத்தேய அறிகை உளவியலாளரும் அந்தக் கருத்தின் முக்கியத்துவத்தை முழுமையாக ஏற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. சிறுவர் இலக்கியத்தைக் கைக்கொள்வதில் அந்தக்கருத்து அதிக முக்கியத்துவம் பெறுகின்றது.

**கேள்வி: உளவியல் அணுகுமுறைகளை சிறுவர் இலக்கியங்களில் பயன்படுத்த வேண்டும் என்பதைத் தாங்கள் வலியுறுத்தி வருகின்றீர்கள். எவ்வளவு தூரம் அது சாத்தியப்படுகின்றது?**

பதில்: இலங்கையிலே சிறுவர் இலக்கியம் என்பது "குழந்தை இலக்கியம்" என்றே கருதப்படுகின்றது. குழந்தை வளர்ச்சியைத் தொடர்ந்து நிகழும் பருவங்களுக்குரிய இலக்கிய ஆக்கங்களிலே எமது எழுத்தாளர்கள் இன்னமும் போதிய கவனம் செலுத்தவில்லை.

**கேள்வி: மார்க்சிய நோக்கில் இலக்கியம் படைக்கும் செயற்பாடு குறைவடைந்து வருகின்றது என்று கூற முடியுமா?**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதில்: மார்க்சியத்தை ஒரு வாய்பாடாகப் பார்க்கும் நிலையிலேதான் அந்தக்கேள்வி எழும். இன்றைய உலகச்சூழலில் நிகழும் பரந்துபட்ட சுரண்டற் செயற்பாடுகளும் இனத்துவ ஒடுக்கு முறைகளும், வறுமைக்கோட்டின் கீழ் வாழ்வோரின் எண்ணிக்கைப் பெருக்கமும் "மீண்டும் மார்க்சுக்குச் செல்லல்" என்ற செயற்பாட்டையே வலிதாக்கி வருகின்றன.

**கேள்வி: "தமிழ்ப்பாட நூல்களில் உளவியற் கோட்பாடுகளுக்கு மாறானவை இடம்பெறுவதாகச் சொல்லப்படுகின்றதே" அதுபற்றிய உங்கள் கருத்து என்ன?**

பதில்: பாடநூலாக்கம் என்பது மிகவும் பெரிய விடயம். மாணவரின் உள வளர்ச்சி மட்டங்கள், மொழிவளர்ச்சிப் படிநிலைகள், மனவெழுச்சி முகாமைக் கோலங்கள், தனியாள் வேறுபாடுகள், மீத்திறன் நிலை, மெல்லக்கற்கும் நிலை, மாற்றுவலுநிலை முதலிய பலப் பல பரிமாணங்களைக் கருத்திற் கொண்டு "இதவடிவ நிலையில்" பாடநூலாக்கம் மேற்கொள்ளப்படல் வேண்டும். வகை மாதிரி எடுப்பின் அடிப்படையான பரிசோதனைகளைத் தெரிந்தெடுக்கப்பட்ட பாடசாலைகளில் மேற்கொண்டு அதன் அடிப்படையாகவே பாடநூலாக்கத்தை மேற்கொள்ளல் வேண்டும். அவ்வாறு எழுதப்படுகின்றதா என்பது கேள்விக்குறியாகின்றது.

**கேள்வி: வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் உதவியுடன் வெளிவரும் "வெள்ளிமலை" இதழ் பற்றிய உங்களின் கருத்து?**

பதில்: சமகால உலகம் தர மேம்பாட்டினை அனைத்துத் துறைகளிலும் வலியுறுத்துகின்றது. வெள்ளிமலையும் தரத்தை நோக்கிய நகர்வுப்பாதையில் உள்ளது.

*விருதுகளுக்கு வாழ்த்துக்களையும் நேர்காணலுக்கு நன்றிகளையும் கூறி விடைபெற்றேன்.*




**ஸ்கந்தவரோதயா பதில் அதிபராக இருந்த கே. புவனேந்திரநாதன், கலாபூஷணம் சு. துரைசிங்கம் அவர்களுடன் சபா ஜெயராசா தம்பதியர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்தையினுள் இருந்த தேநீர்க்கடைகளைப்பற்றி ஏற்கனவே எழுதப்பட்டது. இதில் உட்சந்தைக் கடைகளில் பிரபல்யமான கடைகள் காண்டீபன்கடை, பொட்டுக்கார முத்தையா கடை, பெருமாள்கடை, பொட்டுக்காரப் பொன்னம்பலம் கடை, மரகதலிங்கம் கடை, ஏழாலை கார்த்திகேசு கடை என்பனவாகும். இக்கடைகள் எல்லாம் பலசரக்குப் பெட்டிக்கடைகளாகும். காண்டீபன் கடைக்குத்தான் வியாபாரம் பெரியளவில் நடைபெற்றது. அடுத்தது பெருமாள்கடைக்கும் நல்ல வியாபாரம் நடைபெற்றது. இவர்கள் இந்தியத்தமிழர்கள். இவர்கள் இருவரும் பின்னர் தென்னிந்தியாவிலுள்ள தங்கள் சொந்த இடங்களுக்குச் சென்றுவிட்டனர். இதன்பின் பொட்டுக்காரப் பொன்னம்பலத்துக்கும் பொட்டுக்கார முத்தையாவுக்கும் நல்ல வியாபாரம் நடைபெற்றது. ஆனால் பொட்டுக்காரப் பொன்னம்பலம் இவர் சுன்னாகத்தைச் சேர்ந்தவர். ஓரளவுக்குத் தன் வியாபாரத்தைப் பெருப்பிக்க எத்தனித்த வேளையில் நோய் காரணமாக இறந்துவிட்டார். பின் இவர் மகன் நடராசா கடையை நடாத்தினார். பின்பு ஏற்பட்ட போரில் இவர்கள் கடைகள் உடைக்கப்பட்டன. நயினாதீவைச் சேர்ந்த பொட்டுக்கார முத்தையாவுக்கு ஓரளவுக்குச் சுமாரான வியாபாரம் நடைபெற்றது. ஆனால் இவர் ஏனோ தனது வியாபாரத்தைப் பெருப்பிக்க எண்ணவில்லை. இவர் ஓர் சமயவாதியும்கூட. அமைதியான போக்கு. எந்த நேரமும் சந்தோஷமாகவும், புன்சிரிப்புடனும், திருப்தியுடனும் தனது தொழிலைச் செய்து வந்தார். இவரின் வாயிலிருந்து ஒருபோதும் சுடுசொல் வந்தது கிடையாது.யாருடனும் கோபித்துப் பேசியதும் கிடையாது. எல்லோருடனும் மிகவும் சந்தோஷமாகக் கதைத்துப் பழகுவார். எல்லோராலும் நன்கு மதிக்கப்பட்டவர். இவரின் மகன் கதிர்காமநாதன் ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் பயின்றவர். இப்போது கொழும்பில் வாழும் இவர் கொழும்புத் தமிழ்ச்சங்கத்தின் தலைவராக இருக்கிறார்.

ஏழாலைக் கார்த்திகேசுவின் கடை சந்தையின் வடக்குப் பக்கத்தில் இருந்தது. இவருக்குச் சுமாரான வியாபாரமே நடைபெற்றது. ஆசிரியர்களும் மாணவர்களும் இவரின் பிரதான வாடிக்கையாளர்கள். ஏனெனில் இவரின் பேச்சு நல்ல சுவையாகத் தத்துவ விளக்கங்களுடன் இருக்கும். நல்ல புத்தகங்களை வாசித்துத் தன் அறிவையும், ஆட்களுடன் பேசும் கலையையும் நன்கு கையாண்டவர். இவரின் பேச்சு ஆசிரியர்களையும், மாணவர்களையும் கவர்ந்திழுத்தது. மரகதலிங்கத்துக்கு நல்ல வியாபாரம் நடந்தது. இவரின் வாடிக்கையாளர்கள் அரசாங்க இலாகாக்களும், அரச உத்தியோகத்தர்களும், பெரிய மனிதர்களுமாவார். இவர் நன்கு படித்தவர்; அரச சேவையில் வேலை பார்த்துக்கொண்டிருந்தவர். தகப்பனார் நோய்வாய்ப்பட்டதினாலும், தாயார் இறந்ததினாலும், தகப்பனின் கடையைப் பராமரிக்க வேண்டிய காரணத்தினாலும் அரசாங்க உத்தியோகத்தைத் துறந்து தகப்பனாருடைய கடையை நடத்தி வந்தார். தகப்பனாருடைய கடை சந்தையின்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள் நடுப்பகுதியில் இருந்தது. பாய்கள், ஓலைப்பெட்டிகள், பனையோலைப் பொருட்கள், பனம் பொருட்கள் விற்கும் பெரிய கடையாக இருந்தது. நல்ல வருமானம் உடைய கடையாக இருந்தது. பின்னர் நடந்த கலவரத்தில் இவரின் கடையும் எரிக்கப்பட்டது. அதன் பின்புதான் இவர் சந்தையின் கிழக்கு எல்லைக் கடையைத் திறந்து வியாபாரம் செய்தார். இவர் நன்றாக ஆங்கிலம் பேசுவார். ஆங்கிலப்புலமை மிக்கவர். இதனால் பெரிய அரச உத்தியோகத்தர்கள், பிறக்டர்கள், அப்புக்காத்துமார், மருத்துவர்கள் முதலியோர் இவரது வாடிக்கையாளர்களாக இருந்தார்கள்.

அத்துடன் நல்ல சிநேகிதர்களாகவும் இருந்தனர். இவர் ஒரு சமாதான நீதவானும் மரண விசாரணை அதிகாரியுமாவார். அத்துடன் சுன்னாகம் பட்டினசபை அங்கத்தவராகவும் இருந்தார். சிலகாலம் பட்டினசபை உபதலைவராகவும் இருந்தார். சில வேளைகளில் கோபக்காரராக இருந்தாலும் இரக்கம் உடையவர். எல்லோருக்கும் உதவி செய்யும் மனப்பான்மையுடையவர். ஆங்கிலத்திலும் தமிழிலும் நன்றாக விவாதிப்பார். இவரின் கடை சில நேரங்களில் ஆங்கில விவாத மேடையாகவும் மாறும். இவருக்கு உதவியாக இவரின் தம்பியாகிய கதிர்காமத்தம்பியும் கடையில் நிற்பார். இவரும் நல்ல ஆங்கிலப்புலமையுள்ளவர். அழகாக ஆங்கிலம் பேசுவார். நன்றாக ஆங்கிலத்தில் தர்க்கம் செய்வார். கதிர்காமத்தம்பி தற்போது கொழும்பில் வசித்து வருகிறார்.

இப்போது இந்தக்கடைகள் ஒன்றும் இல்லை. சுன்னாகத்தை அழகுபடுத்திய கடைகளில் இவர்களின் கடைகளும் முக்கியமானவை. உள் சந்தைக் கடைகளில் சாந்தலிங்கம் கடையும் முக்கியமானது. இவருக்கும் நல்ல வியாபாரம் நடந்தது. பலரை வாடிக்கையாளராகக் கொண்டிருந்தார். தற்போது சுன்னாகத்தில் வீட்டில் இளைப்பாறிக்கொண்டிருக்கிறார்.

சந்தையின் கிழக்கு மூலையில் முனியப்பர் கோவில் ஒன்று இருக்கிறது. இதனைப் பலர் மேற்பார்வையும், பராமரிப்பும் செய்து நன்றாக நடாத்தி வந்தனர். கடைசியாக திரு பொன்னம்பலம் என்பவர் காலை மாலைப்பூசையும் செய்து பராமரித்து வந்தார். வெள்ளிக்கிழமைகளிலும், விசேட தினங்களிலும் கடைக்காரர்களாலும், தனிப்பட்டவர்களாலும் பொங்கல் பூசை முதலியன பிராமண ஐயா ஒருவரை நியமித்து கிரமமாக நடைபெறுகிறது. திரு பொன்னம்பலம் அவர்கள் இறந்தபின் அவர் தம்பி மகன் திரு குமாரவேல் J.P அவர்கள் இக்கோயிலை மேற்பார்வை செய்து வருகிறார். கோயில் புனருத்தாரணம் செய்யப்பட்டு மாபிளால் கட்டப்பட்டிருக்கிறது. இப்போது கடைக்காரர்களும் உள்ளூர் வாசிகளும் இக்கோயிலை ஆதரித்து வருகின்றனர்.

சந்தைக்கு உள் வடகிழக்கு மூலையில் ஒரு கிணறு இருக்கிறது. இக் கிணற்றைக் கட்டி இதனைப் பராமரிக்க இரண்டு கடைக்கிட்டங்கிகள் கட்டி அதன் வாடகை மூலம் வரும்பணத்தில் சம்பளமாக கிணற்றில் தண்ணீர் அள்ளி மக்களுக்கு வார்ப்பவருக்குச் சம்பளமாகவும், கிணற்றை வருடமொருமுறை கலக்கிச் சுத்தம் செய்யும் செலவுக்குமாக இப்பணம் பாவிக்கப்பட்டது. இக் கிணற்றை வெட்டியும், அதனைப் பராமரிக்க இரண்டு கடைகளையும் கட்டிப் புண்ணியமாக விட்டவர் மலயா நாட்டில் பள்ளிக்கூட இன்ஸ்பெக்டராக இருந்தவர் என்றும் பின்னர் இளைப்பாறிச் சுன்னாகம் வாசியாகிய அவர் சுன்னாகத்தில் வசித்து இறந்ததாகவும் அறிய வருகிறது. இவர் பெயர் தற்போது அறிய முடியவில்லை. அதனை அறிந்து அடுத்த கட்டுரையில் எழுதுவேன்.

முதன் முதலில் சுன்னாகத்தில் சனசமூகநிலையம் ஒன்று உருவாக்கப்பட்டது. இதனைத் தனது கடும் உழைப்பினாலும், மற்றவர்களின் ஒத்துழைப்புடன் உருவாக்கியவர் காலம் சென்ற திரு. மார்க்கண்டன் B.A, B.Sc ஆவார். இவர் நடேஸ்வராக் கல்லூரியில் ஆசிரியராகவும் உப அதிபராகவும் இருந்தவர். இவருக்கு ஒத்தாசையாக அன்று இருந்த படித்த இளைஞர்களும், ஆசிரியர்களும், அரசாங்க உத்தியோகத்தர்களும் சேர்ந்ததால் சுன்னாகம் வடக்கு சனசமூக நிலையம் உருவானது. இதற்கு நிர்வாகிகள் தெரிவு செய்யப்பட்டு மிக நன்றாக நடைபெற்று வந்தது. டெயிலி நியூஸ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆங்கிலப்பத்திரிகையும், தினகரன் தமிழ்ப்பத்திரிகையும் மக்கள் வாசிப்பதற்கு வாங்கிப் போடப்பட்டன. இதற்குரிய காசு Grant மூலம் உள்ளூர் அரசாங்கத்தினால் வழங்கப்பட்டது. நல்ல முறையில் இது இயங்கி வந்தது. முதலில் ஒரு கொட்டிலாகக் காங்கேசன்துறை வீதியில் றோட்டுக்கரையில் திரு. சர்வானந்தா அவர்கள் காணியில் தொடங்கப்பட்டது. வருடாவருடம் கிடுகினால் வேயப்பட்டது. இதில் தனது கடமையாக புதினப்பத்திரிகைகளை இந்திரபவன் கூல்பாரிலிருந்து காலை எடுத்து வந்து வாசிகசாலையில் மக்கள் பார்வைக்காகப் போட்டவர் திருகனகரத்தினம் ஆசிரியர் ஆவார். இவர் கிட்டத்தட்ட இருபது வருடங்களாக இந்தக் கடமையையும் வாசிகசாலைக் கட்டிட மேற்பார்வை பராமரிப்பு என்று மிகக்கடமையுணர்ச்சியுடன் இந்தச் சேவையைச் செய்தவர். அப்போது அவர் ஆசிரியராகவில்லை. தமயனாருக்குத் தோட்ட வேலையில் உதவி செய்து கொண்டிருந்தார். பின்பு பயிற்றப்பட்ட ஆசிரியரானார். அப்போது இவருக்கு ஆலோசகராக “இளையண்ணை” என்று எல்லோராலும் அழைக்கப்படுகின்ற திரு. இளையதம்பி (மரக்கூட்டுத்தாபனத்தில் வேலை) இருந்தார். திரு. கனகரத்தினம் ஆசிரியர் வேறு ஒருவரின் சொல்லையும் கேட்கமாட்டார். இவர் சொன்னால் அதை ஆமோதித்து ஏற்றுக்கொள்வார். கனகரத்தினம் ஆசிரியருக்கு உதவியாக காலம்சென்ற நித்தியானந்தம். (நித்தி), காலம் சென்ற ஏகாம்பரம், கனகரத்தினம் ஆசிரியரின் தம்பிமார், காலம்சென்ற தம்பித்துரை என்கிற சிவலோகநாதன், தற்போது கனடாவில் வசிக்கும் பாலு என்கிற பாலசுப்பிரமணியம், நான் மற்றும் பலர் இருந்தனர். பின்பு பணம் சேர்க்கப்பட்டு சீமேந்துக்கல்லினால் கட்டி கூரை ஓட்டினால் வேயப்பட்டது. பொதுக்கூட்டம் கூட்டப்பட்டு காங்கேசன்துறைச் சீமேந்துக் கூட்டுத்தாபனத்தில் வேலை செய்தவரும், ஊழியர் சங்கத்தின் தலைவருமான திரு. கணபதிப்பிள்ளை அவர்கள் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார். திரு. கருணாகரன் காரியதரிசியாகத் தெரிவு செய்யப்பட்டார்.

கொமிட்டியில் என்னுடன் நித்தி, ஏகாம்பரம் இன்னும் பலர் இருந்தனர். ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் கூட்டம் தவறாது நடைபெறும். திரு. கணபதிப்பிள்ளை அவர்கள் மிகவும் உற்சாகமானவர், முற்போக்குக் கருத்துடையவர். இவருடைய காலத்தில் சனசமூகநிலையக் கேற்றுக்கருகாமையில் ஒரு தபாற்பெட்டி செய்து வைக்கப்பட்டது. சனசமூகநிலையத்துக்கு வரும் கடிதங்கள் இதனுள் தபாற்காரரினால் போடப்படும். தலைவரோ, காரியதரிசியோ தபாற்பெட்டியைத் திறந்து கடிதங்களை எடுப்பார்கள். இதில் பெரிய பகிடி என்னவென்றால் இதனை அரச தபாற்பெட்டி என்று நினைத்துச் சிலர் தங்கள் கடிதங்களை இந்தப் பெட்டியில் போடத்தொடங்கிவிட்டார்கள். பின்பு இதனை மக்களுக்கு விளக்கம் கொடுத்து “இது சனசமூக நிலையத்துக்கு வரும் கடிதங்கள் தபால்காரன் மாத்திரம் போட வேண்டும் என்று பிரச்சாரம் செய்யப்பட்டது.

கருணாகரன் சிறந்த காரியதரிசி. பல முன்னேற்றகரமான வேலைகளைத் திறம்படத் தலைவர் கணபதிப்பிள்ளையுடன் செய்தவர். கடும் உழைப்பாளி. ஆனால் பிடிவாதக்காரன். அவர் விலகியபின் ஆசிரியர் கனகரத்தினம் எனது பெயரைக் காரியதரிசிப் பதவிக்கு பரிந்துரை செய்யுமாறு செயற்குழு உறுப்பினர்களுக்கும் தலைவருக்கும் பரிந்துரை வழங்கினார். அதனால் நான் காரியதரிசியாகத் தெரிவு செய்யப்பட்டேன். திரு கணபதிப்பிள்ளை அவர்களுக்கு ஏற்ற வகையில் கடமைகளைச் செய்யத் தொடங்கினேன். அப்போது சனசமூக நிலையங்களின் சமாசத்தலைவராக இருந்த கேற்முதலியார் தியாகராசாவிடம் என்வலப்புக்களில் அவரின் முத்திரை பதித்த இறப்பர் ஸ்டாம்பு பதிவுகளை பதிவுசெய்து வருவேன். அவருடைய பெயர் முத்திரை இருந்தால் தபாலுக்கு முத்திரை ஒட்டாமல் கடிதம் போட முடியும். உற்சாகமிகுதியினால் திரு கணபதிப்பிள்ளை அவர்களின் உற்சாக ஆமோதித்தலுடன். British Council, British Embassy, Australia High Commission, Chinese Embasy விவசாய இலாகா, முதலியவற்றுக்கு ஆங்கிலத்தில் கடிதம் எழுதுவேன். British Embassy, Australia Embassy அழகான வண்ணப்படங்களையும் விவசாயம் இலாகா மிளகு, பயறு முதலிய பலவகையான உணவுப் பொருட்களை எப்படி பயிரிடுவது, எப்படி பராமரிப்பது என்று சிறு சிறு Pamphlets பல அனுப்பினார்கள். இதனை வாசிகசாலைக்கு வரும் வாசகர்களுக்குக் காட்டுவோம் அவர்களும் உற்சாகப் பார்வையிடுவார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னொரு நிகழ்ச்சியானது இளையண்ணையின் நண்பரான திரு ஜோ தேவானந்தன்- இவர் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக்கல்லூரி இரசாயன ஆசிரியர், சினிமாப்பட இயக்குனர்- இலங்கையில் முதன்முதலில் இவர் தயாரித்த 'பாசநிலா' என்ற படத்தை நாம்தான் முதன் முதலாகத் திரையிட வேண்டுமென்று திரு இளையதம்பி தலைவரான கணபதிப்பிள்ளையிடமும், ஆசிரியர் திரு கனகரத்தினத்திடமும் வேண்டினார். எல்லோரும் உற்சாகத்துடன் ஏற்றுக்கொண்டோம். வீடு வீடாகச் சென்று ரிக்கெற் விற்றோம். திருஞானசம்பந்த வித்தியாலயத்தில் படத்தைத் திரையிடுவதாகத் தீர்மானித்துத் திரையிட்டோம். 'பாசநிலா' படத்தின் கதாநாயகன் சென்ஜோன்ஸ் கல்லூரி மாணவனான அப்போது இருந்த திரு A.E. மனோகரன். படம் திரையிடும்போது திரு A.E. மனோகரனும் வருவதாக இருந்து பின்னர் அவர் வரவில்லை. திரு ஜோ. தேவானந்தனும் அவருடைய குழுவும் படம் திரையிட வந்திருந்தனர். சரியான சனம். திரு ஜோ. தேவானந்தனும் குழுவினரும் இப்படிச் சனம் வரும் என்று எதிர்பார்க்கவில்லை. அவர்கட்கு மிகுந்த மகிழ்ச்சி. அப்போது ஏழாயிரம் ரூபாயோ என்னவோ சேர்ந்திருந்தது. திரு ஜோ. தேவானந்தன் ஆறாயிரம் ரூபாயை எடுத்துக்கொண்டு மிகுதியைச் சனசமூகநிலையத்துக்குக் கொடுத்தார். சனசமூகநிலைய அங்கத்தவர் எல்லோருக்கும் நல்ல சந்தோஷம். யாழ்ப்பாணத்தில் தயாரித்த முதற்திரைப்படத்தை திரையிட்டு வெளியிட்டது சுன்னாகம் வடக்கு சனசமூகநிலையம் என்ற பெருமையும் பெற்றது. சனசமூகநிலைய அங்கத்தவர்கட்கு உற்சாகமேலிட்டது. தலைவர் திரு கணபதிப்பிள்ளை மிகுந்த உற்சாகமுடையவர். ஒழுங்கைகள் துப்பரவு செய்யும் சிரமதானம், கோயில் வீதிகள் துப்பரவு செய்யும் சிரமதானம், சுன்னாகம் சுடலை துப்பரவு சிரமதானம் என்று பல சிரமதானங்கள் செய்யப்பட்டன. இதற்கு முக்கிய காரணம் தலைவர் திரு கணபதிப்பிள்ளை யவர்களின் உற்சாகமான தலைமை. அப்போது என்ன வேலையிருந்தாலும் ஒவ்வொரு நாளும் மாலை நான்கு மணிக்கு சனசமூக நிலையத்தில் எல்லா அங்கத்தவர்களும் ஒன்று சேர்ந்து பேப்பர் படித்து, பின் கதைத்து உற்சாகமாக இருந்தோம். இப்போது ஆசிரியர் கனகரத்தினம் நோய்வாய்ப்பட்டு நடக்க முடியாமல் இருக்கிறார். தலைவர் திரு கணபதிப்பிள்ளையவர்களின் மனைவி இறந்தபின் அவரும் நோயாளியாகி விட்டார். உற்சாகமான நித்தி, ஏகாம்பரம், தம்பித்துரை இறந்துவிட்டனர். தற்போது இந்த சனசமூகநிலையம் வரியப்புலம் அம்மன் கோயில் வீதியில் இயங்குகிறது.

திரு ஜோ. தேவானந்தனுடன் அவரது உதவி இயக்குனரான திரு லூதர் செல்வராஜாவும் பாசநிலா திரையிட்டபோது பிரசன்னமாயிருந்தார். இந்தப்படத்தில் சுன்னாகம் ஐயனார் கோயில் கேணி, குளம் கந்தரோடை வழுக்கையாறு குளம் முதலியன சேர்க்கப்பட்டிருந்தன. திரு இளையதம்பியும் பிரதான பாகத்தில் இப்படத்தில் நடித்திருந்தார். அவரின் நடிப்பு உணர்ச்சி பூர்வமாக நன்றாக இருந்தது. திரு லூதர் செல்வராசா யாழ்ப்பாணக் கல்லூரி ஆசிரியராகவும் பின்னர் கைத்தொழில் அபிவிருத்திச்சபை யாழ் பிராந்திய முகாமையாளராகவும் இருந்தவர். சிறந்த ரென்னிஸ் விளையாட்டுக்காரரான இவர் ஒரு நாள் ரென்னிஸ் விளையாடிவிட்டு தனது வீட்டுக்கு வந்ததும் சடுதியாக மரணமானார்.

(தொடரும்......)

**அறிஞர்கள் சொன்னார்கள்...**

*நீங்கள் இறந்தவுடன் மக்கள் உங்களை மறந்துவிடக் கூடாது என்று ஆசைப்படுகிறீர்களா? அப்படியானால் மக்கள் விரும்பிப் படிப்பதற்கு நல்ல புத்தகங்களை எழுதுங்கள். அல்லது மற்றவர்கள் உங்களைப் பற்றி எழுதும்படி நல்ல காரியங்ளைச் செய்யுங்கள்.* **- பெஞ்சமின் பிராங்ளின்.**

*புகழ் பெற்ற புத்தகங்ளை முதலில் படித்து முடித்துவிடு. பிற்காலத்தில் அவற்றைப் படிக்கும் வாய்ப்பு உனக்கு அமையாமல் போகலாம்.* **- தோரியோ.**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாசிப்போம் வளம் பெறுவோம்




**இரா. ஜெயக்குமார்**
*அதிபர், யா/ மயிலணி சைவ மகாவித்தியாலயம்*


'எந்திரர்'களாய் அலையும் இன்றைய நவீன யுகத்தில் வாசிப்பை வலியுறுத்த வேண்டிய தேவை சமூக ஆர்வலர்களுக்கு எழுகின்றமை இயல்பானதே. "நேரமில்லை" என்ற வார்த்தை இப்பொழுது 'பாஷன்' ஆகி விட்டது. உண்மையில் "நேரமில்லை" "மறந்து போனேன்" என்ற வார்த்தைகள் குறித்த விடயத்தில் ஆர்வம் இல்லாமையினையே வெளிப்படுத்துகின்றன. நேரம் எல்லோருக்கும் ஒரேயளவுதான். தினமும் 24 மணித்தியாலங்கள் அதாவது 1440 நிமிடங்கள் இறைவனால் ஓர வஞ்சனையின்றி நமக்கு வழங்கப்பட்டுள்ளன.ஒரு மனிதன் இந்த 1440 நிமிடங்களில் எத்தகைய எண்ணங்களைத் தன் மனதில் விதைக்கின்றானோ, எத்தகைய செயல்களைச் செய்கின்றானோ, அதற்கேற்பத் தன்னை உருவாக்கிக் கொள்கின்றான். வளமான வாசிப்பினால் வளமான வாழ்வினைப் பெறலாம்.



'நல்லதொரு குடும்பம் பல்கலைக்கழகம்' என்று பாடினான் ஒரு கவிஞன். "வீட்டுக்கு ஒரு நூலகம் விளங்க வேண்டும்" என்று வலியுறுத்தினார் சமூகச்சிந்தனையாளர் சீ.என்.அண்ணாதுரை.பரீட்சை நோக்கிலான கல்வி முறையால் விளையும் இன்பங்களைவிடத் துன்பங்களே அதிகம். வாழ்வின் சவால்களை வெற்றி கொள்ளக் கூடிய அறிவையும் ஆற்றலையும் தருபவை நல்ல வாசிப்பு சாதனங்களே. இன்று பலர் "ஓசிப் பேப்பர்" படிப்பதில் இன்பம் காண்பின்றார்கள். வீட்டுக்கு ஒரு பத்திரிகையினை விலை கொடுத்து வாங்கிப் படித்தால் பிள்ளைகள் வாழ்வின் அச்சுறுத்தல்களை அறிந்து கொள்வார்கள்தானே. பத்திரிகைகளுக்கான முதலீடு தம் பிள்ளைகளின் எதிர்காலத்திற்கான நல்ல முதலீடு என்பதைக் குடும்பத்தலைவர்கள் உணர வேண்டும். தமிழர் வாழ்வு மறுமலர்ச்சி காண ஆழ்ந்த உறக்கத்தில் இருக்கும் சனசமூக நிலையங்கள் உயிர்ப்படைய வேண்டும். முப்பது ஆண்டுகளுக்கு முன் எமது கிராமிய சனசமூக நிலையங்கள் காலை ஆறு மணி முதல் இரவு பத்து மணி வரை துடிப்புடன் இயங்கின. பத்திரிகையில் வரும் தொடர் கதைகள், வார மலரின் சிறப்பம்சங்களுக்காவே பலர் தவமிருந்தனர். அக்காலத்தில் வேறு பொழுது போக்குகளும் இருக்கவில்லை. அல்லது குறைவாகவே இருந்தன. 1980 ஆம் ஆண்டின் பின் நிலைமை மாறியது. போராட்ட வாழ்வின் அவலங்கள் தொடர்ந்தன. "முட்டாள்" பெட்டி என வர்ணிக்கப்படும் தொலைக்காட்சியும் வந்து சேர்ந்தது. சினிமா நட்சத்திரங் களும் கிறிக்கற் வீரர்களும் எம்மவர்களின் தெய்வங்கள் ஆகினர்.குஷ்புவுக்கும் கோயில் எழுந்தது. இங்கல்ல; தமிழகத்தில். நம்மை இங்கு நாமே தொலைத்து விட்டோம். தொலைக்காட்சித் தொடர்களில் அமிழ்ந்து விட்டோம். எமக்கு நேரம் இராது தானே! நேர நிர்வாகம்' தொடர்பான சிந்தனையாளர்கள் என்ன சொல்கின்றனர் தெரியுமா? காத்திருப்பு நேரம் (waiting time) பெரிதும் எமது நேரத்தை வீணடிப்பதற்காக அவர்கள் தெரிவிக்கின்றார்கள். பேருந்து நிலையங்கள், பேருந்துகள், வங்கிகள், அலுவலகங்கள், மருத்துவமனைகள் போன்ற வற்றில் நாம் அன்றாடம். காத்து நிற்பதில் நேரத்தை வீணடிக்கின்றோம். அவ்வேளையில் கூட "ஓசிப்பேப்பர்" கிடைக்குமா? என்றுதான் பார்ப்போம். அல்லது முன் பின் தெரியாதவர்களிடம் வம்பளக்க ஆரம்பித்துப் பிரச்சனைகளில் மாட்டிக்கொள்வோம். அத்தகைய சந்தர்ப்பங்களினை எவ்வாறு பயன்படுத்தலாம்?




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது பொதியில் (Bag) ஒரு புத்தகம் அன்றைய பத்திரிகை ஒன்று தயாராக எப்போதும் இருக்க வேண்டும். இத்தகைய நேரங்களில் எடுத்து வாசிக்க வேண்டும் . நமது சக்திக்கு உட்பட்ட, நம்மால் மாற்றி அமைக்கக்கூடிய விடயங்கள் பற்றித் தெரிந்தவர்களுடன் உரையாடலாம். ஆனால் நம்மால் மாற்றி அமைக்க முடியாத, நமது சக்திக்கு அப்பாற்பட்ட விடையங்கள் பற்றி நமக்கு முன் பின் அறிமுகம் இல்லாதவர்களுடன் உரையாடுவதில் பெரும் பலன் கிடைக்குமா? எனவே பயனற்ற உரையாடல்களைத் தவிர்ப்பேரம். பயனுள்ள வாசிப்பை காத்திருக்கும் பொன்னான நேரத்தில் மேற்கொள்வோம்.

எமது பிள்ளைகளின் பிறந்த நாள் அன்று 'கண்டோஸ்' வழங்கி அவர்களின் பற்களை சிதைக்க எவரும் மறப்பதில்லை. ஆனால் பிறந்த நாளன்று நல்ல நல்ல புத்தகங்களையோ பழ மரக்கன்றுகளையோ பரிசாகக் கொடுப்பதில் பின்னடிக்கின்றோம்.

நாம் இழந்தவற்றை ஈடு செய்ய வேண்டாமா? வாசிப்புக் கலாசாரத்தினை வலுப்படுத்த வேண்டுமா? உலக புத்தக தினம் (ஏப்ரல் 23) கொண்டாடும் வேளையில் இது பற்றியும் சிந்திப்போம்.கிராமங்கள் தோறும் உறங்கும் சனசமூகநிலையங்கள் பத்திரிகை களால் நிரம்பட்டும். அறிவொளி வீசட்டும். வீடுகள் தோறும் நூலகங்கள் நுழையட்டும். வளமான வாசிப்பால் வல்லமை படைத்த தலைவர்கள் உருவாகட்டும். நடக்குமா? ■

# ஒலி பெருக்கி ஒழிக

**"கேளாச்செவியன்"**



*அதிகாலை வேளை படித்தல் நல்லதென்ற*
*அறிவுரை சிரங் கொண்டு படிக்கவெண்ணி,*
*உதிக்காத வேளைக்கே உறக்கம் நீங்கி,*
*உருப்போட்டு மனனம் உற்சாகமாக ஆரம்பித்தேன்.*

*"போட்டிப் பரீட்சை வென்றிட வேண்டுமம்மா*
*காட்டு திறமையை கைவிட்டு விடாதேபார்*
*வீட்டு வேலைகள் விளையாட்டு என்றெல்லாம்*
*மாட்டுப் பட்டிடாதே மனதில் வைச்சுக்கொள்" என*

*ஆசிரியர், அதிபர் அனுதினமும் சொல்லிச் சொல்லி*
*மூசிமூசிப் படித்துவா முன்னேற இடமுண்டு;*
*பேசிப்பேசி முன்னாலும்,பின்னாலும் பெற்றோரும்;*
*ஆசித்த வகையாலே ஆவலுடன் படித்தேன்.*

*என்வீட்டின் அருகாமையில் எங்கள் பள்ளிக்கூடம்;*
*பின்பாதைத் திருப்பத்தில் பிணியாளர் சாலையுண்டு;*
*முன்வீதி முடிவுவரை முக்கிய அலுவலகங்கள்;*
*என்னாளும் சனம்நிறை எங்க;ர் இப்படித்தான்.*

*ஊருக்குச் சிறப்பாக ஒன்பது பெருங்கோயில்கள்*
*ஒழுங்கைகள்,வயல்வெளி ஓரமெல்லாம் சாமிகள்*
*வேர் விட்டு விழுதுற்ற விருட்சம் கீழெல்லாம்;*
*பேர் இல்லாது போனாலும் வீற்றிருக்கும் சூலங்கள்.*

*இத்தனை தெய்வங்களும் எங்களூரைக் காப்பாற்ற,*
*எத்தனையோ விழாவெடுத்து எல்லோரும் போற்றிசைக்க,*
*அத்தனை கோயிலும் ஆரவாரம், கோலாகலம்;*
*நித்தமும் நிகழ்வதாலே, ஒலிபெருக்கி ஓலமிடும்.*

*பள்ளிப் பாடம் படித்திட முடிவதில்லை; குரு*
*சொல்லிய பாடம் மனனமே ஆவதில்லை; நிலை*
*பெற்றிட நினைத்தாலும், நினைவிலே நிற்பதில்லை;*
*கற்றிட நினைத்தேனே; கரைச்சல் செய்வதேனோ?*

*அதிகாலை முதல் அர்த்தராத்திரி விடியல் வரை*
*அதிகஒலி செய்வாரே; ஆன்றோர் இவரோ சொல்!*
*அதிகாரம் உள்ளோரும் அக்கறை கொண்டதில்லை;*
*அதிகமாகும் ஒலிமாசு; அத்தோடு மின்வெட்டு!*

*ஆனாலும் கல்வித்தரம் உயரப் பாடசாலை*
*போனாலும் காணாது போய் வருவோம் ரியூற்றறிக்கு,*
*தானாக உணர்ந்தாலே தரணியெமைப் போற்றிடுவோம்*
*வீணாகும் கல்விக்காலம் விழலுக்கு இறைப்பதுவோ?*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வேண்டுதல்

இணுவையூர்
சிதம்பர திருச்செந்திநாதன்

திருமதி கந்தவனம் பரபரப்பாக இயங்கினார். அந்தப் பரபரப்பிலும் செய்கின்ற செயல்களை அக்கறையாகச் செய்தார். வதனத்தை மெருகூட்டுவது, ஆடைகளைத் தேர்ந்தெடுப்பது என்பன போன்றவற்றில் அதிக கவனம் செலுத்தினர்.

அவர் தனது அலங்காரங்களை முடித்துக்கொண்டு புறப்பட ஆயத்தமானபோதும் அவரது கணவர் கந்தவனம் இன்னமும் தனது அலுவல்களை முடிக்கவில்லை. ‘ஐயோ என்னப்பா செய்யிறியள்? இப்பவே நாங்கள் நல்லாய் நேரஞ்சென்று போனம். நீங்கள் பிறகும் நேரத்தை வீணாக்குறீங்கள். இப்படியே போனால் பூசை முடிஞ்ச பிறகுதான் போய்ச் சேருவம் போல இருக்கு’ எனச் சிணுங்கினார் திருமதி கந்தவனம்.

‘அவசரப்படாதேயும் ஆறுதலாக கோயிலுக்குப் போகலாம். எனக்குத் தெரியாத கோயிலே? என்னைக் காணாமல் அங்கை பூசை தொடங்க மாட்டினம்’ என்றார் கந்தவனம்.

‘சரி சரி எப்படியப்பா என்ரை ரெஸ்ஸிங்? எப்படி இருக்கு? முகத்தை லேஞ்சியால் ஒற்றியபடியே கேட்டார் திருமதி கந்தவனம்.

‘நல்லாய் இருக்கு. உம்முடைய சினேகிதிகளே உம்மை இண்டைக்கு வடிவாய்ப் பார்த்து பெருமூச்சு விடுவினம்’.

‘நீங்கள் ஆகத்தான் பகிடி விடுறியள். இப்ப பகிடியை விட்டுப்போட்டு கெதியாய் வெளிக்கிடுங்கோ’ எனக் கூறிக்கொண்டு வெளி விறாந்தைக்கு வந்தார் திருமதி கந்தவனம்.

கந்தவனம் தம்பதியினருக்கு பெரிய மனக்குறை ஒன்று இருந்து வருகின்றது. வசதியான வாழ்க்கை; கையிலும் வங்கியிலும் பணம் நித்திரை கொள்கிறது, தோட்டமும் வளவுகளாகவும் சொத்துக்கள் பரந்து இருக்கின்றன. நினைத்ததை செய்து முடிக்கும் செல்வாக்கு இருக்கின்றது. உதவி செய்யப் பலபேர்கள். சங்கிலித் தொடர் உறவினர்கள். வலைப்பின்னல் போன்ற நண்பர்கள் என ஏராளம்.

ஆனால்...!

அவர்கள் மனக்குறை இன்னுமும் தீர்ந்தபாடில்லை. அது தொடர்ந்து கொண்டுதான் இருந்தது.

வெளி விறந்தைக்கு வந்த திருமதி கந்தவனம் றைவர் கார் ரெடியா? எனக் குரல் கொடுத்தார்.

அடுத்த கணமே கராஜ்ஜில் நின்ற கார் விர் எனப் புறப்பட்டு விறாந்தைக்கு முன்னால் வந்து நின்றது. காரில் நின்றும் றைவர் பவ்வியமாக இறங்கினான்.

‘சரி அப்ப போவமே’ எனக் கேட்டபடி வீட்டினுள் இருந்து கந்தவனம் வெளியே வந்தார். இருவரும் காரினுள் ஏற முனைய வாசல் கேற்றடியில் பெண்ணுருவம் ஒன்று தோன்றியது. அதன் இடுப்பில் மெல்லியதாக அழுகின்ற குழந்தை வேறு.

‘அம்மா ஏதாவது தாருங்கோ! குழந்தையும் மூன்று நாளாய் பால் இல்லாமல் அழுகுது’ என்று வாசலில் நின்ற பெண் கூறினாள்.

‘சீ நல்ல முழிவியளம் தான்’ என திருமதி கந்தவனம் கூற, ‘இஞ்சை ஒன்றும் இல்லை. நாங்கள் அலுவலாய் வெளியே போறம். பிச்சை கேட்க நேரம் காலம் கிடையாதே’ என்று கந்த வனம் கேற்றில் இருந்த ‘நாய் கடிக்கும் கவனம்’ என்ற பெயர்ப்பலகையையும் மிஞ்சிப் பாய்ந்தார்.

அம்மா! எனக்காக இல்லாவிட்டாலும் குழந்தை பாவம் அம்மா...!என அவள் இழுத்தாள். ‘சொன்னால்’ விளங்காதே. பேசாமல் போ. றைவர் காரை எடு. இந்தத் தரித்திரங்களால் பெரிய உபத்திரவம் எனத் திருமதி கந்தவனம் சொன்ன அடுத்தகணமே கார் புறப்பட்டு மறைந்தது.

கோயிலுக்கு இருவரும் சரியான நேரத்திற்கு போய்ச் சேர்ந்தார்கள். சனக்கூட்டத்திற்குள் புகுந்து மறைந்து கும்பிடத் தொடங்கினார்கள். திருமதி கந்தவனம் மனமுருகக் கும்பிட்டார். தனக்குப் பிள்ளைப்பாக்கியம் தரும்படி கண்களில் கண்ணீர் அரும்ப, நீண்ட நேரமாக வேண்டுதல் செய்தார். ■



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒன்றே கடவுள் என
## ஒலிக்கும் ஒண்தமிழ்ப்பாடல்கள்

உ.தங்கா

சைவ சித்தாந்தத்தைச் சுருக்கமாகவும் அதேவேளை பூரணமாகவும் எளிமையான தமிழிற் தருவது உமாபதி சிவாச்சாரியார் இயற்றிய 'திருவருட்பயன்'. இந்நூல் திருக்குறள் போல செம்மை, நிறைந்த ஈரடி வெண்பாக்களால் சிறப்பாக இயற்றப்பட்டது. சைவசித்தாந்தநூல் எனினும் இறைவனைப் பற்றிக் கூறும்பொழுது எத்தெய்வத்தையுமே சுட்டாது இறை என்றே கூறுகிறது.

"அகரவுயிர்போ லறிவாகி யெங்கும்
நிகரிலிறை நிற்கும் நிறைந்து."

இக்குறள் முதலாம் அதிகாரமாகிய 'பதிமுதுநிலை' யின் முதலாவது குறள் ஆகும்.

அகரவுயிராகிய 'அ' என்னும் அங்காப்போசை தோன்றாது, ஏனைய எழுத்துக்கள் தோன்றமாட்டாது. அதுபோல இறைவன் இன்றிப் பிரபஞ்சம் இல்லை இதனையே திருவள்ளுவர் தமது திருக்குறளில் முதலாவது குறளாகக் கடவுள் வாழ்த்து அதிகாரத்தில்

"அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு" என்கிறார்.

இவ்விரு குறட்பாக்களிலும் பொதுவாக இறைவன் எனக் கொள்ளப்பட்டிருக்கிறதே தவிர குறிப்பாக எக்கடவுளையும் சுட்டப்படவில்லை.

கம்பர் உலகமகாகவி. இராமாயணம் இன்ப ஊற்று. அதன் முதலாவது பாடல் தற்சிறப்புப் பாயிரத்தில் வருகிறது

"உலகம் யாவையும் தாமுளவாக்கலும்
நிலை பெறுத்தலும் நீக்கலும் நீங்கலா
வலகிலா விளையாட்டுடை யாரவல்
தலைவர் அன்னவர்க்கே சரண் நாங்களே."

உலகத்தை இறைவன் படைக்கிறான் அதனை நிலைபெறச் செய்கிறான். பிறந்ததெல்லாம் இறக்கும் என்பதற்கிணங்க உயிரினங்கள் யாவும் மடிகின்றன. இவையெல்லாம் மனிதர்களாகிய எங்களுக்கு மிகவும் பிரமாண்டமான காரியம். இறைவனுக்கோ முடிவில்லாத ஒரு விளையாட்டு. அத்தனை இலகுவாகச் செய்து விடுகிறான். இப்படியான வரம்பில் ஆற்றல் உடைய இறைவனிடத்தே நாம் சரண் அடைவோம் என்பது இதன் பொருள். இப்பாடல்கள் எம் மதத்துக்கடவுளையும் சுட்டாது இறைவன் என்று பொதுவாகக் கூறப்படுவதை நாம் அவதானிக்கலாம்.

மேலும் கம்பராமாயணத்தில் பாலகண்டத்தில் வரும் ஆற்றுப்படலத்தில் ஒரு பாடல் வருகிறது. பல பல சமயங்களும் பரம்பொருளாகிய இறைவனை பலவாறு கூறினும் அது இயல்பில் ஒன்றே என்ற கருத்துப்பட அமைகிறது. சரயு நதியானது

"கல்லிடைப் பிறந்து போந்து கடலிடைக் கலந்த நீத்தம்
மெல்லையின் மறைகளாலும் இயம்பரும் பொருளீதென்னத்
தொல்லையில் ஒன்றேயாகித் துறைதோறும் பரந்த சூழ்ச்சிப்
பல்பெருஞ் சமயம் சொல்லும் பொருளும் போற்பரந்ததன்றே"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரம்பொருள் ஒன்றேயாயிருப்பதுபோலச் சரயு நீர் வெள்ளம் ஒன்றேயாயிருந்து பல சமயத்தவர் சூழ்ச்சிக்கு உட்பட்டு அப்பரம்பொருள் பல படியாகச் சொல்லப்படுதல் போல ஏரி, குளம், தடாகம் முதலிய பல இடங்களிலே பொருந்திப் பல பெயர்களூடாகவே வழங்கலாயிற்று எனினும் அது சரயு நதியின் நீர் வெள்ளமோ திருமந்திரத்தில் திருமூல நாயனாரும் தனது ஒரு மந்திரமாகிய இப்பாடலில்

"ஒத்த சமயங்கள் ஓராறு வைத்திடும்
அத்த னொருவனாம் என்பதறிந்திலர்
அத்தனொருவனாம் என்பதறிந்திடின்
முத்தி வினைக்கு முதல்வனுமாமே."

பல சமயங்கள் இறைவனைப் பற்றி பலப்பலவாய் கூறினாலும் அத்தன் (தந்தை) இறைவன் ஒருவனே என்பதை அறியாதிருக்கின்றனர். அப்படி அறிந்தவர் யாராயினும் இருப்பின் வீடு பேற்றிற்கு முதன் முதலில் செல்பவன் அவனே. இப்படியே எத்தனையோ பாடங்களை எடுத்தாள முடியும். விரிவஞ்சி அமைகிறேன். தமிழன் சாதிமதபேதம் கடந்த பேரறிஞனாக வாழ்ந்தவன். புறநானூறில் வரும் கணியன் பூங்குன்றனாரின்


"யாதும் ஊரே யாவரும் கேளிர்
தீதும் நன்றும் பிறர் தர வாரா
பெரியோரை வியத்தலும் இலமே
சிறியோரை இகழ்தல் அதனிலும் இலமே"

என்ற வரிகள் கூறுவது இதுவே.

■

# வெறுமை உலகம்

பசுந்தோல் போர்த்திய புலிகளின்
உலகமிது!
படைப்பவன் யாரோ? படைப்பிப்பவனும்
யாரோ?
எல்லாம் மனிதனாலும் முடியும்
ஆக்கவும், காக்கவும், அழிக்கவும் முடியும்.....
அணுகுண்டு தயாரித்து இறைவனின்
சிருஷ்டிகளை அழிக்கவும் முடியும்......
சரி இப்போ யார்? கடவுள் மனிதனா?
ஜீவன் உள்ள மனிதர்களுக்கு
போட்டியாக வேற்றுக்கிரகவாசிகளும்
இல்லை...... ஆனாலும்
மனிதனின் சிருஷ்டியிலே எந்திர மனிதன்
உயிர் பெறுகிறான்!
உயிர் உள்ள மனிதன் சோம்பேறி ஆகிறான்
சோம்பேறிகளின் உலகம் இதுதான்
"வெறுமை உலகம்" மனிதனை
மனிதன் உண்ணும் உலகம்!
வெற்றுப் புகழ்ச்சிகளும், பாராட்டுகளும்
போலிச் சாமியார்களும்....
முகமூடி மனிதர்களும் வாழும் போலி
உலகமது!



சுன்னாகம்
கௌதமி இராஜசூரியர்
(யாழ் பல்கலைக்கழக மாணவி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரங்கினூடாக சிறுவர்களுக்கான உளரன் (மனோதிடம்) மேம்பாடு

எஸ். ரி. அருள்குமரன் BA (Hons)MA(Merit)
ஆசிரியர்
மானிப்பாய் இந்துக்கல்லூரி

நாடகக்கலை தனக்கெனத் தனித்துவமான பண்புகளினைக் கொண்டுள்ளது. மனித நாகரிக வளர்ச்சியின் ஆரம்பப்புள்ளி முதல் இக்கலையின் வகிபங்கு முதன்மை பெறுகின்றது. மனிதர்கள் தமது உணர்வியலினைப் பிறரிடம் காவுவதற்கும் தமது கருத்தினைப் பகிர்ந்து கொள்வதற்கும், உறவினைத் தகவமைத்துக் கொள்வதற்கும் இக்கலை உதவுகின்றது.

இக்கலையின் தொடர்நிலை இயங்குதல் காலமாறுதலுக்கு ஏற்ற வகையில் வடிவங்களினைத் தரநிர்ணயம் செய்தன. அவ்வடிவங்கள் தமக்கான தனித்துவத்தையும் சமூகத்தின் பல் பரிமாணப் பிரச்சினைகளினையும் ஊடு பொருளாகக் கொண்டு வெளிப்படுத்தின.

இதன் முக்கியத்துவம் கால மாறுதலில் வெறுமனே உணர்ச்சிக்குரியது என்பதனைத் தாண்டி அறிவு பூர்வமான விடயமாகப் பார்க்கப்படலாயிற்று.

எவ் விடயத்தினையும் அவற்றில் காணப்படுகின்ற பிரச்சினைகளினை அறிவியல் பூர்வமாகவும் யதார்த்த பூர்வமாகவும் பதிவு செய்ய முனைந்தன. அப்பகைப்புலத்தில் பிரச்சினைகள் என்ன? அப்பிரச்சினைகளினைத் தீர்ப்பதற்கான வழிவகைகள் என்ன? அத்தீர்வுகளின் ஊடாகச் சமூகவியல் பெறுமானத்தில் எத்தகைய மாறுதல்களினைக் கொண்டு வரமுடியும் என்பன தொடர்பாக நாடகப் படைப்பாளிகள் சிந்தித்தனர். அச்சிந்தனைகள் பெறுமானம் சமூகவியலில் தாக்கத்தினை ஏற்படுத்தின.




சமூகம் கால மாற்றமடையும் போதும் புதிய புதிய பிரச்சினைகள் முகிழ்ந்தெழும் போதும் அவற்றினை வெளிப்படுத்துவதற்கும் தீர்த்துக் கொள்வதற்கும் நாடகங்கள் துணை செய்கின்றன.

பிரச்சினைகள் எனும்போது பல்வேறு பிரச்சினைகளினைக் குறிப்பிடு வார்கள். பெண்களது பிரச்சினைகள், முதியவர்களது பிரச்சினைகள், சிறுவர்களது பிரச்சினைகள், பண்பாட்டுப் பிறழ்வுகளின் ஊடாக சமூகம் எதிர் நோக்கும் பிரச்சினைகள் என பிரச்சினைகள் சமூகவியல் சூழமைவுகளுக்கு ஏற்ப மாறுபடுகின்றன.

கலைகள் மனித வாழ்வியலின் பிரிக்க முடியாத கூறுகளாக விளங்கு கின்றன. கலைப்படைப்புக்கள் காலத் தினைப் பிரதிபலித்து நிற்கும் கண்ணாடி ஆகும். அவை சமூகத்தில் மனிதர்களது வாழ்வியல் பதிவுகள், மனிதர்களது வலிகள், என்பவற்றினை வெளிப்படுத்தும் வல்லமை பொருந்தியவை ஆகும். இத்தகைய பணியினை நாடகீயப் படைப்புக்கள் மூலம் செயற்படுத்த முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்றைய சூழ்நிலையில், சம காலத்தில் எமது வாழ்வியல் நீரோட்டத்தில் பலரது கதையாடல் வெளிகளில் சிறுவர் துஷ்பிரயோகமும் அதனூடான பண்பாட்டுப் பிறழ்வுகள் பற்றிய பார்வையும் முதன்மை பெறுகின்றன.

"சிறுவர்கள் நாட்டின் சொத்துக்கள்; எதிர்காலத்தின் தலைவர்கள். அவர்கள் இக்காலத்தில் பெற்றுக்கொள்கின்ற அறிவுப் புலமையானது அவர்களது எதிர்கால வாழ்விய லுக்கான அடிப்படைகளாகின்றன" எனும் கருத்து நிலைகள் முதன்மை பெறுகின்றன. ஆனால் அவர்களது சுதந்திரமான வாழ்வியல் தகவமைப்பிற்கான செயற்பாடுகள் முழுமையாக இடம்பெறு கின்றனவா எனும் வினா வெழுகின்றது. காரணம் யாதெனில் ஊடகங்களிலும், பல்வேறு நிலைகளிலும் சிலாகிக்கப்படுகின்ற சிறுவர் துஷ்பிரயோ கங்கள், அவர்களுக்கு இழைக்கப்படுகின்ற கொடுமைகள், அவர்களுக்கு மறுக்கப்படுகின்ற உரிமைகள் எனப் பலவற்றினைக் குறிப்பிட முடியும்.

சிறுவர்களுக்கான சுயமுனைப்புச் செயற்பாடுகளும் அவர்களுக்கான கருத்தாடல் வெளிகளும் தம்மை வெளிப்படுத்திக் கொள்வதற்கான வெளிகளும் உருச்சமைக்கப் படுகின்ற போதே ஆரோக்கியமான சமூகம் மேற்கிளம்பும்.

சிறுவர்களது உளரன் (மனோதிடம்) மேம்பாட்டிற்கானதும், வாழ்வியல் மேம்பாட்டிற் கானதுமான செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட வேண்டியது காலத்தின் தேவையாகும். காரணம் யாதெனில் அவர்களது மனப்பதிவுகளில் உயரிய சிந்தனை களினையும் அச் சிந்தனைகளினூடாகத் தன்னம்பிக்கையினையும் ஏற்படுத்துவது அவசியமானதாகும். அத்தகைய சிந்தனை சார் மாற்றத்தினை வெளிக்கொணர் வதற்குத் கலையியல் சார் செயற்பாடுகள் துணை செய்யவேண்டும்.

பதினெட்டு வயதிற்குட்பட்டவர் களினைச் சிறுவர்கள் எனும் வகுதிக்குள் உட்படுத்துகின்றனர். அவ்வகையில் பாடசாலைப் பருவத்தினை உடையவர்கள் இவ்வகுதிக்குள் வருகின்றனர். எனவே அவர்களுக்கு நல்லன தீயனவற்றைப் பகுத்தாராய்வதற்கான சரியான வழி காட்டுதல் களும் மேற்கொள்ளப்பட வேண்டியது அவசிய மானதாகும்.

சிறுவர்களுக்கான அரங்கச் செயற்பாடு எனும்போது அவர்களின் கற்பனையைத் தூண்டும் வகையில் ஆடல், பாடல், விநோதம், நிறைந்ததாகவும் அப்படைப்பின் பேசு பொருள் அவர்களது உளவியல் சார் அணுகுமுறையுடனும் உருச்சமைக்கப் படுகின்றன.

சிறுவர்கள் அரங்கச் செயற்பாடு களில் ஈடுபடுவதன் மூலம் அவர்களிடையே ஆளுமை வெளிப்படுத்தல்கள், தலைமைத்துவப் பண்பு, கற்பனாசக்தி விருத்தியடைதல், எதையும் கூர்ந்து நோக்கும் திறன் விருத்தியடைதல், விட்டுக்கொடுப்புக்கள், சகோதரத்துவம், சுயதேடல், சுயமுனைப்பு போன்ற பண்பு களினை மாணவர்கள் உள்ளீர்த்துக் கொள்வதற்கு இவ் அரங்கச் செயற்பாடுகள் துணை செய்கின்றன.

சிறுவர் தலை முறை, உளவியல் ரீதியாகப் பாதிக்கப்பட்டால் அதன் எதிர்காலத் தலை முறையானது செயல்முனைப்பற்ற, சுயதேடல் அற்ற தலைமுறையாகவே முகிழ்ந்தெழும். அத்தகைய சூழ்நிலை உருவாகும்போது ஆரோக்கியமற்ற சமூகம் உருவாகுவதினைத் தவிர்க்க முடியாது போகும்.

எனவே அவர்களது கனவுகளினை உருவாக்குவதற்கு, அவர்களது சுய முனைப்பிற்கானதான வகையில் அவர்களுக்கு விழிப்பூட்டல் சார்ந்த செயற்பாடுகளுடன் அவர்களினைப் படைப்பில் ஈடுபடுத்துவதன் மூலம் ஆளுமை நோக்கிய சமூக உருவாக்கத்திற்கு வித்திட முடியும். ■



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத்தின் பெருமைமிகு கவி மஹாகவி

**இணுவையூர் ஆ. இரகுபதிபாலஸ்ரீதரன்**



ஈழத்து தமிழ் கவிஞர்களிலே தலைசிறந்த கவிஞர்களுள் ஒருவராகக் கருதப்படுபவர் உருத்திரமூர்த்தி என்ற சொந்தப் பெயருடைய மஹாகவி. திரு. உருத்திரமூர்த்தி அவர்கள் யாழ்ப்பாணத்தில் அளவெட்டி என்ற கிராமத்தில் புகழ்பெற்ற நாதஸ்வர வித்துவான் துரைசாமி அவர்களுக்கு மகனாக 09.01.1927 அன்று பிறந்தார். சாதாரண நடுத்தரக் குடும்பம் என்பதால் உயர்கல்வி பெற முடியாமல் தமது பத்தொன்பதாவது வயதில் அளவெட்டிக் கிராமத்தை விட்டு கொழும்பிற்குச் சென்று எழுதுவினைஞராகக் கடமை புரிந்தார். இவர் தமது பதினான்காவது வயதிலேயே கவிதை எழுத ஆரம்பித்தார்.

*“ இன்னவைதாம் கவி எழுத*
*ஏற்ற பொருள் என்று பிறர்*
*சொன்னவற்றை, நீர் திருப்பிச்*
*சொல்லாதீர்; சோலை, கடல்*
*மின்னல், முகில், தென்றலினை*
*மறவுங்கள் மீந்திருக்கும்*
*இன்னல், உழைப்பு, ஏழ்மை, உயர்வு*
*என்பவற்றைப் பாடுங்கள்! ”*

இது அன்னாரது ஆரம்பகாலக் கவிதைகளில் ஒன்று.

கொழும்பில் கடமையாற்றிக் கொண்டிருந்த வேளையிலே தனது இருபத்தெட்டாவது வயதிலே திருமணம் செய்து கொண்ட இவருக்கு, ஐந்து பிள்ளைகள். கவிதைகளில் எவ்வளவு கவனம் செலுத்தினாரோ, அதேபோல் தமது கடமையிலும் கண்ணாயிருந்தார். இலங்கை நிர்வாகச் சேவைப் பரீட்சையில் சித்தியடைந்து, காணி அதிகாரியாகப் பதவி உயர்வு பெற்று யாழ்ப்பாணம், மன்னார், மட்டக்களப்பு ஆகிய இடங்களில் கடமையாற்றினார். மீண்டும் பதவி உயர்வு; மீண்டும் கொழும்பில் உத்தியோகம்; அரசகரும மொழித்திணைக்களத்தில் உதவி ஆணையாளராக.

ஆரம்பத்தில் ‘பண்டிதன்’ என்னும் புனைபெயரில் கவிதைகள் எழுதத் தொடங்கிய உருத்திரமூர்த்தி ‘புதுக்கம்பன்’, ‘புதுநாப்புலவர்’, ‘மாபாடி’, ‘மகாலட்சுமி’ என்ற புனைபெயர்களிலும் கவிதைகள் எழுதியுள்ளார். எனினும் அவர் ‘மஹாகவி’ என்ற புனை பெயரில் தன்னம்பிக்கையுடனும், துணிச்சலுடனும் எழுதிய கவிதைகளே புகழ்பெற்றன. இன்றும் நிலைத்து நிற்கின்றன. 1943ம் ஆண்டிலிருந்து அதாவது தனது பதினாறாவது வயதிலிருந்து எழுதிய கவிதைகள் பிரசுரமாகின.

அக்காலத்தில் வெளிவந்த மறுமலர்ச்சி, ஈழகேசரி, ஆனந்தன், கிராம ஊழியன் போன்ற இதழ்களில் இவரது ஆரம்பக்கவிதைகள் வெளியாகியுள்ளன. 1960ன் ஆண்டு பின்னர் மஹாகவியின் கவிதைகளில் சமூகநோக்கு, அனுபவ முதிர்ச்சி, தனித்துவம் போன்றவை காணப்பட்டன.
உதாரத்திற்கொன்று: சாதி வெறிக்கு எதிராக 1969ம் ஆண்டு ‘தேரும் திங்களும்’ என்ற தலைப்பில் எழுதிய கவிதையில் ஒரு பகுதி:-

*“ ஊரெல்லாம் கூடி ஒருதேர் இழுக்கிறதே:*
*வாருங்கள் நாமும் பிடிப்போம் வடத்தை”*
*என்று*
*வந்தான் ஒருவன்*
*“ நில்”! என்றான் ஓராள்*
*“ நிறுத்து” என்றான் மற்றோராள்*
*“ புல்” என்றான் ஓராள்*
*“ புலை” என்றான் இன்னோராள்*
*“ கொல்”! என்றான் ஓராள்*
*“ கொளுத்து”! என்றான் வேறோராள்.*
*கல்லொன்று வீழ்ந்து*
*கழுத்தொன்று வெட்டுண்டு*
*பல்லோடு உதடுபறந்து சிதறுண்டு*
*சில்லென்று செந்நீர் தெறித்து*
*நிலம் சிவந்து*
*மல்லொன்று நேர்ந்து*
*மனிசர் கொலையுண்டார்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மஹாகவி படைத்த காவியங்களில் 'குறும்பா' குறிப்பிடத்தக்க இடத்தைப் பெறுகிறது. குறும்பா ஒவ்வொன்றும் தனிப்பாடலாக அமைகிறது. தனிப்பாடல் மரபே சங்ககாலத்திலும் சிறப்புற்று விளங்கியது. இன்றும் தனிப்பாடல்களுக்குத் தனிஇடம் உண்டு. மஹாகவியின் குறும்பாவும் ஒரு சிறுகதையாகவோ, காட்சி அமைப்புக் கொண்டதாகவோ, ஒரு நகைச்சுவைத் துணுக்காகவோ அமையலாம்.

மஹாகவியின் நூறு குறும்பாக்களும் கேலிச் சிரிப்பிற்கும், சிந்தனைக்கும் முதலிடம் கொடுத்துப் படைக்கப்பட்டன. அந்தக் குறும்பாக்கள் பலவற்றுக்கு அழகான, பொருத்தமான சித்திரங்கள் ஓவியர் 'செள' அவர்களால் தீட்டப்பட்டன. அந்தச் சித்திரங்கள் மஹாகவியின் குறும்பாக்களுக்கு மேலும் அழுத்தமும், சுவையும் தருகின்றன; இன்றும் எண்ணத்தில் நிலைத்து நிற்கின்றன!

மஹாகவியின் குறும்பாக்களில் ஒன்றிரண்டைப் பார்ப்பது இங்கு மிகவும் பொருத்தமாக இருக்கும். எமது நாட்டில் 'கைலஞ்சம்' எந்த உயர் நிலையில் உள்ளது என்பதை பின்வரும் குறும்பாவினால் உணர்த்துகிறார் மஹாகவி.



*" முத்தெடுக்க மூழ்குகிறான் சீலன்*
*முன்னாலே வந்து நின்றான் காலன்*
*சத்தமின்றி வந்தவனின்*
*கைத்தலத்திற் பத்துமுத்தைப்*
*பொத்திவைத்தான் போனான் முச்சூலன்"*

*(குறும்பா, பக்கம் – 55)*

மஹாகவி இக்குறும்பா மூலம் உயிர் பறிக்க வரும் யமனைக்கூட கைலஞ்சத்தினால் சமாளிக்கலாம் என எத்துணை அழகாகப் புலப்படுத்துகின்றார்!.

உழைத்து உழைத்து ஓடாய்ப்போய் பென்சனிலே வந்த எமது அரசாங் ஊழியர்கள் தமது பென்சன் பணத்தை அனுபவிக்காமல் காலமாவதை பின்வரும் குறும்பாவின் மூலம் அன்னார் அழகாகச் சித்தரிக்கின்றார்.

*" பெஞ்சனிலே வந்தழகக் கோனார்*
*பெருங்கதிரை மீதமரலானார்*
*அஞ்சாறு நாள் இருந்தார்*
*அடுத்த திங்கள் பின்னேரம்*
*பஞ்சியினாலே இறந்து போனார்" (பக்கம் 49)*

இக்குறும்பா மூலம் சிரிப்பையும், சிந்தனையையும் தூண்டுகிறதல்லவா?

தமிழரின் அரும்பெரும் கலையாம் ஆடற்கலை பாழடிக்கப்படுவதை பின்வரும் குறும்பா மூலம் நயமாகச் சொல்லுகிறார் மஹாகவி.

*" உத்தேசம் வயது பதி னேழாம்*
*உடல் இளைக்க ஆடல் பயின் றாளாம்*
*எத்தேசத் தெவ்வரங்கும்*
*ஏறாளாம் ஆசிரியர்*
*ஒத்தாசையால் பயிற்சி பாழாம்"*

*(பக்கம் – 27)*

இவ்வாறான நயம்மிக்க நூறு குறும்பாக்கள் 'குறும்பா' நூலில் உள்ளன. மேலும் மஹாகவி சடங்கு, கந்தப்பசபதம், ஒரு சாதாரண மனிதனது சரித்திரம், கண்மணியாள் காதை போன்ற காவியங்களையும், புதியதொரு வீடு, கோடை, முற்றிற்று முதலிய பா நாடகங்களையும் படைத்துள்ளார்.
வாழ்க மஹாகவி புகழ்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆபத்தில் மீட்ட தொண்டு

பா. பாலச்சந்திரன்
சுன்னாகம்

யாழ்தேவி மாகோ புகையிரத நிலையத்தை அடைந்ததும் காடையர் கூட்டம் பொல்லுகள், தடிகள் சகிதம் கூவிக்கொண்டு புகையிரதத்தினுள் ஏறியது. குணராஜா காக்கி காற்சட்டையும், சேட்டும், ஓவசியர்கள் அணியும் வட்ட காக்கி நிற தொப்பியும் அணிந்திருந்தார். இதனால் அவரை தமிழர் என்று கூறமுடியாது இருந்தது. காடையர் கண்களுக்கு அவரை பொலிஸ் உத்தியோகத்தர் மாதிரி தெரிந்ததோ தெரியாது; அவரை ஒன்றும் செய்யவில்லை. அவர் புகையிரத நிலையத்திற்கு வெளியே வந்து மிகவும் பயத்துடன் ஆனால் அதைக் காட்டிக்கொள்ளாது-தொடர்ந்து சென்று கொண்டிருந்தார்.

திடீரென "மிஸ்ரர் குணராஜா" என்ற ஒரு குரல் அருகில் ஒலித்தது. அவர் மிகவும் அதிர்ச்சியடைந்தார். ஒருவாறு சமாளித்துக்கொண்டு திரும்பி பார்த்தார். அவருக்கு பழகிய முகமாக இருந்தது. ஆனால், பெயர் ஞாபகத்திற்கு வரவில்லை. அக்கம் பக்கம் பார்த்துவிட்டு

"யேஸ் ஐ ஆம் குணராஜா. பட் நௌ ஐ ஆம் நொட் குணராஜா"

"ஐ ஆம் ஞானசேகரா, யுவ பிரண்ட்" என்று மறித்தவர் கூறினார்.

நிலமையை அறிந்த ஞானா இவரை தனது வீட்டிற்கு அழைத்துச் சென்றார். வீட்டின் முன் மண்டபத்தில் யாழ் நூல் நிலையத்திற்கு முன்னால் குணமும், ஞானமும் நின்று எடுத்த படம் தொங்கியது. அதைப் பார்த்த குணத்திற்கு மிகவும் நிம்மதி ஏற்பட்டது.

"மதுரா! எளியட்ட அவிலா பலன்ட கவுதகீல" என்று ஞானா கூறினார். உடனே மனைவி வெளியே வந்து "ஆ! மெயாத? அங்கிள் தன்." என்று கூறினாள். அதற்கு ஞான "புகையிரத நிலையத்தில் குண்டர்கள் அப்பாவி தமிழரை தாக்குகின்றனர். அங்கிளை வெளியே பாதையில் கண்டேன். உடனே இங்கு அழைத்து வந்துவிட்டேன்." என்றார்.

"சாமான் சட்டுகள் எப்படி?" என்றாள் மதுரா. அதற்கு குணராஜா ஒரு சிறிய சூட்கேஸ்தான் எடுத்துக்கொண்டு வந்து விட்டேன்" என்றார்.

கதிரையைக் காட்டி கணவன் மனைவி இருவரும் குணத்தை இருக்கும்படி கூறினார்கள். அவரும் இருந்தார். பின்பு சுடச் சுட கோப்பி பரிமாறப்பட்டது

ஞானாவைப் பார்த்து "சாப்பாடு எப்படி? முடித்துவிட்டாரா?" என்று கேட்டாள் மனைவி. அதற்கு குணம் "நான் சாப்பாடு முடித்துவிட்டு தான் புறப்பட்டேன்." என்று கூறிவிட்டு கோப்பியை அருந்தினார்.

விருந்தினர் தங்கும் அறையை மதுராவின் தாயார் துப்பரவு செய்து முடித்துவிட்டு, ஞானாவிடம் "சரி" என்றார். உடனே அவர் குணத்தை அறைக்கு அழைத்து சென்று உடை மாற்றி, கால்முகம் கழுவ உதவி செய்தார். அதற்கிடையில் மதுரா தனது கணவரின் தாய், தந்தை இருவருக்கும் குணராஜா வந்திருக்கும் செய்தியை ஓடிப்போய் கூறினாள். அவர்கள் பக்கத்தில் தான் வசித்து வந்தார்கள். அவர்கள் இருவரும் பலமுறை யாழ்ப்பாணம் சென்று குணராஜாவிடம் யாழ் சென்று தங்கியுள்ளனர். அவர்களுக்கு குணத்தை மிகவும் பிடிக்கும். உடனே இருவரும் வந்து விட்டனர். குணத்தை ஞானாவின் தந்தை கட்டி அணைத்து சுகம் விசாரித்தார்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஏன் இப்போ கொழும்பு சென்றீர்கள்." என்று ஞானாவின் தந்தை ஜெயசிங்க கேட்டார். அதற்கு குணராஜா "எனது மூத்த மகன் BSc பட்டம் பெற்றவர். இங்கு இப்போ வேலை இல்லை. எனவே சவுதிக்கு அனுப்பப் போனேன்." என்றார்.

அதற்கு பெருமூச்சு விட்டுக்கொண்டு ஜெயசிங்க "பாருங்கோ, நாடு தலைகீழாக மாறிவிட்டது. முன்பு இந்தியாக் காசுக்கு மதிப்புக் குறைவு. இப்போ எம்மைவிட அதிகரித்துவிட்டது. அரசியல்வாதிகள் சுயநலத்திற்காக இனம், மதம், மொழி என்ற மூன்றையும் பயன்படுத்துகின்ற வரை நாடு கீழே தான் போகும். இப்போ எமது சுதந்திரத்திற்கும், ஜனநாயகத்திற்கும் வயது இருபத்தொன்பது, அதிலும் அறிவு வளரவில்லை. பகைதான் வளர்கிறது. இது நாட்டை ஒரு போரின் சூழலுக்கு கொண்டு போகின்ற வேலை. இனபேதம், மதபேதம், மொழிபேதம் ஒரு நோய். சிரங்கு மாதிரி. சிரங்கு வந்தவன் சொறியச் சொறிய நல்லாய் இருக்கிற மாதிரி உணர்வான். கை எடுத்த பின்பு தான் இரத்தம் வடியும், எரியும், புண் பெருகும். அதேபோல் தான் இந்த இனவெறியும். நிச்சயம் இதற்கெல்லாம் விலை கொடுத்தே தீர வேண்டிவரும். இப்பவே நாட்டில் வேலையில்லை. அதனால் வெளிநாடு செல்ல வேண்டியுள்ளது." என்று கூறினார்.

இடையில் குணம் மறித்து "உங்களுக்குத் தெரியுமா? ஒரு கதவு மூடினால் மறு கதவு திறக்கும்." என்று கூறினார்.

ஜெயசிங்கவின் மனைவி புஷ்பா "ஐம்பத்தெட்டுக்குப் பின்பு இரு பகுதியிலும் மனிதில் ஒரு பயம் உண்டு. அதனால் அதிகம் வியாபாரிமார் சொந்த ஊர்களுக்குப் போய் விட்டார்கள். உறவு வளர்க்கப்பட வேண்டிய தொன்றே ஒழிய, ஒழிக்கப்படவேண்டிய ஒன்று அல்ல. அதேபோல் ஆங்கில அறிவையும் இந்த நாடு ஒழித்துவிட்டது. இதற்கும் ஒரு காலத்தில் மிகவும் வருந்துவார்கள். அவசரகாரனுக்குப் புத்தி மட்டம்" என்று கூறினார். அவர் ஒரு ஆங்கில ஆசிரியை. கணவர் ஒரு கல்லூரி அதிபர் BSc பட்டதாரி.

மேலும் ஜெயசிங்கா தொடர்ந்து கூறினார், "எமது கல்லூரியில் முன்பு ஆங்கிலத்தில் படித்தார்கள். இப்போ சகல பாசைகளிலும் கற்கின்றார்கள். முன்பு தமிழ் ஆசிரியர்கள் எல்லோரும் வேலை செய்தனர். அதைவிட தமிழ், சிங்கள பிள்ளைகள் ஒன்றாகப் படித்தனர். இதனால் இன வேற்றுமை குறைந்தது. இப்போது ஒருவரை ஒருவர் புரிந்து நடக்கச் சந்தர்ப்பம் இல்லை" என்று.

"இப்போ நாட்டில் எல்லோரும் வெளிநாடு சென்று கற்க அனுமதிக்கின்றனர். இடையில் அதையும் மறித்தார்கள். அரசியல்வாதிகளின் பிள்ளைகள் மட்டும் வெளிநாட்டுப் பல்கலைக் கழகங்களில் படித்தனர். இதற்கெல்லாம் தான் மக்கள் நல்லபாடம் புகட்டினார்கள்." என்று புஷ்பா கூறினார்.

"வரலாற்று பாடத்தில் ஏதோ இருட்டடிப்பு நடந்ததாக பத்திரிகையில் பார்த்தேன். இது உங்கள் இருவரின் துறை. உங்களுக்கு இதைப்பற்றி நன்றாகத் தெரியும்" என்று குணராஜாவை ஒரு வினா முன்வைத்தார்.

"ஆம்! ஆம்! எமது வரலாற்று ஆசிரியர் இது பற்றிக் கூறி, தனது அபிப்பிராயப்படி உண்மையை மறைப்பது கூடாது. வரலாற்றின் நல்ல அம்சங்கள் எமக்கு ஒரு நல்ல முன்மாதிரி யாகவும், தவறுகள் படிப்பினையாகவும் மாணவருக்கு எடுத்துக் கூறப்பட வேண்டும் மக்களும் எல்லாளன், துட்டகெமுனு பற்றி கதைக்கிறார்கள். தலதாமாளிகை அட்டகோண மேடையில் இருந்து உரையாற்றுகின்றார்கள்." என்று கூறிச் சிரித்தார் புஷ்பா.

"குணராஜா உங்களுக்கு, யாழ்ப்பாணத்து ஆட்களுக்கு அம்மையின் ஆட்சியில் மிளகாய், வெங்காயமும் நல்லாக இருந்ததாக்கும். ஆனால் பாணுக்கும், மாவுக்கும் நீங்கள் வரிசைதானே?" என்று கேட்டார் ஜெயசிங்கா.

"ஆம் அதற்கும் எந்த குறையும் இல்லை. கலகத்திற்கும் குறைவு இல்லை. இன்றைய நிலைமைக்கும் அந்த ஆட்சியின் அணுகுமுறைதான் காரணம் என்று கூறலாம். யூனிவேர்சிற்றி போன்ற நன்மைகளும் உண்டு. அதனால் தான் அக்கட்சிக்குப் பல வாக்குகள் கிடைத்தன." என்றார் குணராஜா.

"நாங்கள் அங்கு இருமுறை வந்தோம். எங்களை நன்றாக உபசரித்து அனுப்பினீர்கள். உங்களின் இடியப்ப உரல் நான் வைத்திருக்கின்றேன். உங்கள் மனைவியின் பால் அப்பம் இன்றும் எனது கணவருக்கு ஞாபகம். இடைக்கிடை அதைச் செய்து தரும்படி கேட்பார். கடவுள் உங்களை இங்கு வரப்பண்ணியது எல்லாம் எமது உறவை வளர்க்கத்தான். புகையிரத நிலையத்தில் அப்பாவி மக்கள் பற்றி ஒன்றும் தெரியவில்லை. இதை குடிவெறிகாரரும், சேரிவாசிகளும் தான் கொள்ளை இடுவதற்காகச் செய்வார்கள். நாட்டுக்காக அல்ல. இனத்திற்காக அல்ல" என்று கூறினார் புஸ்பா.

இவர்கள் மூவரும் உரையாடிக்கொண்டி ருக்கும்போது ஞானசேகராவும் மனைவி மதுராவும் வந்தனர். "காயப்பட்டவர்கள் எல்லோரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். மிகுதி மகாவித்தியாலயத்தில் தங்க வைக்கப் பட்டுள்ளனர். மூன்று பேருக்கு நிலைமை மோசமாம். பொலீஸ் காவல் போட்டுள்ளனர். தமிழ் கடை ஆட்கள் எல்லாம் மகா வித்தியாலயத்தில் இருக்கின்றார்கள். அப்பா நீங்கள் சித்தப்பாவைப் பார்த்து கதைத்து குணராஜாவை ஊருக்கு அனுப்புவது பற்றியும், அவர்கள் வீட்டிற்கு செய்தி அனுப்புவது பற்றியும் கதைத்து வாருங்கள். " குணம்! இவருடைய சொந்த தம்பி தான் பொலீஸ் பொறுப்பதிகாரியாக இருக்கின்றார்." என்று அவர் நிலைமை பற்றி ஒரு விளக்கம் ஞானசேகரா கொடுத்தார்.

"அங்கிள்! யோசிக்க வேண்டாம். எங்கள் வீதிக்கும் பொலீஸ் காவல் போட்டிருக்கிறார்கள். ஏன் என்றால் எங்கள் வீதியில் தமிழ் சனம் கூடுதலாக இருக்கின்றார்கள்." என்று மதுரா கூறிவிட்டு குணராஜாவிற்கு நல்ல நல்ல சமையல் செய்ய மாமியாரையும் அழைத்துக்கொண்டு சென்றுவிட்டாள். குணராஜாவிற்கு குளிர்சாதனப் பெட்டியிலிருந்து சோடா எடுத்துக் கொடுத்தார் ஞானசேகரா. பின்பு இருவரும் புகைபிடித்துக் கொண்டு தங்கள் பழைய கதைகள் கதைக்கத் தொடங்கினார்கள்.

"மிஸ்ரர் குணம்! நான் யாழ்ப்பாணத்தில் கடும் காய்ச்சலாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டபோது நடராஜா உங்களுக்கு என்னை அறிமுகம் செய்து வைத்தார். அதற்குப் பின்பு நீங்கள் தான் எனக்கு நேர்ஸ், அற்றன்டன் எல்லாமாக வேலை செய்தீர்கள். உணவு, தேனீர் வீட்டிலிருந்து கொண்டு வந்து தந்தது மட்டுமல்ல, எனது உடைகளையும் டோபியிடம் கொடுத்து எடுத்து தந்தீர்கள். எனக்கு அது அல்ல அந்த குமாரவேலு அற்றன்டன் சத்தியாக்கிரகத்தில் அடி வாங்கியதால் சிங்களவரை வெறுத்து வாழ்ந்தவர். என்னை முதல் இரு நாட்கள் கவனிக்காது விட்டவர். நீங்கள் அவரது வேலையைக் கச்சேரியில் பியதாசாவைக் கொண்டு முடித்துக் கொடுத்து என்னுடன் அவரை அன்பாக இருக்கச் செய்ததை நான் மறப்பேனா? அந்த மனிதன் இறுதியில் தோடம்பழம் வாங்கிக் கரைத்து தந்தவர். என்னை அணைத்து அழுத அந்த மனிதர், மனிதரைத் திருத்த முடியும் என்பதற்கு நல்லதொரு உதாரணம். விருப்பு - வெறுப்பு எல்லாம் எமது மனதில் தான். மில்டன் கூறுவதுபோல் 'மனதினால் நரகத்தைச் சொர்க்கமாக்கவும் முடியும் சொர்க் கத்தை நரகமாக்கவும் முடியும்.' எல்லாம் இந்த மனம் தான்." என்று பெரிய கதையே கூறிவிட்டார் ஞானசேகரா.

"ஞானசேகரா! நான், நீர், பியதாசா மூவரும் கீரிமலைக்குச் சென்று குளித்துக் கோவிலுக்குச் சென்றோமே; பதநீர் பருகியது ஞாபகமா? நயினாதீவுக்குச் சென்று கோவிலுக்கும், விகாரைக்கும் போனது ஞாபகமா?" என்று குணராஜா கேட்டார். அதற்கு "நல்ல ஞாபகம், அமுதசுரபிமடம் எனக்கு நல்ல ஞாபகம்." என்றார் ஞானா. மேலும் அவர் "எனக்கு நல்லூர்க் கந்தசுவாமி கோவில் வாசலில் இருவரும் வெள்ளிக் கிழமைகளில் அரை மணித்தியாலம் போக்கு வோமே, என்ன அருமையான நேரம் அது. செல்லப்பா சுவாமி, யோகர் சுவாமி, கடையிற் சுவாமி பற்றி எல்லாம் கதைப்போமே! எவ்வளவு ஆறுதல். யோகர் சுவாமியை நான் அடிக்கடி நினைப்பதுண்டு." என்றும் கூறினார்.

இதற்கிடையில் ஜெயசிங்கா வந்து, "யாழ் செல்வதற்கு தொடர் அணி ஒழுங்கு செய்யப்பட்டு இருக்கின்றதாம் என்றும், பொலீஸ் அதிகாரியான தனது தம்பி விஜயசிங்க இரவு பத்து மணிக்கு வந்து மிகுதி ஏற்பாடுகள் பற்றிக் கூறுவார்" என்றும் கூறினார். இரவு ஏழு நாற்பத்தைந்து ஆகிவிட்டது. மதுரா இருவரையும் இரவுச் சாப்பாட்டிற்கு அழைத்தார். இருவரும் சாப்பாட்டிற்குச் சென்றனர். அங்கு விஷேசமாக சமையல் செய்யப்பட்டிருந்தது. கோழிக் கறியும் இருந்தது. அவர்கள் மிகவும் மகிழ்ச்சியாக உரையாடி உணவு உண்டனர்.

பின்பு வானொலியில் செய்தி கேட்டனர். ஊரடங்குச்சட்டம் அமுலில் உள்ளதாகவும் பாதிப்புகள் பற்றியும் கூறப்பட்டது. யாழ்தேவி விடயமும் கூறப்பட்டது. சில இடங்களில் கடைகள் தீயிடப்பட்ட கதைகளும் இவர்களுடைய காதுக்கு எட்டியது.

பத்து மணிக்கு ஐந்து நிமிடம் இருக்க, பொலீஸ் அதிகாரி விஜயசிங்க ஜீப்பில் வந்தார். வந்ததும் குணராஜாவை, அவருக்கு ஞானா அறிமுகம் செய்தார். "ஹலோ குணராஜா" என்று கூறி, அதிகாரி குணராஜாவிற்குக் கைகொடுத்தார். பதிலுக்குக் குணாவும் மரியாதை செய்தார். "பயப்பட வேண்டாம். உங்கள் வீட்டில் எல்லோரும் சுகமாய் இருக்கின்றார்கள். உங்கள் சுகம் பற்றியும் உங்கள் வீட்டிற்குக் கூறியுள்ளோம். நீங்கள் காலை ஒன்பது மணிக்கு பிரயாணத்திற்கு ஆயித்தம் ஆகுங்கள். உங்களை யாழ்ப்பாணம் வரை கொண்டு சென்றுவிடுவோம்." என்று விஜயசிங்க கூறினார். பின்பு அவர் விடை பெற்றுச் சென்றுவிட்டார்.

ஞானசேகரா மனைவியிடம் குணராஜா விற்கு மதிய போசனத்தையும் தயாரித்துக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். மதுராவும் அதை மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொண்டாள். பின்பு எல்லோரும் படுக்கைக்குச் சென்றனர்.

மறுநாட்காலை வானொலியில் "பண" ஓதும் சத்தம் கேட்டு குணராஜா விழித்துக் கொண்டார். அவர் காலைக் கடமைகளை முடித்ததும் அவருக்குக் கோப்பி வழங்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்பு ஞானாவின் தாயார் இடியப்பம், சொதி, சம்பல் என்பன கொண்டு வந்து குணராஜாவைச் சாப்பிடும்படி கேட்டுக் கொண்டார். அவரும் ஞானாவும் உண்டனர்.

சரியாக ஒன்பது மணிக்கு ஜீப் வந்தது. ஞானா குடும்பத்தாரிடம் விடைபெற்று குணராஜா அதில் ஏறிச் சென்றார். அவரை அவருக்கென ஒதுக்கப்பட்ட இருக்கையில் விஜயசிங்க அமர்த்தினார். தொடரணி ஒன்பதே காலுக்குப் புறப்பட்டது. சரியாகப் பகல் ஒன்று இருபதுக்குத் தொடரணி யாழ் பஸ் நிலையத்தை அடைந்தது. குணராஜா தனது ஊரான கோட்டடிக்கு நடந்து சென்றார். ஒன்று முப்பத்தைந்துக்கு வீட்டிற்குச் சென்றார். அங்கு ஒரே கூட்டம், எல்லோருக்கும் நடந்தவற்றைக் கூறினார். அதைக்கேட்ட சிலர் "இப்படியும் சிங்களவர் இருக்கின்றார்களா?" என்று அதிசயப்பட்டனர். சிலர் "இவரும் வேண்டிக் கட்டியிருப்பார். இங்கு வந்து புளுகுகின்றார்." என்று தங்களுக்குள் கதைத்துக் கொண்டனர்.

குணாவின் தங்கையார் கூறினார் "அண்ணா! நீங்கள் அந்தச் சிங்களச் சனத்திற்கு விழுந்து விழுந்து உதவ, நான் எனக்குள் நினைக்கின்றனான் 'ஏன் அண்ணாவிற்கு இந்தத் தேவை இல்லாத வேலை, தொண்டு, தொண்டு என்று நோயாளிகளுக்கும், கோவிலுக்கும் வீணாய்ப் பாடுபடுகின்றீர்கள் என்று. இப்பதான் தெரிகிறது அந்தத் தொண்டுதான், உங்களின் உயிரைக் காப்பாற்றி, சுகமாய் கொண்டு வந்துள்ளது. இந்த அவலமான நேரத்திலும் நீங்கள் விருந்தினர் மாதிரி அல்லோ இருந்துவிட்டு வந்துள்ளீர்கள்." என்று.

அதற்குக் குணராஜா "எனக்கு யோகர் சுவாமி சொன்னவர் 'நீ நல்லாய் தொண்டு செய். இலாபம் பார்க்காதே. நீயும், பிள்ளைகளும் நன்றாக இருப்பீர்கள்.' என்று. மேலும் எனது மனம் கண்ணாடி மாதிரி. அதில் ஒரு அழுக்குப் படிய விடமாட்டேன். ஒருவருக்கும் தீமை நினைப்பதும் இல்லை. செய்வதுமில்லை. யார் யாருக்கு எப்படி உதவ முடியுமோ அப்படி எல்லாம் உதவுவேன். அதுதான் கடவுள் எனக்கு இந்த ஆபத்திலும் நண்பன் மூலம் உதவி ஒத்தாசை செய்தவர். அது அல்ல நான் உதவி செய்த ஆளே எனக்கு இப்படி ஒரு நேரத்தில் உதவியது அதிசயத்திலும் அதிசயம். எல்லாம் கடவுள் செயல்." என்றார். பின்பு மனைவி, பிள்ளைகளுடன் புஷ்பா கொடுத்த உணவையும் பங்கிட்டுச் சந்தோஷமாக உண்டார்.

குறிப்பு:- 1977ல் நடைபெற்ற ஒரு உண்மைச் சம்பவத்தை அடிப்படையாக வைத்து எழுதப்பட்டது. தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சு தேசியரீதியாக நடாத்திய சிறுகதைப் போட்டியில் பணப் பரிசிலும் சான்றிதழும் பெற்ற சிறுகதை

■

# வீரியம்

**ஆதிலட்சுமி சிவகுமார்**

*காற்றை அள்ளி வீசுகிறது*
*ஒரு காலைப் பொழுது!*
*காலாற மெல்ல நடக்கிறேன்...*
*உரசி உரசி*
*உஷ்ணத்தால் வெந்து தணிந்த*
*மூங்கிற் காட்டின் வெறுமை என்னுள்!*
*கண்முன்னே...காலடியில்...*
*தன்னை மூடிக்கிடந்த*
*மண்ணைப் பிளந்துகொண்டு*
*மூச்சாய் வெளிவந்திருக்கின்றது*
*முளையொன்று!*
*புதையுண்டு போகாமல்*
*வீச்சோடு வெளிவருகிறதே!*
*எப்படிச் சாத்தியம்...?*
*என்னுள்ளே இப்போது*
*வியப்புக் குறிகள்!*
*உருக்கெள்ளும் கிளைகள்*
*வானைத்தொடுவதற்கு முயற்சிக்க...?*
*உள்ளே அதன்வேர்கள்*
*வாழ்வினை உறுதி செய்ய...*
*என்னமாய் இந்த எழுச்சி...?*
*இந்த முளை விருட்சமாகி*
*ஆயிரமாய் பூக்கும்...*
*பூக்கள் புதிதாக*
*விதைகளை உருவாக்கும்...*
*விதைகள் விழும்...புதையும்!*
*ஆனால் மீண்டும் முளைக்கும்...*
*இப்போது எனக்குள்*
*குளிரோடை பாய்கிறது*
*வெறுமை விலகி...*
*இதயத்துச் சாம்பல் மேட்டில்*
*நம்பிக்கை எனும்முளை முகிழ்க்கிறது!*
*"வீரியமுள்ளவை வாழும்..."*
*காலைக்காற்று...*
*காதுக்குள்வந்து கிசுகிசுக்கிறது!*

நன்றி:
"கவிதை"
சித்திரை வைகாசி 1995
ஆசிரியர் அ. யேசுராசா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூலகும் புதுயுகம் படைப்போம்

அடுக்களையில் அடங்கியிருந்த
காலங்கள் போதும்...
புறப்பட்டு வாருங்கள் தோழிகளே
புதுயுகம் படைப்போம்!

எல்லாத் துறைகளிலும் எம்மவர் சாதனைகள்
எமக்கு ஏன் ஆதிக்க போதனைகள்
விண்வெளியில்கூட எம் தோழிகள்
கால் தடங்கள்
யார் போடுவது நம் கால்களுக்கு
விலங்குகள்

பூ என்று உன்னைச் சொல்லி
கசக்கிய காலங்கள் இனி வேண்டாம்
தேவையெனில் புயலாயும் நீ மாறிடு

நிலாவென்று உன்னைப்பாடி
தேய்பிறையாக்கிய துயரங்கள் போதும்
உனை அடக்குபவரை சூரியனாய்
சுட்டெரித்திடு....

அச்சம் மடம் நாணமெல்லாம் - நீ
உச்சம் தொட தடையெனில்
தூரத்தே தூக்கி எறிந்திட்டு
புறப்படு சிகரம் தொட
போர்க்களங்களில் கூட நம் சகோதரிகள்
சாதனை நீ அறிவாய்....

ஆணுக்கு பெண் துணை
பெண்ணுக்கு ஆண் துணை
இதுதான் இறைவனின் படைப்பு
யாருக்கும் யாரும் அடிமையில்லை
இதுதான் நீதியின் தீர்ப்பு

ஒரு உயிரை சுமக்கும் வரம்
உனக்கு மட்டும் கொடுத்தான் இறைவன்
ஒருபடி உன்னை உயர்த்தி வைக்கவே தவிர
சுமையாய் அல்ல என்று உணர்ந்து கொள்...

ஆனாலும் உன் கடமைகளை
மறந்துவிடாதே பெண்ணே....

ஆடைகளில் மட்டும் கேட்பதல்ல
சுதந்திரம்...
அடிமை விலங்கொடிப்பதுதான்
விடுதலை
நாகரீக சந்தைகளில் நீ வியாபார
பண்டமாய் விற்கப்படும்போதும்

விளம்பர பதாகைகளில் உன்
வெற்றுடல் காட்சிகளிலும்...

வழி தவறி பெற்ற குழந்தையை - நீ
குப்பைத் தொட்டியில் வீசிடும் போதும்.....

வெட்கித் தலை குனிகிறது பெண்மை...

ஆதலால்... உன் தவறுகளையும் களைந்திடு
பாரதி கண்ட புதுமைப்பெண்ணாய்
புறப்படு பெண்ணே புறப்படு

உன் அடிமை விலங்கொடித்து
புதிதாய் நீ பிறப்பெடு.

ஞானசேகரம் சுஜந்தா
யாழ் பல்கலைக்கழகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நம் காலத்தில் வாழ்ந்த இசைக் கலைஞன்

## வயலின் வித்துவான்
## பிரம்மஸ்ரீ.சி.சோமாஸ்கந்த சர்மா
(1.3.1926 – 8.11.2011)

யாழ்ப்பாணம் மூளாயில் வைதீக பாரம்பரியம் மிக்க குடும்பத்தில் சிவசாமிக்குருக்கள் வாலாம்பிகையம்பாள் தம்பதிகளின் இரண்டாவது சற்புத்திரனாக 1.3.1926 இல் பிறந்த சோமாஸ்கந்த சர்மா தனது ஆரம்பக் கல்வியை மூளாய் சைவப்பிரகாச வித்தியாசாலையிலும் பின்னர் மாதகலில் உள்ள கிருஸ்தவப் பாடசாலையிலும் பயின்றார். தந்தையார் 10 வயதிலே காலமாகிவிட தாயாரின் அரவணைப்பில் வளர்ந்தார்.

சிறிது காலம் மூளாய்ப் பிள்ளையார் கோயிலில் நித்திய பூஜை செய்து வந்தார். குல வழக்கப்படி சம்ஸ்கிருதம் படிக்கப் பறாளாயிலிருந்த சீதாராம சாஸ்திரிகளிடம் சென்றார். குருகுல முறைப்படி சாஸ்திரிகள் வீட்டிலிருந்து கற்ற போதிலும் ஆலய கிரியை முறைகளை அறிந்து கொள்வதிலும் சம்ஸ்கிருதத்திலும் நாட்டம் செல்லவில்லை. இசையில் - வயலின் மீது இருந்த நாட்டம் காரணமாகத் தன்னைத் தாயாரிடம் கொண்டு சென்று விடுமாறு சாஸ்திரிகளிடம் வேண்ட, சாஸ்திரிகளும் அவ்வாறே செய்தார்.

தனது ஆரம்ப கால இசைப் பயிற்சியைச் சோழமுத்து என்ற நாதஸ்வர வித்துவானிடமும் வயலினை வித்துவான் சிங்காரவேலு என்பவரிடமும் கற்றுக்கொண்டார். தொடர்ந்து வயலின் இசை நுணுக்கங்களை வித்துவான் வயித்தியநாத சர்மாவிடம் கற்றுத் தேறினார். அக்காலப் பகுதியில் யாழ்ப்பாணம் சுப்பிரமணியம் பூங்காவில் மாலை 6.00 மணி முதல் இரவு 10.30 வரை இந்திய வானொலியை ஒலிபரப்பக் கேட்கலாம். இந்திய வானொலியில் இசைக் கச்சேரிகளைக் கேட்கிறபோது இலங்கையில் உள்ள வயலின் வாசிப்பு முறைக்கும் இந்தியாவில் உள்ள வாசிப்பு முறைக்கும் இடையே நுட்பமான வேறுபாடு இருப்பதை உணர்ந்த சோமாஸ்கந்த சர்மா இந்தியா சென்று கற்கவேண்டும் என்று தாயாரிடம் வேண்டினார். தாயார் வீட்டைவிற்று மகனை இந்தியாவிற்கு அனுப்பினார். அங்கு சந்தானம் என்ற புகழ் பெற்ற வித்துவானிடம் வயலின் கற்கப் போனார். வயலின் வித்துவான் சந்தானம் சோமாஸ்கந்த சர்மாவை முதலில் ஏற்க மறுத்தார். எனினும் சங்கீதத்தில் பற்றுக்கொண்டு கடல் தாண்டிக் கற்க வந்ததால் ஏற்றுக்கொண்டு இசை நுட்பங்களைக் கற்பித்தார். 3 வருடங்கள் இவரிடம் கற்று வந்தார். இலங்கையில் இருந்து பணம் அனுப்ப முடியாமல் தாயார் கஸ்டப் படுவதை அறிந்து குருவிடம் இருந்து விடைபெற்று இலங்கை திரும்பினார்.

தாயாருடனும் இரு சகோதரிகளுடனும் வில்லூன்றிப் பிள்ளையார் கோயிலுக்கு அண்மையில் இஸ்லாமியருக்குச் சொந்தமான காணியில் கொட்டில் அமைத்து வாழ்ந்து வந்தார். பெரும் செல்வந்தராக இருக்கவேண்டியவர் ஏழையாக வாழ்ந்தார்.

**மு. பா. துவாரகன்** ~ ஏழாலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இந்நாட்களில் 50 சதத்திற்கு வாங்கிய மரவள்ளிக் கிழங்கே இவர்களது 3 வேளை உணவாகியது. 10 வயதில் தந்தையார் காலமாகிவிட தமக்குரிமையான நிலபுலங் களையோ கோயிற் பங்குகளையோ அறியா திருந்தார். மூளாய்ப் பிள்ளையார் கோயில், உரும்பிராய் கருணாகரப் பிள்ளையார் கோயிற் பங்குகளில் உரித்திருந்தும் பெற்றுக் கொள்ள விரும்பியதில்லை. கொட்டிலில் இருந்தவாறே தான் இந்தியாவில் கற்றவற்றை இரவு பகல் பாராது வயலினில் வாசித்து வருவார். ஒரு நாள் வயலின் வாசித்துக் கொண்டிருந்தபோது ஆனைக்கோட்டையைச் சேர்ந்த மிருதங்க வித்துவான் இரத்தினம் என்பவர் அவ்வழியே சென்கிறார். சோமாஸ்கந்த சர்மாவினது வயலின் நாதத்தினால் கவரப்பட்டுக் குடிசைக்குள் வந்து பார்க்கிறார். இவ்வளவு சிறந்த நாதத்தை வைத்துக்கொண்டு இங்கிருந்து கஸ்டப்படு கிறீர்களே? உங்களுக்கு வீடும் கச்சேரியும் ஒழுங்குபடுத்தித் தருகிறேன் என்று ஆனைக்கோட்டைக்கு அழைத்துச் சென்றார். சோமாஸ்கந்த சர்மா என்ற வயலின் வித்துவானது வாழ்வில் இது திருப்புமுனையாக அமைந்தது.

சாவகச்சேரியைச் சேர்ந்த சுந்தராம்பாள் என்ற பெண்ணை 33வது வயதில் திருமணம் செய்து கொண்டார். இல்லறத்தின் பேறாக மூன்று பெண்பிள்ளைகளையும் இரண்டு ஆண்பிள்ளை களையும் பெற்று மகிழ்ந்தனர். பிள்ளைகளை வாத்திய இசையிலும் வாய்ப்பாட்டிலும் வல்லவர்களாக்கினார்.

சோமாஸ்கந்த சர்மா ஈழத்தின் அநேக வாய்ப்பாட்டுக்காரர்களுக்குப் பக்கவாத்தியக் கலைஞராக விளங்கினார். இசை விற்பன்னர்களான சங்கீதபூஷணம் சண்முகரத்தினம், ராம் குமாரசுவாமி, திரிபுரசுந்தரி குமாரசுவாமி, பரம் தில்லைராஜா போன்றோரின் இசைக்கச்சேரிகள் இவரது பக்கவாத்திய இசைமூலம் சோபிதம் பெற்றன. மேலும் புகழ்பெற்ற நாட்டியக்கலைஞர்களான வாசுகி, சுப்பையா, திருபுரசுந்தரி, வேல் ஆனந்தன் முதலானவர்களின் நடன நிகழ்வுகளில் வயலின் வாசித்திருப்பதை மகிழ்வுடன் நினைவு கூர்ந்தார். புலூட் சுவாமிநாத பிள்ளை, பேராசிரியர் சித்தூர் சுப்பிரமணிய பிள்ளை போன்ற புகழ்பெற்ற இந்திய வித்துவான்களுக்கும் பக்கவாத்தியம் வாசித்த பெருமைக்குரியவர்.

1971.10.22 முதல் இலங்கை வானொலியில் வயலின் வித்துவானாக இணைந்து கொண்டார். 1983 வரை முதல் தரக் கலைஞராக 12 ஆண்டுகளுக்குமேல் கடமையாற்றினார். 1983 இல் ஓய்வுபெற்ற பின்னரும் அமைய அடிப்படையில் பல வருடங்கள் பணிபுரிந்தார். டட்லி சேனநாயக்க இறந்த போது இவரது வயலினில் இருந்து வந்த நாதம் வானொலி வாயிலாக சோககீதமாக நாடெங்கும் பரவியது. மறைந்த சனாதிபதி ரணசிங்க பிரேமதாசாவின் வீட்டுத் திட்டங்கள் பொதுமக்களிடம் கையளிக்கும் வைபவங்களின் போது இடம் பெறும் கலை நிகழ்வுகளிலும் வயலின் வாசித்திருக்கிறார். இலங்கை வானொலிக்கு வரும் இந்தியக் கலைஞர்கள் அனேகம் பேருக்கு பக்கவாத்தியமாக வயலின் வாசித்திருப்பதைப் பேறெனக் கருதினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தினமும் இரவில் வயலின் வாசித்து விட்டுத்தான் நித்திரைக்குச் செல்வார். சிலநாள்களில் நேரம் போவதே தெரியாமல் அதிகாலை 5.00 மணி வரை வாசித்துக் கொண்டிருப்பார். தனது 85 ஆவது வயதிலும் தினமும் வாசித்துக் கொண்டிருந்தார்.

கலைஞனிடம் உள்ள எளிமையும் கனிந்த பேச்சும் இன்முகமாக அனைவரையும் வரவேற்கும் பண்பும் அவரிடம் என்றும் குடி கொண்டிருந்தன. அவருக்குக் கிடைத்த இல்லாள் அவருக்கு மெய்வருத்தம் பாராது பணிவிடை செய்து வாழ்வித்த பெருந்தகை. சோமாஸ்கந்த சர்மா என்ற வயலின் வித்துவானைச் சில ஆண்டுகளுக்கு முன் ஏற்பட்ட நோயிலிருந்து தன் பணிவிடையால் உயிர் பெற்றெழச் செய்தவர் அவர்தம் இல்லாளாகிய அம்மையார். சோமாஸ்கந்த சர்மா என்ற கலைஞனைக் கரம் பிடித்த நாள்முதல் போற்றிப் பாதுகாத்தார். சோமாஸ்கந்த சர்மா கடந்த 25 ஆண்டுகளுக்கும் மேலாக கொழும்பிலே வசித்து வந்தார். 8.11.2011 அன்று அதிகாலை அவரது ஆன்மா இசையுலகை விட்டு நீங்கியது.

'இவரது பெரும்பகுதி நாள்கள் வயலின் இசையிலேயே கழிந்தன எனலாம். இரவு 1.00 மணிவரை ஏகாந்தமாக அமர்ந்து வயலினை மீட்டி இரவுக்கு மெருகேற்றுவார். வயலின் இசைக்கும்போது இவர் அமர்ந்திருக்கும் விதமே அலாதியானது. மெல்லிய தலை அசைவு, அங்க சேட்டைகள் எதுவுமின்றி இடதுபாதம் லயத்துடன் தாளம்போட மெல்லிய புன்சிரிப்புடன் வயலின் வாசிக்கும் போது பார்க்கவும் கேட்கவும் உள்ளத்தில் அமைதியும் ஆனந்தமும் ததும்பும். அளவான உணவுப் பழக்கம், தவறாத உடற்பயிற்சி, எதற்கும் அலட்டிக் கொள்ளாத மனப்பாங்கு, தானுண்டு தன் வயலின் உண்டு என முறையான வாழ்க்கை வாழ்ந்தவர்.' என்று இவரது மாணவியும் மைத்துனியுமான திருமதி.மகாலக்ஷ்மி குறிப்பிடுவது இசைக்காக வாழ்ந்த சோமாஸ்கந்த சர்மா என்ற கலைஞனை எம்முன் தரிசனமாக்குகிறது.

இவரிடம் பலர் வயலின் கற்றிருந்தனர். எனினும் இவரைப்போலவே விரல் வாசிப்பில் வல்லமைபெற்றிருந்த மாணவன் வெங்கடேஸ்வரன் இளமையிலே இவ்வுலகை விட்டுப் பிரிந்தது ஒரு இசைப்பாரம்பரியத் தொடர்ச்சிக்கு ஏற்பட்ட பேரிழப்பாகும்.

இவரது இசைத் திறமையைப் பாராட்டி பல்வேறு அமைப்புக்கள் விருதுகளை வழங்கியள்ளன. ஈழநாட்டுப் பத்திரிகை அதிபர் 'ரன் கலைமணி' என்று பட்டமும் மதுரை மீனாச்சி அம்மன் கோவில் மதுரை ஆதினஸ்வாமிகள் மூலமாக 'கலைமாமணி' என்ற பட்டமும் வழங்கப் பெற்றார். பின் வானொலி நிலைய நிகழ்ச்சிகள் மூலமாக 'கலாபூஷணம்' விருதினையும் பெற்றுக் கொண்டார். இந்திய நடிகர் சரத்பாபு அவர்களினால் 'கலாமணி' என்ற பட்டமும் வழங்கி கௌரவிக்கப்பட்டார். இருபது வருடங்களுக்கு மேலாக இலங்கை வானொலியில் முதல் தர வயலின் வித்துவானாகக் கடமையாற்றி 1000 இற்கும் மேற்பட்ட தனிக் கச்சேரிகளையும் பல நூறு பக்கவாத்திய இசை நிகழ்ச்சிகளையும் வழங்கிய நம் காலத்தில் வாழ்ந்த இசைக்கலைஞனின் ஓர் ஒலிப்பேழை கூட இன்று நம்மிடம் இல்லை. நம் சந்ததிக்கு இப்படி ஒரு கலைஞன் வாழ்ந்ததை எப்படிச் சொல்வோம். இலங்கை வானொலிக் கலையகத்தில் இருந்து 20 ஒலிப்பேழை களையாவது பெற்று நம் சந்ததிக்குக் கையளிக்க அவர்தம் குடும்பத்தவர்கள் முன்வரவேண்டும். ■



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின் நவீனத்துவ நாடகவியலாளர்

# அரியானே மொச்சுகினி

## (Ariane Mnochukine)

பின் நவீனத்துவ நாடகவியலாளர்களில் முக்கியத்துவம் பெறுபவராக அரியானே மொச்சுகினி விளங்குகின்றார்.இவர் பிரான்ஸ் நாட்டை சேர்ந்த பிரெஞ்சு மொழி பேசுகின்ற பெண் நாடகவியலாளர் ஆவார். இவர் தனது செயற்பாடுகளிற்கான இயங்கியலை ஆபிரிக்க பின்னணியில் கொண்டிருந்தார். பின் நவீனத்துவ நாடக செயற்பாட்டாளர்களில் முக்கிய இடத்தைப் பெறுகின்ற இவர், 20ம் நூற்றாண்டின் பின் அரைவாசிக் காலப்பகுதியை, பின் நவீனத்துவ சிந்தனையிலான நாடகசெயற் பாட்டுக்குள் கொண்டு வருகின்றார்.

பிரான்ஸ் நாடகத்தின் இன்றைய முக்கிய நெறியாளராகிய அரியானே, உலகளாவிய அரங்க அம்சங்கள் அனைத்தையும் ஒன்றாக சங்கமிக்கச் செய்கிறார். பின் நவீனத்துவ சிந்தனையில் மேற்கத்தேய நாடகமரபையும் கீழைத்தேய நாடக மரபையும் ஒழுங்கிணைத்து ஒரு சர்வதேச நாடக அரங்கொன்றை தோற்றுவித்தல், இவரது பணிகளில் முக்கியத் துவம் வாய்ந்த ஒன்றாக விளங்கியது.

**கருத்தியல்**

இன்றைய பின் நவீனத்துவ கருத்தியலில் முழு உலகமும் ஒரு கூடையாகப் போயுள்ளது. (அனைத்துலகக்கிராமமாய் மாறியுள்ளது) முழுமானிடரும் ஒரு கிராமத்தில் நசிகின்றனர். அக்கிராமம் தான் பூமி. கிராமத்தில் பல இனங்களும் கலாசாரங்களும், மொழிகளும் வாழுகின்றன. இத்தகைய சிந்தனையில் ஒரு கலப்பு கலாச்சாரத்தை உலகளாவிய நாடக நிலையில் அரியானே உருவாக்கி இருக்கின்றார். ஒவ்வொரு நாடகத் தயாரிப்பிலும் ஒவ்வொரு விதமான அம்சங்கள் முக்கியம் பெறுகின்றன. இவரது கருத்துநிலையில்

1. வரலாற்றுப்பார்வை - பூமிபோன்ற பெரியகிராமத்தில் தேவையில்லாத சண்டை, சச்சரவு, புரட்சிகள் நடக்கின்றன. எமது வாழ்விற்கு அர்த்தமில்லாத அம்சங்கள் வந்து போகின்றன. அரியானே வரலாற்றுப் போர்களை ஓர் கண்ணோட்டத்தில் பார்க்கின்றார். தேவையில்லாது மனிதர்கள் கொல்லப் பட்டார்கள் என்பதாக அவருடைய வரலாற்றுப் பார்வை அமைகின்றது.

2. இதுவரை ஐரோப்பிய நாடகம் என்றும் இந்திய, சீன, ஜப்பானிய நாடகம் என்றும் பிரிந்து வைத்து இருக்கின்றனர். இத்தகைய வரலாற்றுப் பாதைக்கு கூடாக ஐரோப்பிய நாடக மரபுக்குள் ஏனைய நாடக மரபுகளை இணைத்து சர்வதேச நாடகமரபொன்றை அரியானே தோற்றுவிக் கின்றார்.

அரியானே ஒரு யூதப்பெண். ஐரோப்பிய போர், பிரான்ஸிய காலனித்துவப் போர் என்பன அவருக்கு அர்த்தமற்ற வெளிப்பாடாய்த் தெரிந்தன. மனிதன் போருக்குள் இறங்கமாட்டான்; போர் அவன் மீது திணிக்கப்படுகின்றது. அடித்தளமான பிரான்ஸ் கலாச்சாரம் ஆபிரிக்க அல்ஜீரியாவையும் கம்போடியாவையும் அடக்கி ஆண்டிருக்கின்றது. இவ்வாறான போரினை அர்த்தமற்றது என அரியானே எடுத்து விமர்சனம் செய்கின்றார்.

**எஸ்.ரி.குமரன்** BA (Hons),M.A
நாடகமும் அரங்கியலும் ஆசிரியர்
யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடகக்கருத்தியல்

இவருடைய நாடகப்படைப்புக்கள் உலகளாவிய அரங்குகளை இணைக்கின்றன. அரசியல் பொருளாதார சூழலில் எந்த வகையான கருத்தியலை நாடகத்தில் உருவாக்க போகின்றோம் என்பது சிந்தனைக்குரியது.

1. தப்புகின்ற வழி - பாரம்பரியம், ஐதீகம், பண்பாடு, சமயம், கிராமிய கலாசாரம் இவற்றுக்குள் இருந்து நாடகங்களை உருவாக்குதல். இங்கு கலைப்படைப்பை வாங்குவோம், பாவிப்போம், தூக்கி எறிவோம், விமர்சன நோக்கில் பார்க்கமாட்டோம். இவ்வாறான நாடகங்கள் உருவாக்கப்படலாம்.இது வரையறுக்கப்பட்ட பாதுகாப்பான வெளியாக அமைகின்றது.

2. நடிகன் சுருங்கிக் கொண்டு போக பார்வையாளர் தூண்டப்படுதல்-இங்குபடித்த உயர்வர்க்கம் அரங்கை உருவாக்கும். கலாச்சாரம், மேலைத்தேயம், கீழைத்தேயம் இரண்டையும் உள்வாங்கி உருவாகின்றது. உதாரணம் மொழி பெயர்ப்பு நாடகங்கள். இங்கு வசதி படைத் உயர் வர்க்கத்திற்கு அரங்கை உருவாக்குதல் முக்கிய பணியாகும். இத்தகைய நாடகங்களுக்கு சிறிய அளவிலான எதிர்காலம் மட்டுமே உண்டு. எங்களால் படைக்கப்படும் கலைப்படைப்பிற்கு பணம் தேவைப்படுகிறது. பணம் உள்ளவர்களிடம் போகின்றபொழுது அவர்களுடைய கருத்தியல் உள்வாங்கப்படுகிறது.

3. எங்களுடைய ஒடுக்கப்பட்ட நிலையிலிருந்து அரங்கை உருவாக்குதல். உண்மையில் ஒடுக்கப்பட்ட மக்கள் மட்டத்தில் நாடகம் போக வேண்டும். மக்களிடம் போகின்றபோது சில வேளைகளில் திசை தெரியாமல் கூடப் போகலாம்.அரியானே இதைச் செய்யப் பார்க்கிறார். கீழ்மட்டங்களில் அழுகை, துன்பம், வாழ்வாதாரப் பிரச்சினை, இருப்பு போன்ற வடிவங்களைக் கொண்டு நாடகத்தை உருவாக்குகின்றார். இன்றைய நிலையில் இனக்கலாசார வரையறை கிடையாது. மேற்கு கிழக்கிலும் கிழக்கு மேற்கிலும் கடன் வாங்கி எல்லாம் ஒன்றாய் வந்து ஒரு கூட்டுக்குள் ஒன்று சேர்ந்து 1/10 பங்கு மக்களுடைய கருத்தியலை எடுத்து உருவாக்கப் படுகின்றது. கருத்தியல் கீழ் மட்டத்தில் இருந்து மேற்கிளம்புகின்றது. போரினால், உலகநிதி வீழ்ச்சியினால் வீதியில் நிற்கும் தொழிலாளர் பிரச்சினை போன்றவற்றில் இருந்து கருப்பொருளை எடுத்துக் கையாள்கின்றார்.

நாடக வடிவம்

அரியானே கீழைத்தேய, மேலைத்தேய நாடக கருத்தியலை உள்வாங்கி, புதிய நாடகவடிவத்தை உருவாக்குகின்றார். கிரேக்க நாடகவடிவத்தை எடுத்து கீழைத்தேய பரதநாட்டிய அம்சத்தைப் புகுத்தி புதிய வடிவமாக்குகின்றார். முகமூடிகளைத் தன் நாடகப்படைப்புக் களில் பயன்படுத்துகின்றார்.

யப்பானிய கபுக்கி அரங்கை கொணர்ந்து சேக்ஸ்பியருடைய 2ம் றிச்சர்ட் நாடகத்தை ஆற்றுகை செய்தார். சேக்ஸ்பியருடைய 4ம் ஹென்றி நாடகத்தை ஊம அளிக்கையாக ஆற்றுகை செய்தார். இன்றைய வரலாற்று சம்பவங்களும் ஊமமாய் இவரது படைப்புக்களில் வெளித்தெரிகின்றன.

ஆபிரிக்க நாடக வேடத்தை பிரஞ்சு காரரைக்கொண்டு ஆடவைத்தார். இவருடைய படைப்புக்களில் முகமூடி முக்கியமான அம்சமாக வெளித்தெரிகின்றது. இந்தியாவின் முகமூடியை பயன்படுத்தி பாலித்தீவில் இராமாயணம், மகாபாரதம் ஆடப்படுகின்றன. அங்கு பயன்படுத்தப்படுகின்ற மரமுகமூடி போன்றவற்றை தனது படைப்புக்களுக்குக் கடன் வாங்குகின்றார். அதேவேளை நாடகத்திற்கு இசையினை முக்கிய மூலக்கூறாகப் பயன்படுத்துகின்றார்.

உலகின் எல்லாப் புரட்சிகளும், தேசியப்போராட்டங்களும் இவர் நாடகக் கருவாகின்றன. நாடக உட்கரு சர்வதேச மயமாகின்றது. நாடகம் தோற்றவர் நோக்கில் இருந்து எழுதப்படுகின்றது. இங்கு சொற்கள் முக்கியமில்லை. சிலசில வசனங்களை எடுத்து திரிபுபடுத்திப் பார்க்கின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரங்கு

அரங்கப் போக்கிலும் மாற்றத்தைக் கொண்டு வருகிறார். பார்வையாளன் அரங்குக்கு போகக்கூடியதாகவும், நடிகன் பார்வையாளருக்குள் போகக் கூடிய மாதிரியும் இவரது ஆற்றுகை அமைகின்றது. சிறிய மேடைகள் வைக்கப் பட்டிருக்கும். சிறிய இடம், பார்வையாளர் உயர்த்தப்பட்ட படிகளில் இருப்பார். கீழே நாடகம் நடக்கும். நாடகம் பார்ப்பவர் இடையில் எழுந்து வேறு வேலைக்குப் போகலாம். பார்வையாளர் தான் நாடகத்தை நகர்த்திக்கொண்டு போக வேண்டும். சமூகம் உடைந்து போய் இருக்கின்றது. நாடக மேடை ஒன்றாய் இருக்கத் தேவையில்லை என்பது இவருடைய கருத்தாக அமைகின்றது. நாங்கள் உலக மரபுக்குள் பிரவேசித்து விட்டோம் உலக பொதுமையாய் நாடகம் வரவேண்டும்

மக்களுடைய அரங்கு மக்கள் கருத்தை பிரதிபலிக்கின்றது.இதுதான் பின் நவீனத்துவ அரங்கு. பின் நவீனத்துவத்தில் மொழிக்கு முக்கியத்துவம் இல்லை. பலவிதமான குரல்கள் வரலாம். பலவிதமான வேடஉடைகள் வரலாம். பண்பாட்டைப்பிரதிபலிக்கும் போது கேள்வியோடு பிரதிபலிக்க வேண்டும். முன்னய கலாச்சாரத்தை மையமாகக்கொண்டு நாடகத்தை தயாரிக்கப் போகிறோமா? அல்லது மாறிவரும் கலாச்சரத்தை வைத்து தயாரிக்க போகிறோமா என்ற வினாக்களுக்கு விடைகாண வேண்டும்.

உலகம் யுத்தத்தினால் துன்பப்படுகின்றது. அவ்வவ் நாட்டுப் பிரச்சனைகளுடன் ஒப்பிட்டு நாடகம் செய்யப்படுகின்றது. மேல் மட்டத்தில் இருப்பவர்கள் தான் இரத்தத்திற்கு காரணம் மேல் மட்டம் சந்தோஷத்தை அனுபவித்துக் கொண்டிருக்க,கீழ்மட்டம் வேதனையை அனுபவித்துக் கொண்டு இருக்கின்றது. இதனை அரியானே தனது படைப்புகளில் பிரதி பலிக்கின்றார்.வரலாற்றின் நீரோட்டத்தில் எடுக்கப்பட்ட மக்கள் தான் அரங்கை அலங்கரிப்பர். இவரது நாடகங்கள் இலவசமாக நடத்தப் படுகின்றன. கிராமம் நோக்கி நகர கிராமத்தவர் களுடைய ஆதரவு கிடைக்கின்றது. அரியானே இதனை பயன்படுத்துகின்றார். வருங்காலம் எவ்வாறு அமைய வேண்டும் என்பதைத் தனது படைப்புக்களின் ஊடாகப் புலப்படுகின்றார். ■


## வெள்ளிமலை 6வது ஆண்டு மலர்

*கடந்த ஆறு ஆண்டுகளாக வெளிவந்து கொண்டிருக்கும் வெள்ளிமலை - வலிகாமத்தின் வளங்கள், திறன்களை எடுத்துக் காட்டும் - பிரதேச சஞ்சிகையின் 6வது ஆண்டு நிறைவையொட்டிய சிறப்பு மலர் மாவட்ட உள்ளூராட்சி பொதுசன நூலகங்களின் வரலாற்றையும் மாவட்ட நூலக சேவைக்குப் பங்காற்றிய நூலகத் துறையினரின் வரலாற்றையும் ஆவணப்படுத்தும் விதமான சிறப்பு மலராக வெளி வரவுள்ளது.*

*இம் மலருக்கு ஏற்ற விதமாக யாழ் மாவட்டத்திலுள்ள நூலகங் களின் தோற்றம், அதனை உருவாக்கப் பாடுபட்டவர்கள், உள்ளூராட்சி மன்றத்தினர், அங்கு பணியாற்றிய, பணியாற்றிக் கொண் டிருக்கும் நூலகத் துறையினர் பற்றிய தகவல்களுடன், அதற்கு அமை வான புகைப்படங்கள், நிகழ்வுகளின் படங்களுடன் கட்டுரைகள் 31.10.2012க்கு முன்னர் ஆசிரியர், 'வெள்ளிமலை' சுன்னாகம் பொது நூலகம் சுன்னாகம், என்ற விலாசத்துக்கு அனுப்பி வைக்கலாம்.*





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வலிகாமப் பகுதிப் பறவைகள்

சௌ. ஸ்ரீஹர்ஷன்
இயற்கை அவதானிப்பு கழகம், தெல்லிப்பழை மகாஜனக்கல்லூரி

'இயற்கை, இன்பங்களின் பூந்தோட்டம். அது இல்லாமல் நாமில்லை..' நாம் வாழும் வலிகாமம் பகுதி சுண்ணாம்பு பாறைகளால் ஆக்கப்பட்ட ஒரு பிரதேசம். விரைவிலேயே மாசடைவாலும், பிற காரணிகளாலும் பாதிக்கப்படக்கூடிய பகுதி. இங்கு வாழும் நாம் தான் எம் பகுதியைப் பற்றிக் கவலைப்படவேண்டும். எம்பகுதி மண்ணரிப்பாலும், தொழிற்சாலை கழிவுகளாலும் அழிக்கப்படுவது கவலையளிக்கிறது. இக்காரணிகளைக் கட்டுப்படுத்தி இயற்கைச் சமநிலையுடன் பேணப்பட வேண்டும் என்ற எண்ணத்துடனேயே இப்பகிர்வைச் சமர்ப்பிக்கிறேன்.



திரு.அசோகனுடன் சிங்கராஜவனம் சென்ற குழு மரங்களின் வளர்ச்சி பற்றிய விளக்கம் அளிக்கப்படுகிறது.

தெல்லிப்பழை மகாஜனக்கல்லூரி மாணவனான நான் 2010ம் ஆண்டு பாடசாலை மூலமாகச் சிங்கராஜவனத்திற்குச் சென்றேன். அங்கே சூழலியல் விஞ்ஞானி பேராசிரியர். சரத் கொடகம (விலங்கியல் பீடம், கொழும்பு பல்கலைக்கழகம்) மற்றும், கணபதிப்பிள்ளை அசோகன் மூலமாகப் பெற்ற அனுபவமே இயற்கை தொடர்பான விடயங்கள் மீது எனக்கு ஆர்வத்தை ஏற்படுத்தியது.

இயற்கை சம்பந்தமாகவும் அதன் இன்றைய நிலை தொடர்பாகவும் பல விடயங்களை அறிந்து கொண்டேன். பாடசாலை அதிபர் திருமதி. சிவமலர் அனந்தசயனன் (இன்றைய ஓய்வு நிலை அதிபர்), ஆசிரியர்களுடன் கலந்தாலோசித்து பாடசாலை மட்டத்தில் இயற்கை சார்பான அமைப்பு நிறுவப்படவேண்டிய அவசியத்தை எடுத்துரைத்ததன் விளைவாக எம் பாடசாலையில் சூழல் அவதானிப்புக்கழகம் அமைக்கப்பட்டு பல ஆக்கபூர்வப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அவற்றுள் முக்கிய பணி "இயற்கை" என்னும் பெயர் கொண்ட காலாண்டு செய்திமடல் வெளியிடல் ஆகும். இதன் மூலம் பாடசாலை மட்டத்திலும், பெற்றோர்களிடையேயும் இயற்கை தொடர்பான தகவல்கள் கொண்டு சேர்க்கப் படுகின்றன. மேலும் இக்கழகத்தில் இணைந் திருக்கும் மாணவர்களுக்கு பறவைகள் தொடர்பான கல்வியை ஊட்டுவதற்காகப் பறவை அவதானிப்பு நிகழ்ச்சிகளும் ஒழுங்குபடுத்தப் படுகின்றன. இவற்றின் பிரகாரம் பிணாக்கை வயல், மண்டைதீவு, சரசாலை பகுதிகளுக்கு பறவை அவதானிப்புக்காகச் சென்றோம்.



மண்டைதீவு பறவை அவதானிப்பில் மாணவர்கள்

பாடசாலை மட்டத்தில் மட்டும் இயற்கை அவதானிப்பு விடயங்களைத் தெரியப்படுத்து வதால் மற்றவர்களுக்கு அவற்றைப் பற்றித் தெரிந்து கொள்ளும் வாய்ப்பு அரிதாகவே கிடைப்பதாக எண்ணியே சுன்னாகம் பொதுநூலகத்தின் இச்சஞ்சிகையில் பறவைகள் தொடர்பான பொதுவான விடயங்களையும், இடப்பெயர்வு காரணிகளால் யாழ்ப்பாணத் திற்கு குறிப்பாக வலிகாமப்பகுதிக்கு வருகை தரும் பறவைகள் தொடர்பான விடயங்களையும் இதில் பகிர்ந்துள்ளேன்.

இப்பகிர்வுக்காக பேராசிரியர். சரத் கொடகம அவர்களுடைய "வடபகுதி பொதுப் பறவைகள்", "இலங்கையின் பொதுப்பறவைகள்" ஆகிய புத்தகங்களைப் பயன்படுத்தினேன். அதற்கான அனுமதி வழங்கியதற்கு பேராசிரியர் சரத் கொடகம அவர்களுக்கும், அனுமதி பெற உதவிய திரு. அசோகன் அவர்களுக்கும் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்

- கட்டுரையாசிரியர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


இறக்கைகள் கொண்ட விலங்குகளைப் பறவை எனக் கூறுவர். இவை முதுகெலும்புடையன. இளஞ்சூட்டுக் குருதியுடையன. மொத்தம் 9672 வரையிலான பறவையினங்கள் உள்ளன என்று பறவையியல் அறிஞர்கள் கணித்து குறிப்புகள் எழுதியுள்ளார்கள். பல பறவைகள், பறப்பதையே முக்கியமான சிறப்பியல்பாகக் கொண்டிருப்பினும், சில பறவைகள் பறக்க முடியாதவையாகும். குறிப்பாகத் தீவுகளில் வசிப்பவை பறக்குமியல்பை இழந்துவிட்டன. உதாரணமாக பென்குயின்கள், தீக்கோழிகள், நியூசிலாந்தின் கிவிகள், என்பன.

**பறவைகளின் உள்ளமைப்பு:**

பறவைகள் முதுகெலும்புள்ளவை. பாலூட்டிகளைப் போல நான்கு அறை இதயத்தையும் வெதுவெதுப்பான இரத்தத்தையும் கொண்டவை. இதன் காரணமாக சீரான உடல் வெப்பத்தையும், வேறுபட்ட சூழ்நிலைகளில் வாழும் தன்மையும் பெறுகின்றன. ஆனால் ஊர்வன போன்று முட்டையிட்டு குஞ்சு பொரிக்கின்றன.

கிரேக்க மேதை அரிஸ்டாட்டில் 2000 ஆண்டுகளுக்கு முன்பே விலங்குகளின் பருவ கால இடப்பெயர்வைக் கண்டறிந்தார். கி.மு. 384-322 இல் எழுதிய "விலங்குகளின் வரலாறு" என்ற நூலில் இதனை அவர் குறிப்பிட்டுள்ளார். தற்காலத்தில் பறவைகள் மற்றும் விலங்குகள் குறித்த ஆராய்ச்சிகள் பெருகியுள்ளன. இவற்றிற்கெனத் தனிப் படிப்புகளும் உள்ளன. முனைவர் சலீம் அலி (1896-1987) என்பவர் பறவைகளின் வாழ்க்கை முறை பற்றி ஆய்வு செய்த பறவை நிபுணர் ஆவார். இவரின் ஆய்வுகள் மூலம் பறவைகள் பற்றிய பல்வேறு சுவையான தகவல்கள் நமக்குக் கிடைத்துள்ளன.

பறவைகள் தங்களது இடம்பெயர்ச்சிக்குக் குறைந்தது இரண்டு புவி அச்சுகளாகிய நெடுங்கோடுகளையும் அகலக்கோடுகளையும் பயன்படுத்துகின்றன எனப் புதிய ஆராய்ச்சிகள் கூறுகின்றன. ஆய்வுப்படி பறவைகளின் இடப்பெயர்வு வடக்கு, தெற்கு திசையில் அமைகின்றது. நிகிதா சென்ஸ்டவ் என்ற ஆய்வாளர் வசந்த காலத்தில் பறவைகள் நெடுந்தொலைவுக்கும் கண்டம் விட்டுக் கண்டம் சென்று திரும்பும்போதும் கிழக்கு மேற்காக இடம்பெயர்கின்றன என்று தன் ஆய்வில் கூறியுள்ளார். இதிலிருந்து பறவைகள் எவ்வாறு அகலக்கோடுகளைக் கண்டறிகின்றன என்பது தெரியவில்லை. ஆனால் நெடுங்கோடு என்பது வடக்கு தெற்கு திசைகளில் செல்கிறது. இதை நடுப்பகலில் உள்ள சூரியனின் இருப்பிடத்தை வைத்தோ அல்லது பூமியின் காந்தப்புலத்தை வைத்தோ எளிதில் கண்டறியலாம் என்று சென்ஸ்டவ் விளக்கியுள்ளார். மூன்றாவதாக வானத்தில் உள்ள நட்சத்திரத்தின் அடிப்படையில் இடம்பெயரும் பறவைகள், அவை செல்ல வேண்டிய இடத்தின் அமைவை அறிந்து இடம் பெயருகின்றன என்பர். ஆனால் இதற்குப் போதுமான ஆதாரங்கள் இல்லை.



**பறவைகள் இடம்பெயரும் போது V வடிவில் செல்லும்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கை குடிபெயரும் பறவைகளின் பிரதான கேந்திரமாக விளங்குகின்றது. ஆசியாவில் பறவை இனங்கள் கூடிய நாடுகளில் ஒன்றாக இலங்கை காணப்படுகின்றது. இச் சிறியதீவு 110 குடிபெயரும் பறவை இனங்கள் உள்ளடங்கலாக 435 வகை பறவை இனங்களைக் கொண்டுள்ளது. பறவைகளின் மொத்த எண்ணிக்கையில் குடிபெயரும் பறவை 26% இந்கு பங்களிப்புச் செலுத்துகின்றன. குடிபெயரும் காலப்பகுதியில் பலவகை வகையான பறவைகள் இலங்கைக்கு வருகை தருகின்றன. பெரும்பாலான இடம்பெயர் பறவைகள் புத்தல தேசியபூங்கா, அன்னைவில்லுண்டாவ சரணாலயம், பெல்லன்வில- அத்தியடி சரணாலயம், முத்துராஜவல சரணாலயம் ஆகிய பகுதிகளுக்கே பெரிதும் வருகை தருகின்றன. புத்தல தேசிய பூங்கா, அன்னைவில்லுண்டாவ சரணாலயம் ஆகிய இரண்டும் றம்சா (ramzar) பிரதேசங்களாகும். இங்கேயே தங்கி வாழும் பறவைகள் தவிர குறிப்பிடத்தக்க அளவு எண்ணிக்கையிலான இடம்பெயர் பறவையினங்கள், தங்கள் வடகோளத்து வாழ்விடங்களின் குளிர் காலத்தைத் தவிர்ப்பதற்காக இலங்கைக்கு வருகின்றன. இலங்கையில் பறவையினங்களின் பரம்பல் நாட்டின் காலநிலை வலயங்களினால் பெரிதும் தீர்மானிக்கப் படுகின்றன. நாட்டுக்குரிய 26 இனங்களில் பெரும்பாலானவை ஈர வலய, அல்லது மத்திய மலைப் பகுதிகளைச் சேர்ந்தவயே.

**பறவைகளின் இடப்பெயர்ச்சி:**

உணவுத் தேவைகளுக்காகவும் மிகுவெப்பம், மிகுகுளிர் காலநிலைகளை தவிர்ப்பதற்காகவும் பறவைகள் வருடாந்த இடப்பெயர்ச்சி செய்கின்றன. கடற் பறவைகள் மிக அதிக தூரம் (சில வகைகள் ஒரு வருடத்தில் 32,000 கிமீ வரை) பயணிக்கின்றன. இடப்பெயர்ச்சி துவங்குவதற்கு பல நாட்களுக்கு முன்னதாகவே பறவைகள் பயணத்திற்குத் தங்களை ஆயத்தப்படுத்திக் கொள்கின்றன. அதிக உணவை உண்டு, கூடுதலாக சில அடுக்கு கொழுப்பை உடலில் சேர்த்துக் கொள்கின்றன. பல வகையான தரைப் புலம்பெயர் பறவைகள் மிகநீண்ட தூரங்கள் இடம் பெயருகின்றன. இனப்பெருக்கக் காலத்தை மிதவெப்பப் பகுதிகளில் அல்லது ஆர்க்டிக் வட அரைக்கோளத்தில் கழிக்கின்ற பறவைகள், மற்றக் காலங்களில் வெப்பவலயங்களை (tropics) அல்லது தென் அரைப்பகுதியிலுள்ள மித வெப்ப வலயப் (temperate zones) பகுதிகளை நாடிச் செல்வதே மிகவும் பொதுவாகக் காணப்படும் புலப்பெயர்வு ஆகும். வடபிரதேசக் கோடைக்காலத்தின் நீண்ட பகற்காலம், புதிதாகப் பொரித்த குஞ்சுகளுக்கு உணவு ஊட்டுவதற்கான அதிக வாய்ப்புக்களைக் கொண்டது. இக்காலத்தில் இப்பகுதிகளில் உணவும் கூடுதலாகக் கிடைக்கும். இலையுதிர் காலத்தில் பகற்காலம் சுருங்கி, உணவு கிடைப்பதும் அரிதாகும் போது பறவைகள் வெப்பப் பகுதிகளுக்கு வருகின்றன. இப் பகுதிகளில் பருவகாலங்களைப் பொறுத்து, உணவு கிடைப்பதில் அதிக மாற்றம் இருப்பதில்லை. இவ்வாறு புலம்பெயர்வதால் கிடைக்கும் நன்மைகள், களைப்பு, சக்திச் செலவு, புலப்பெயர்வின் போது ஏற்படும் ஆபத்துக்கள் என்பன போன்ற பாதக அம்சங்களை ஈடுசெய்யக்கூடியதாக இருத்தல் வேண்டும்.

இலங்கையைப் பொறுத்தவரை நாட்டில் அசாதாரண சூழல்களால் வடபகுதிகளில் பறவைகளின் இருப்பு பற்றியும், இடம்பெயர் பறவைகளின் வடபகுதி வருகை பற்றியும் இவ்வளவு காலமும் பெரிய அளவில் கவனத்தில் கொள்ளப்படவில்லை என்பதே உண்மை. அண்மைக்காலமாக மக்களிடையேயும் மாணவர்களிடையேயும் பறவைகள் பற்றி இலங்கை களபறவையியல் திணைக்களம் பல முன்மாதிரியான செயற்திட்டங்களை ஏற்படுத்தி வருகின்றது.

**வடபகுதியில் பறவைகள்:**

வடபகுதியில் பெருமளவான பறவைகள் ஆனையிறவு மற்றும் அதனை சூழ்ந்த பகுதிகளிலேயே பெரியளவில் காணப்பட்டாலும் யாழ்ப்பாணத்தின் அல்லைப்பிட்டி, மண்டைதீவு, சாவகச்சேரி, தொண்டமனாறு பகுதிகளிலும் குறிப்பிடத்தக்க அளவு இடம்பெயர் பறவைகளின் வருகை இடம்பெறுகின்றது. வலிகாமம் பகுதியில் வயல் பகுதிகளை ஒட்டிச் சில வெளிநாட்டு,




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்நாட்டு இடம்பெயர் பறவைகள் காணப்படுகின்றன. ஆனால் ஏனைய பகுதிகளோடு ஒப்பிடும்போது வலிகாமத்தில் குறைந்தளவு பறவைகளே காணப்படுகின்றன. வலிகாமத்தில் கந்தரோடை குளம், பினாக்கை வயல் பகுதிகளிலும் கீரிமலையை ஒட்டிய பகுதிகளிலும் பறவைகளின் வருகை அவதானிக்கப்பட்டுள்ளது. இதை விட பொதுவாக வயற்பகுதிகள் அனைத்திலும் இடம்பெயர் பறவைகளினை காணலாம்.

**இடம்பெயர், உள்ளூர் பறவைகளின் விபரங்கள்..**

### 1. நண்டுதின்னி- Crab Plover

38 செ.மீ நீளமான சிறகு கொண்ட இதன் மேற்புறமும், பிற்புறமும் கரும் நிறத்திலும், மிகுதி வெள்ளை நிறத்திலும் காணப்படும். கறுத்தச் சொண்டு கொண்டது. நரை நிற கால்கள் கொண்ட இது மணல்பாங்கான கரையோரங்களில் காணப்படும். அதிகளவு ஒலி எழுப்புவதால் சத்தமான பறவை என்றும் கூறப்படுகிறது. தெற்காசிய பகுதியின் கரையோரத்தை ஒட்டி காணப்படுகிறது. இவற்றின் அலகுகள் நண்டுகளை உணவாக கொள்வதற்கென்றே தனித்துவமாக அமைந்துள்ளது.




படம்: சௌ. ஸ்ரீஹர்ஷன்

### 2. இரட்டைவால் குருவி- Black Drongo

இரட்டைவால் குருவி அல்லது கரிக்குருவி எனப்படும் இது 28 செ.மீ நீளமான வால் கொண்டது. இதன் நீண்ட வால் முடிவில் அம்பின் நுனி போல் உள்வளைந்திருக்கும். இலங்கையின் வடமாகாணத்தில் பெருமளவில் காணப்படுகிறது. ஆசியக் கண்டத்தைத் தாயகமாகக் கொண்ட ஒரு சிறு பாடும் பறவை. இது தெற்காசியாவின் பெரும்பாலான பகுதிகளில் அதாவது தென் மேற்கில் ஈரான் தொடங்கி இந்தியா, இலங்கையிலும் கிழக்கில் சீனா, இந்தோனேசியா வரையிலும் காணப்படுகின்றது. இப்பறவை முழுவதும் கருப்பு நிறத்திலும் வால் பகுதி நுனியில் இரண்டாகப் பிரிந்தும் இருக்கும். பூச்சிகளை இரையாகக் கொள்ளும். இப்பறவை பொதுவாக திறந்தவெளியான வேளாண்மை நிலங்களிலும் அடர்த்தியற்ற காடுகளிலும் வசிக்கின்றது.



படம்: சௌ. ஸ்ரீஹர்ஷன்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 3. வெண்கழுத்து நாரை- Woolly-necked stork

91 செ.மீ நீளமான, 85 செ.மீ உயரமான இது கறுப்பு நிற உடலைக் கொண்டது. சிறகுகளில் சிறு பகுதியும், கழுத்தும் வெண்மை நிறமானது.. ஈரநிலங்களுக்கும் பெரிய நீர்ப்பரப்புக்கும் அதிகளவு வருகை தரும். திறந்த புற்தரைகள், நீர்நிலைகளுக்கு அண்மையில் உள்ள மரங்களில் வாழும். மீன்கள், நண்டு போன்றவற்றை உணவாக உட்கொள்ளும்.




படம்: செள. ஸ்ரீஹர்ஷன்



### 4. வெள்ளை அரிவாள் மூக்கன்.- Black- Headed Ibis

76 செ.மீ நீளமானது. கறுப்பு நிறமான தலையையும், கீழ் நோக்கி வளைந்த அலகையும் கொண்டிருக்கும். இவை தெற்காசியாவிலும் ஜப்பானிலும் காணப்படும் கொக்கு வகையாகும். இதன் தனித்துவமான அம்சம் கீழ் வளைந்த அலகு ஆகும். இவை கூடுதலாக மீன்களும், நண்டுகள் முதலான கடல் உணவுகள் கிடைக்கும் பகுதிகளிலேயே காணப்படும். ஓரளவு கூட்டம் கூட்டமாகவே காணப்படும். மஞ்சள் நிறமான உடற்பகுதியை கொண்டது.



படம்: செள. ஸ்ரீஹர்ஷன்




### 5. முடையன் - Indian Pond-heron

46 செ.மீ நீளமானது. சாம்பல் நிறமான இது பறக்கும் போது மட்டும் வெண்மையான இறக்கை பகுதியை வெளிக்காட்டும். இதன் பின்பகுதி சாம்பல், கடும் நிறத்தில் காணப்படும். ஈரநிலப்பகுதி அனைத்திலும் காணப்படும் பொதுவான பறவை இதுவாகும். இப்பறவை இந்தியா, இலங்கை, பங்களாதேஷ், ஈரான் பகுதியில் காணப்படும். கூடிய அளவு நின்றுகொண்டிருக்கும் இப்பறவை சில சமயங்களில் தாழ்வாக பறந்து மீன், நண்டுகளைப் பிடிக்கும். உயரமாகப் பறப்பது இல்லை.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





6. நடுத்தர கொக்கு - **Intermediate Egret**

71 செ.மீ உயரமானது. நீளமான கருமை நிற கால்களையும் வெளிறிய மஞ்சள் நிற அலகையும் கொண்டது. பொதுவாக ஈரநிலங்களில் காணப்படும். அனைத்து பகுதிகளுக்கும் பொதுவான பறவை. ஆப்பிரிக்கா, ஆசியப்பகுதியிலேயே இவற்றை காணலாம். கடல் உணவுகளை உண்ணும்.



படம்: சௌ. ஸ்ரீஹர்ஷன்





7. சிறிய நீர்க்காகம் - **Little Cormorant**

காகத்தின் வகையைச் சேர்ந்த பறவை இனமாகும். இது 55 செ.மீ நீளமானது. குறுகிய அலகைக் கொண்டது. இதன் கீழ் கழுத்து பகுதி வெளிறிய நிறமாக காணப்படும். வெப்ப வலயமான தெற்காசிய வலய நீர்நிலைகளில் அதிகம் காணப்படுகிறது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## 8. புள்ளி அலகு கூழைக்கடா - **Spot-billed pelican**

140 செ.மீ நீளமானது. எடை 4kg – 6kg வரை. ஊத்தை வெள்ளை நிறம் கொண்ட உடல் காணப்படும். மேல் அலகில் கறுப்பு புள்ளிகளையும், கீழ் அலகில் ஒரு சிறு பையும் தொடுக்கப்பட்டிருக்கும். குளம், கடல் நீர் சார்பகுதிகளில் காணப்படும். அலகில் காணப்படும் பையின் மூலம் நீரை ஏந்தி அதில் இருக்கும் மீனை உண்ணும். ஈரநிலப்பகுதிகளுக்கு அண்மையில் உள்ள உயரம் குறைந்த மரங்களின் கிளைகளிடையே கூடு அமைத்து வாழும்.



## 9. நெடுங்கால் உள்ளான் - **Black-winged stilt**

38 செ.மீ நீளமானது. நீண்ட சிகப்பு நிற கால்களைக் கொண்டது. கறுப்பு நிற அலகுகளும் கறுப்பும் வெள்ளையும் கலந்த உடலும் கொண்டது. ஈரநிலங்களில் பொதுவாக காணப்படும். சிறு மீன்கள், நண்டுகளை உணவாக கொள்ளும்








## 10. நீளவால் இலைக்கோழி - **Pheasant-tailed Jacana**

31 செ.மீ நீளமானது. (ஆண் இனவிருத்தி காலங்களில் மட்டும் 50 செ.மீ) வெண்ணிற தலையையும் மஞ்சள் நிறமான பின் கழுத்தையும் கொண்டது. வெண்ணிற சிறகும், கருங்கபில உடலும் காணப்படும். ஈரநிலங்களில் பொதுவாக காணப்படும். இனவிருத்தி காலங்களில் நீண்டு வளைந்த வால் காணப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






11. வெண்மார்பு மீன் கொத்தி - **White-throted Kingfisher**


28 செ.மீ நீளமானது. சிகப்பு அலகையும் கபிலநிற தலையையும் கொண்ட இது வெண்மையான மார்பு பகுதியை கொண்டது. ஈரநிலங்களில் பொதுவாகக் காணப்படும். இதன் அலகு சிவப்பு அல்லது கடும் செம்மஞ்சள் நிறத்தில் காணப்படும். மீன், நண்டு முதலிய அனைத்து கடல் உயிரினங்களையும் உண்ணும். எல்லா வலயங்களிலும் காணப்படும்.






12. பெரிய செண்பகம் - **Greater Coucal**

48 செ.மீ நீளமானது. செங்கபில நிற சிறகுளைக் கொண்டது. கறுப்பு அலகு பார்ப்பதற்கு காகம் போன்ற தோற்றத்தில் காணப்படும். இவற்றின் கண் சிவப்பு நிறத்தில் காணப்படும். தென்சீனா, இந்தோனேசியா பகுதியிலும் இலங்கை, இந்தியாவிலும் காடு தோட்டங்களில் பொதுவாகக் காணப்படும். தானியங்களையும், பிற பறவைகளின் முட்டைகள், பூச்சிகளை உணவாக உட்கொள்ளும்.






13. நீலவால் பஞ்சுருட்டான்- **Blue-Tailed Bee-eater**


23-26 செ.மீ நீளமான இப்பறவை மஞ்சள் நிற கன்னத்தையும் பச்சை நிறமான உடற் பகுதியையும் கொண்டது. சகதிகள், திறந்தபிரதேசங்கள், நெல்வயல்களிலும் குளிர்கால இடம்பெயர் பறவையான இது எல்லாப்பகுதியிலும் பரந்துபட்டு காணப்படுகிறது. தென்கிழக்கு ஆசியா பகுதியிலிருந்து இடம்பெயர்கின்ற இப்பறவைகள் பொதுவாக இந்தியாவிலேயே அதிகம் காணப்படுகின்றன. இலையான் போன்ற சிறு பூச்சிகளை உணவாக உட்கொள்ளும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




படம்: சௌ. ஸ்ரீஹர்ஷன்




**14. கருந்தலை மாங்குயில் - Black-Hooded Oriole**

25 செ.மீ நீளமான இது பிரகாசமான மஞ்சள் நிற உடலை கொண்டது. கரும் நிற தலையும் வாற்பகுதியில் கரும் நிறமும் சிறிதளவு காணப்படும். இந்தியா, இலங்கை, இந்தோனேசியா காடுகள், தோட்டங்களில் காணப்படும். இது பூச்சிகளையும், பழங்களையும் உணவாக உட்கொள்கின்றன. இது ஆசியப்பகுதிக்கே உரித்தான பறவை ஆகும்.





படம்: சௌ. ஸ்ரீஹர்ஷன்



**15. மஞ்சள் அலகு சிலம்பன் - Yellow-billed Babbler**

புலுனி என பொதுவாக அறியப்பட்ட இது 23 செ.மீ நீளமானது. வெளிறிய நிறம் கொண்ட இது நகரம், நகரை அண்டிய பகுதிகளில், வீட்டுதோட்டங்களில் காணப்படும். எல்லா பிரதேசங்களிலும் காணப்படும். தென்இந்தியா, இலங்கைக்கு உரிய பறவை இனமாகும்.






படம்: சௌ. ஸ்ரீஹர்ஷன்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 16. மைனா - Common Myna

23 செ.மீ நீளமான மஞ்சள் நிற கண்குழியையும் கபில நிற உடலையும் கொண்டது. வீட்டுதோட்டங்கள், நகர்ப்புறங்களில் காணப்படும். ஆசியப்பகுதிக்கே உரியது. ஆனாலும் அவுஸ்திரேலியா முதல் கனடா வரையான பகுதிகளுக்கும் அறிமுகம் செய்யப்பட்டு அங்கும் வளர்க்கப்பட்டு வருகிறது. பூச்சிகள், தானியங்கள் போன்றவற்றை உணவாக கொள்கிறது. மைனாவை பற்றி பல புராதன நூல்களில் கூட குறிப்பிடப்பட்டுள்ளது.


படம்: இணையம்



## 17. அரசவால் ஈப்பிடிப்பான்- Asian Paradise-flycatcher


20 செ.மீ நீளமான கடும் செம்மஞ்சள் நிறம் கொண்ட, இப்பறவை காடுகள், தோட்டங்களில் பொதுவாக காணப்படும், ஆசியப் பகுதிப் பறவை. குறிப்பாக இந்தியா, இலங்கை, மாலைதீவு பகுதிகளில் காணப்படுகிறது. இது கடும் செம்மஞ்சள் நிறத்திலும், வெள்ளை நிறத்திலும் காணப்படுகிறது. மிக நீண்ட வால், கறுப்பு கொண்டை மூலம் இதனை தனித்துவமாக அடையாளம் காணலாம்.'


படம்: இணையம்

## 18. சிகப்பு மூக்கு ஆட்காட்டி - Red-Wattled Lapwing


30 செ.மீ நீளமான, கறுப்பு நுனி கொண்ட சிகப்பு அலகு கொண்டு கறுப்பு நிற தலையையும் சாம்பல் நிற சிறகுப்பகுதியையும் மஞ்சள் காலையும் கொண்டது. ஈரநிலப்பகுதி, சகதியில், ஈரநிலமணற்பகுதியில் காணப்படும்.


படம்: சௌ. ஸ்ரீஹர்ஷன்



## 19. பனங்காடை- Indian Rooler

33 செ.மீ நீளமான வெளுப்பும் நீலமும் கலந்த நிறம் கொண்ட பறவை. பறக்கும் போது பிரகாசமான நீலநிற இறக்கையை கொண்டிருக்கும். திறந்தபகுதிகளிலும் சேனைப்பயிர் செய்கை செய்யும் பகுதிகளிலும் காணப்படும். இப்பறவைகள் வலிகாமத்தில் பெருமளவில் காணப்படுபவை. இவற்றை விட பல பறவைகள் வலிகாமத்தில் காணப்பட்டாலும் இவை முக்கியமான பறவைகளாக கருதப்படுகின்றன. இனி தொடர்ந்து வரும் பகிர்வுகளில் ஏனைய பறவைகளின் விபரங்கள் வெளியிடப்படும்.


படம்: சௌ. ஸ்ரீஹர்ஷன்

■



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கே செல்கிறோம்

## - ஓர் சைவ சமய நோக்கு

த. சண்முகநாதன

சென்ற இதழில் வெளியாகியிருந்த இத்தலைப்பில் அமைந்த கட்டுரையின் இறுதியில் எமது சமயம் கூறும் தர்மவழியில் வாழ மறுத்து நம்மவர் சிலர் அதர்ம வழியிற் சென்று சைவம் வெறுக்கும் விடயங்களைச் செய்யத் தலைப்படுகிறார்கள் என்று கூறி அவ்வாறு தலைப்படும்போது அழிவுதான் எஞ்சப்போவ தென்றும் கூறி அந்தத்தருணத்தில் எம்மைக்காக்க வல்லவராக எமது கடவுளே இருக்கக்கூடியவராக இருப்பார், அவரை நாம் அடைய முயல வேண்டுமென்றும் அதற்கு மனச்சுத்தம் தேவை; அது ஏற்படுவதற்குத் தூயசிந்தனை வேண்டும்; அத்தூய சிந்தனையைப் பெற்று வாழ்வை வளப்படுத்த வேண்டுமென்றும் குறிப்பிட்டிருந்தேன். அதனையிட்டு சற்று விரிவாக நோக்குவோம்.

சிவனை முழுமுதற் கடவுளாக ஏற்றுக்கொள்பவர்கள் அனைவரும் சைவர்களாக வாழ்கின்றோமா? சைவம் காட்டும் தூய நெறிகளை ஏற்று அதன்படி ஒழுகுகின்றோமா? சமய நெறிகள் அனைத்தும் மனிதனை நல் வழிப்படுத்துபவை. அவை நல்லதை நினைக்க, நல்லதைச் செய்ய, நல்லனவற்றை வழங்க எம்மை ஊக்குவிப்பன என்று கொள்ளலாம். சில வரன்முறைகளுக்கமையவே நமது வாழ்வு முறைகளை அமைத்துக் கொள்கிறோம். அனைத்துச் சமயங்களும் தமது மக்கள் தம்மை அடையாளப்படுத்த தாம் மேற்கொள்ளும் முறை சமய நெறி அடையாளம் பெறுவதாகும். இந்த அடையாளத்தை சைவர்களாகிய நாம் தீட்சை என்கிறோம். நாம் உண்மைச் சைவனாக வாழ வேண்டி தீட்சையும் உருத்திராட்சமும் பெறுவது கட்டாயக்கடமையாகும். நாம் எமது ஏழாம் அல்லது ஒன்பதாம் வயதிலே தீட்சை பெற வேண்டும். ஆனால் எம்மில் எத்தனை பேர் தீட்சை பெற்று உருத்திராக்கம் தரித்தோம்? தீட்சையும் உருத்திராக்கமும் எம்மைக் காப்பன. அதர்ம காரியங்களிலிருந்து எம்மைக் காப்பன. நாம் சமயத்தின் வாயிலாக எல்லாம் வல்ல இறைவனை முன்னிலைப்படுத்தும்போது எம்மிடம் தூயசிந்தனை குடிகொள்ளும். அதர்ம காரியங்களிலீடுபடலாகாது என்ற உண்மையை நாம் அறியும் நிலையை அடைவோம். அதனால் பஞ்சமா பாதகங்களை நாம் வெறுக்கும் நிலையினை அடைய முடியும். தீட்சை ருத்திராட்சம் ஆகிய இரண்டும் எம்மைப் பாதுகாக்கும் தன்மை உடையன என்பதால் "மேலானவை" எனக் கருதப்படக்கூடியவை. நாங்கள் எத்தனைபேர் தீட்சை உருத்திராக்கம் பெற்று எம்மைப் பாதுகாத்தோம்? நாம் எல்லாப்பிறப்பும் பிறந்திளைக்க அல்லது பெருநோய்கள் மிக நலியப் பெயர்த்தும் செத்தும் பிறப்பதற்கே தொழிலாகி இறக்கும் நிலையினை அடைவோம். இது எமக்கு வேண்டுமா. நன்மை செய்யப் பிறந்த நீ தீமை செய்யாதிரு என்று கூறுவதைக் காட்டிலும் நன்மையைச் செய்ய முயற்சிப்பாயாக. என வாழ்த்துவது சாலவும் நன்மையை தரும்.

எமது மதம் இறைவழிபாட்டை, கோயில் வழிபாட்டை முன்னிலைப்படுத்துகின்றது. எனினும் கோயிலுக்குச் செல்கின்றோமா? இல்லை கோயிலுக்குச் செல்ல முடிவதில்லை. இறைவழிபாடு வேண்டுபவர் வேண்டுவதை ஈயும் தன்மையுடையது. எமது ஆன்ம ஈடேற்றத்துக்காக நாம் எங்கே போக வேண்டும் எனச் சிந்தித்து செயற்படுவோமா? எமது மதம் அனைத்து உயிர்களையும் நேசிக்கும்படி வலியுறுத்துகிறது. ஏனைய உயிர்களுக்கு தீங்கு செய்யாது வாழும்போது தன்னுயிர் அஞ்சும் வினை கிடையாது. என்று தமது கொல்லாமை என்ற அதிகாரத்தில் வள்ளுவர் கூறியுள்ளார். இவற்றை நாம் அறிந்துள்ளோம் என்றாலும் எமது சமய சாஸ்திரங்கள் கூறும் வழியில் மன்னுயிர்களை ஓம்பி வாழ்கிறோமா? நாம் எம் உடற்பசியினைத் தீர்க்க உயிர்வதை செய்யவும் தயாராக இருக்கிறோம். இது நியாயமா?

எம்மவர்களது பொருள் தேடும் ஆசை அவர்களை வெளிநாட்டில் சீவிக்கும்படி நிர்ப்பந்திக்கிறது. குடும்பத்தலைவனின் உழைப்பு வசதி கருதி வெளிநாடுகளுக்கு அக்குடும்ப உறுப்பினர்களும் சென்று அங்கேயே வாழ்கின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதனால் மேல் நாட்டுக் கலாச்சாரத்தின் சாயலை அப்படியே பிரதி செய்து வாழ நம்மவர் தலைப்படுகிறார்கள். இந்தப்போக்கு நமது சமய வாழ்வுப் போக்கினை மாற்றிவிட முயல்கிறது. இதனை எமது கோவில்களில் நம்மவர்கள் அணிந்துவரும் உடை மூலம் அறிய முடிகிறது. நம் மத நம்பிக்கைக்குதவாத, மாறுபாடான உடுப்புக்களை நாம் தவிர்க்க வேண்டும். எம் கடவுள்களின் பெயரை எமது பிள்ளைகளுக்கு வைக்கும் கலாச்சாரம் மாறி வேற்று மக்களின் பெயர்களையோ கிறிஸ்தவ, ஹிந்திப் பெயர்களையோ வைப்பதில் எம் உறவுகள் காட்டும் ஆர்வம் எமது சமய பண்பாட்டு அடித்தளங்களையே அசைத்து விடுவோமோ என்று கவலைப்பட வேண்டிய நிலையில் இருக்கிறோம். இது ஒரு வேதனையான நிலைமையாகும்.

ஏழாம் எட்டாம் ஒன்பதாம் நூற்றாண்டுகளில் எமது நாயன்மார்களும் சந்தானகுரவர்களும் பாதுகாத்து வளர்த்த சைவத்தை தொடர்ந்து வளர்த்து வரும் பேறு காரைக்கால் அம்மையார், தாயுமானவர் சுவாமிகள் ஆகியோரை அடைந்தது. இதே காலப்பகுதியில் தமிழ்நாட்டில் மடாலயங் களும் ஆதீனங்களும் தமிழ்மொழி யினையும் சைவத்தையும் வளர்க்கும் பாரம்பரியத்தையும் சமய விழுமியங்களையும் காக்கும் தொண்டையும் மேற்கொண்டன. அதன் பேறாக சமயம் நன்னிலையில் தமிழ்நாட்டில் காணப்பட்டதுபோல இலங்கையில் காணப்படவில்லை. ஏனென்றால் 1505முதல் 1796 வரை போர்த்துக்கேய அரசும் ஒல்லாந்த அரசும் பின்னர் 1796பின் ஆங்கில அரசும் எமது நாட்டில் தமது ஆதிக்கத்தை நிலை நிறுத்தியிருந்தன. அதனால் சைவக்கோயில்கள் அழிக்கப்பட்டுவிட்டன. சைவ அனுட்டானம் புறம் தள்ளப்பட்டது. இவ்வாறான ஒரு பின்புலத்தில் ஆங்கிலேயர், கிறிஸ்தவ மதத்தை பரப்ப முயற்சி எடுத்தபோது 1847இல் நல்லூர் ஆறுமுகநாவலர் கிறிஸ்தவப் பரம்பலுக்கெதிராக கொதித்தெழுந்து சைவப்பாரம்பரியத்தை அழியாது அழிக்கவிடாது பாதுகாத்தார். நாவலரின் பரம்பரையினர் சிலர் நாவலரது அரிச்சுவட்டைப் பின்பற்றினர். அவரின் பின் எவரும் சைவம் காத்தனர் என்று கூறமுடியாது. எம் மதத்தின் பரம்பலை அதன் ஆதிக்கத்தை தக்கவைக்க நம்மவர் யாரையும் காணமுடியாத நாம் எங்கே சென்றென்ன எங்கே வாழ்ந்தென்ன எந்தப் பிரயோசனமில்லை என்பதை நாம் உணரும் நாள் எந்நாளோ. இலங்கையில் நாவலர் மீண்டும் பிறப்பெடுக்க மாட்டாரோ என சைவ மக்கள் ஏங்கும் ஏக்கத்தை யார்தான் அறிவார்.

அழிவுறாத் தத்துவங்கள் மாற்றமடைய முடியாதவை. அத்தத்துவங்களை விளக்கும் செயற்பாடுகளை சுருக்கலாம். சைவ சமய தத்துவங்கள் தகர்க்கப்பட வேண்டுமென சிலர் காலத்திற்குக்காலம் கூச்சல் போட்டாலும் அவை நடைமுறைச் சாத்தியமற்றவை. நாத்திய கருத்துடையோர் ஆட்சி செய்யும் தமிழ்நாட்டில் ஒரு கோயிலைக் கட்ட முடியாத நிலைமையே உள்ளது. சமயம் மக்களுடன் பின்னிப்பிணைந்த தென்பதால் யாரும் கைவைக்க முடியாதுள்ளது. சமயம் இல்லாத வாழ்வு சுக்கான் இல்லாத கலமாகும். அதனால் அக்கலம் என்றோ ஒருநாள் காற்றில் அடிக்கப்படக்கூடும். அவ்வாறான கலமாக சைவம் மாறமுடியாது.

எமது மதத்தின் காப்பரண்களாக பல அமைப்புக்கள் உள்ளன. அவை தத்தமது கடமைகளைச் செய்ய தனித்துவமான நோக்கங் களைக் கொண்டமைந்தவை. முக்கியமாக அகில இலங்கை இந்துமாமன்றம், இந்துசமயப்பேரவை, சைவ அனுட்டான பாதுகாப்புச் சபை, சைவபரிபாலனசபை என்பவற்றைக் குறிப்பிடலாம். இன்று பர சமய இருள் எம்மை சூழ்ந்து கொண்டுள்ளது. எம்முன் கிறிஸ்தவ மதமாற்றம் இடம்பெறுகிறது. இதனை யாராவது கண்டித்தார்களா இச்சைவ சமய அமைப்புகள் எங்கேயோ செல்கின்றன. அவை செல்லும் திசை எமக்குத் தெரியுமாகவிருந்தால் பிறசமயப் பரம்பலை அவ்வமைப்புகள் தடுத்து நிறுத்தியிருக்கலாம்.

இதுவரை நாம் கண்ட விடயங்களைத் தொகுத்து நோக்கும்போது சைவசமயம் காட்டும் வழியில் வாழ்க்கை நெறியில் நாம் ஒழுகுவதில் எந்தத் தடைகளோ கஷ்டங்களோ இல்லை. ஏனென்றால் சைவநெறி இயற்கையோடியைந்த நெறி ஏனைய உயிர்களுக்கு ஊறு விளைவிக்காத நெறி. அதனால் நாம் அனைவரும் மண்ணில் நல்ல வண்ணம் வாழ வழி உள்ளது. அவ்வழி வந்த நாம் முன்னோர் ஒழுக்க சீலர்களாக சமய வாழ்வு வாழ்ந்து பாவங்களையும் பாதகங்களையும் துறந்து வாழ்ந்து நற்கதி பெற்றனர் என்பதனை அறிந்து சைவம் காட்டும் மனித நேயத்தை மதித்து ஒன்றேகுலம் என்று வாழ்ந்து மனித விடுதலை நோக்கிய பயணத்தில் நாம் செல்வோமானால் அதுவே உண்மையான சைவ வாழ்வாக அமையும். ■



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்ணியத் தோற்றமும் அதன் வளர்ச்சியும்

ஓர் அறிமுகம்: சி. ரமேஷ்

காலச் சூழ்நிலைக் கேற்ப "சமூகக் கருத்தாக்கமாகத் தோன்றிய பெண்ணியம் "புதுமையான மாற்றங்களுக்கு ஊடாகக் குறுகிய காலத்துக்குள் சமூக அறிவியலின் அனைத்து தத்துவங்களையும் சித்தாந்தங்களையும் மறுபரிசீலனைக்கு உட்படுத்தத் தூண்டுகின்ற எழுச்சி மிக்க ஆற்றலாகப் பரிணமித்தது. பெண்களின் சமூகத் தகுதிநிலை, இருத்தலை (existence) அறிந்து கொள்ளவும், அவர்களின் மீதான பாலினப் பாகுபாடு (Discrimination sex) தொடர்பான சமூகப் பண்பாட்டு வேர்களை இனம் கண்டு கொள்ளவும், பெண்களுக்கு எதிரான அடக்குமுறை, சுரண்டல் முறைகளை உணர்ந்து கொள்ளவும் பெண்ணியம் பற்றிய அறிதல் அவசியமாகின்றது.

ஆணிய நோக்கிலிருந்து மாறுபட்ட பார்வையைத் தொடங்கும் போது பாலின (Gender) அனுபவ அடிப்படையில் பெண்களைப் "பெண்கள்" என்ற பால் வகைக்குள் தனித்துப் பார்க்க வேண்டிய தேவை உள்ளது. உடற்கூறு ரீதியாக ஆணுக்குரிய நேர்கோட்டு அனுபவங்கள் பெண்ணுக்கு இன்மையாலும் இவ்வடிப்படையில் பெண் ஆணிலிருந்து வேறுபடுவதாலும் மதம், இனப்பண்பாடுகளுடன் இணைந்த சமூக மறுப்புக்களும் அதன் வரையறைகளும் பெண்களுக்கு எதிரான இறுக்கமான கட்டுப்பாட்டு நிலையைத் தோற்றுவித்தன. இப்பின்புலத்தில் பெண் இருப்பும் அதன் இயங்கு நிலையும் ஆண் அதிகாரத்துக்கு உட்பட்டுச் செயற்படும் ஒன்றாகவே காணப்பட்டது.உடல்,உளம், உணர்வுநிலை, மொழிவயப்பட்ட அதன் கருத்தியல், இருப்பு என ஒரு பெண்ணின் அத்தனை கூறுகளையும் இயக்கும் சூத்திரதாரியாக ஆண் மையக் கோட்பாடே செயற்பட்டமையால் பெண்ணைச் சமத்துவ உயிரியாகப் பார்க்கும் நிலை மாறி பெண்ணைத் தம் அடிமையாகப் பார்க்கும் நிலை ஏற்பட்டது.சமூகப் பண்பாட்டுப் பாரம்பரியம், மனையாட்சியை மகளிர் உரிமையாகவும், புறவாழ்வின் செயற்பாடுகளை ஆடவர் உரிமையாகவும் வரையறுத்த நிலையில், பெண்கள் தாம் அடிமைப்பட்டுக் கிடக்கின்றோம் என்னும் உணர்வின்றி பெண்கள், ஆண் அதிகார மையத்துக்கு உட்பட்டு அடங்கி, ஒடுங்கி, நசுங்கி வாழ்ந்தனர். இந்நிலையில் ஆண் ஆதிக்கத்தில் இருந்து விடுதலை, சமுதாயத்தில் ஆண்களுக்கு இணையான உரிமை, இழிநிலையில் இருந்து முன்னேற்றம் என்பவற்றை ஆதாரமாகக் கொண்டு பெண்ணியம் தோற்றம் பெற்றது. குறிப்பாக பெண்ணியவாதமானது ஆண் பெண்ணுக்கு இடையிலான பால் அசமத்துவம் குறித்தும், ஆண் மேலாதிக்கம் குறித்தும் அதிக அக்கறை செலுத்தியது. இவ்வகையில் பெண்ணியம் தொடர்பான இலக்கிய ஆய்வுகளை முன்னெடுத்தவராக மேரிவோல்ஸ்ரொன் கிராப்ட் (Mary Wollstone craft), சைமன் டி பெவாயர் (Simon de Beavoir),பெட்டி பிரைடன் (Beety Friedan) கேட் மில்லட் (Kate Millet), ஜுலியட் மிச்செல் (Juliet Mitchell), எலைன் ஷோவோல்டா (Eline Showalter), பார்பரா ரிக்னி (Barbara Rigney), மேரி டேலி (Mary Daly), எலிசபெத் ஏபெல் (Elizabeth Abel), நீனா பெயின் (Nina Bayn) முதலானோர் குறிப்பிடத்தக்கவர். பிரான்சிய புரட்சிக்காலத்தில் நிலவிய முற்போக்குக் கருத்தியலின் பயனாக 1791 ஆம் ஆண்டு மேரிவுல்ஸ்ரொன் கிராப்ட் பெண்களுக்குச் சமவுரிமை கொடுக்கப்பட வேண்டும் என்னும் கருத்தை முன் வைத்து பெண்ணியச் சிந்தனைக்குக் கால்கோள் இட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்ணியவாதம், பெண்ணிலை ஏற்பு, மகளிரியல், பெண்ணலக் கொள்கை என்று பல சொற்களால் வழங்கப்படும் 'பெண்ணியம்', 1889ல் பெண்ணின் உரிமைப் பிரச்சினைகளையும் அதன் அடிப்படையிலான போராட்டங்களையும் உணர்ந்து பயன்பாட்டுக்கு வந்தது. 1890ஆம் ஆண்டு முதல் 'womanism' என்ற சொல்லின் இடத்தை'feminism' என்ற சொல் பெற்றது. 'feminism' என்கின்ற ஆங்கிலச் சொல் 'Femina' என்கின்ற இலத்தீன் சொல்லைத் தழுவி வந்தது ஆகும். 1894 இல் வெளிவந்த ஒக்ஸ்போர்ட் ஆங்கில அகராதியில் முதன் முதலாக இந்தச் சொல் இடம் பெற்றது. ஒக்ஸ்போர்ட்அகராதி, 'பெமினிசம்' என்ற சொல் பெண்களின் தேவையை நிறைவேற்ற அவர்கள் சார்பாக வாதாடுவது, போராடுவது என்ற பொருளைத் தருகிறது" அதாவது 'பெண்ணியம்', என்பது பெண்ணானவள் தன்தாழ் நிலையையும் தன் அடிமை நிலையையும் அறிந்து, உலகளவில் அரசியலிலும் பண்பாட்டிலும் பொருளாதாரத்திலும் ஆத்மீகத்திலும் அத்தனை மாற்ற மேற்கொள்ளப்படும் வழிமுறையாகும். "பெண்களின் எல்லாச் சிக்கல்களையும் புரிந்து கொண்டு அவற்றை நீக்க முயல்வதே பெண்ணியம்" என்னும் சார்லட் பன்சின் கருத்து இதனை உறுதிப்படுத்துகிறது.பன்னிரண்டாம் நூற்றாண்டில் தோன்றிய "English Common Law" முதலான சட்டங்கள் சொத்துக்கள் தொடர்பான உரிமையைப் பெண்ணுக்கு வழங்கினாலும் பிரான்சியப் புரட்சியை அடுத்து பதினெட்டாம் நூற்றாண்டில் பெண்ணியத்துக்கு அடிப்படையான சுதந்திரம்,சமத்துவம் போன்ற கருத்துக்கள் முதன் முதலில் பிரான்சு நாட்டில் எழுந்தன. இக்காலப்பகுதியில் தந்தை வழிச் சமூக அமைப்பினூடாக ஆண் பெற்ற மேலாதிக்கத்தையும் பாலினரீதியிலான ஒடுக்குமுறையையும் அதன் வடிவங்களையும் கண்ணுற்ற அமெரிக்கா, இங்கிலாந்து பெண்கள் அதற்கு எதிரான நடவடிக்கைகளிலும் ஈடுபட்டனர். இவை ஆதரிக்கப்பட்டு இயக்கமாக வலுப்பெற்ற நிலையில், 1844 இல் நியூயோர்க்கில் செனிகா பல்சில் நடைபெற்ற கூட்டம் பாரம்பரிய பெண் தொடர்பான கருத்துப் படிமத்தை உடைத்து பெண்ணுரிமை-விடுதலைக்கான வித்தினை ஆழமாக வேரூன்றியது. இதனைத் தொடர்ந்து திருமணமான பெண்களுக்குச் சொத்தில் உரிமை, கல்வியில் அதிக வாய்ப்பளித்தல், தொழில், வணிகத்துறை, மற்றும் வழிபடும் இடங்களில் பெண்களுக்கு வாய்ப்பளித்தல் என்பவற்றுக்கு அப்பால் ஆணும் பெண்ணும் இயற்கையில் மாறுபட்டவர்கள் அல்லர்; ஆண் வன்முறையின் பலிபொருளாய் பெண் இருப்பது தவிர்க்கப்பட்டு பெண்ணும் ஆணிணைப் போல் அவளுக்கே உரிய பிரத்தியேகத் தன்மைகளுடன் மதிக்கப்படவேண்டும் என்பவற்றை வலியுறுத்தி ஆழமான வகையில் அதிகாரத்தை நோக்கிய பெண்ணுரிமைப் போராட்டங்கள் வலுப்பெற்றன.

1917ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் ரஷ்யாவில் நிக்கோலஸின் வீழ்ச்சிக்குப் பிறகு பெண்களின் நிலை புரட்சிகரமான நிலையை எட்டியது. ரஷ்யா அரசாங்கம் ஆண்களுக்கு நிகராகக் கல்வி கற்கும் உரிமை, வாக்குரிமை, பொருளாதாரச் சமத்துவ உரிமை முதலானவற்றைப் பெண்களுக்கு அளித்ததுடன் பெண்களின் சரீர வலுவை உணர்ந்து அதற்கு அமைய அவர்கள் வேலை செய்யும் தரத்தையும் வகுத்தது.இதன் தொடர்ந்து 1917இல் அமெரிக்காவிலும் 1920இல் பிரித்தானியாவிலும் 1946இல் பிரான்சிலும் வாக்குரிமைப் போராட்டங்கள் வெற்றி பெற்று பெண்கள் வாக்குரிமையைப் பெற்றனர்.கட்டுறுதி வாய்ந்த ஆண்நிலைச் சமூகத்தில் ஒடுக்கப்பட்ட பெண்ணின் பங்கு நிலையில் மாற்றம் ஏற்பட்டு பெண், பெண்ணுக்குரிய குணங்களுடன் மதிக்கப்படுகின்ற நிலை உருவானது. ஐரோப்பா கண்டத்தில் ஏற்பட்ட தொழிற் புரட்சியின் விளைவாகவும், பெண் கல்வியின் தாக்கத்தாலும் சமூக பொருளாதார, மத, அரசியல் மாற்றங்கள் ஏற்பட்டன. இதனால் பெண்மீதான மரபுசார்ந்த சமூகக் கட்டுமானம் தகர்க்கப்பட்டு பெண், பெண்ணியம், பெண்ணுரிமை குறித்தான விழிப்புணர்வுகள் ஏற்படத்தொடங்கின. இதனையடுத்து மேரி உல்ஸ்டோன் கிராப்ட்(Mary Wollstonecraft) வின்டிகேசன் ஓவ் த ரையிட்ஸ் ஓவ் வுமன் (Vindication of the Rights of Woman) என்னும் நூல் வழி பெண்ணியத்தை வளர்த்தது போல பெண்ணியத்தின் தாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனப் பேசப்படும் பெட்டி ∴பிரைடன் (Betty Friedon) பெமினைன் மிஸ்டிக் என்னும் நூல் வழி பெண்ணியக் கருத்துக்களை முன்னெடுத்தார். இக்காலப்பகுதியில் தோன்றிய குடியுரிமை இயக்கம் பெண்ணிய கருத்து வழி வலுப் பெற்றது. தீவிர இடதுசாரி இயக்கங்களிலும் பெண்கள் சரிசமமாக நடத்தப்படவில்லை என்பதை அறிந்த ஒரு சிலரின் கோபம் உள்ளாடை எரிக்கும் (Bra Burning) செயலாக உருவெடுத்தது. 1960 ஆம் ஆண்டில் இரண்டாவது பெண்ணிய அலை எழுச்சி பெற்றது. இக்காலப் பகுதியில் மிதவாத, சோசலிச, தீவிரவாத, மார்க்சியப் பெண்ணிய அமைப்புகளும் தேசியப் பெண்கள் அமைப்பும் (National Organisation for Women) தோற்றம் பெற்று பல்வேறு போராட்டங்களை நடத்தின. இதன் விளைவாகப் பெண்கள் உலகளாவிய நிலையில் மதிக்கத்தக்கவராகவும் தத்தமக்குரிய உரிமையை ஓரளவுக்கு பெற்றுக் கொண்டவராகவும் காணப்பட்டனர். 1971 இல் தொடங்கப்பட்ட மகளிர் அரசியல்குழு அரசியலில் பெண்களின் பங்கை பதின்மூன்று சதவீதத்திலிருந்து முப்பத்தொன்பது சதவீதமாக உயர்த்த முயற்சி எடுத்து ஓரளவுக்கு இதில் வெற்றியும் கண்டது. 1979 இல் பாங்கொக்கில் நடைபெற்ற பெண்ணிலைவாத கருத்தியல் மாநாடு தேசிய விடுதலைப் போராட்டத்திலும் தேசிய அபிவிருத்திக்கான திட்டமிடலிலும் சர்வதேச ரீதியான மாற்றங்களின் மூலோபாயங்களிலும், ஐரோப்பா கண்டத்தில் ஏற்பட்ட தொழிற்புரட்சியின் விளைவாகவும் பெண்கல்வியின் தாக்கத்தாலும் சமூக பொருளாதார, மத, அரசியல் மாற்றங்கள் ஏற்பட்டன.இதனால் பெண்மீதான மரபுசார்ந்த சமூகக்கட்டுமானம் தகர்க்கப்பட்டு பெண், பெண்ணியம், பெண்ணுரிமை குறித்தான விழிப்புணர்வுகள் ஏற்படத்தொடங்கின. இக்கருத்தியலின் பின்புலத்தில் கூட்டாகப் பெண்கள் சேவையில் ஈடுபடல், அடிப்படைக் கருத்தியல் மாற்றத்துக்கான முனைப்பைக் கொண்டு இருத்தல் என்னும் அடிப்படையில் 1980களுக்குப்பின் பன்முகப்படுத்தப்பட்ட சமூக அமைப்பாக பெண்கள் இயக்கங்கள் உருவெடுத்தன. உலகளாவிய ரீதியில் பெண்ணுரிமைகளைத் தீவிரமாக முன்னெடுத்த இவ்வியக்கங்கள் அடிமைப்படுத்தப்பட்ட பெண்வாழ்க்கை முறைகளை மாற்றி அமைத்துத் தீர்வுகளைக் கண்டது. குறிப்பாக மாதரின் தேசிய சம்மேளனம் (National Congress Neighbourhood) தொழிலாளர் வர்க்கப் பெண்களதும் வெள்ளையர் அல்லாத பெண்களதும் பிரச்சனைகளைக் கையாளும் அமைப்பாகும்.இதனையொத்த 'கிழக்கு லொஸ் ஏஞ்சலிஸ் தாய்மார்'(Mother of East LosAngels) அமைப்பு சுற்றுச்சூழல் சார்ந்த நியாயப் பிரச்சனைகளை முன்னெடுத்தது.இத்தகைய அமைப்புக்கள் பெண்ணியம் பற்றிய பொதுசனப் பார்வையை வடிவமைத்ததுடன் பெண்ணைப் பன்முகப்பட்ட வெகுசனத் தளத்தில் இணைந்து செயலாற்றவும் வழி சமைத்தது.கீழை நாடுகளில் பெண்ணுரிமைப் போராட்டங்களைத் தொடங்கி வைத்து வழி நடத்தியதில் ஆண் சீர்திருத்தவாதிகளுக்கு பெரும் பங்குண்டு.சீனாவில் ஹாங்யு - வெய் (1859-1927) ஆண்களுக்குப் பெண்கள் கீழ் படிய வேண்டும் என்ற கருத்தை எதிர்த்தார்.எகிப்து நாட்டில் அகமது பெயார் - சிட்யாக்,காசிம் அமீன் முதலானோர் பெண்ணியம் தொடர்பான நூல்களை எழுதி பெண்ணுரிமைப் போராட்டத்தை முன்னெடுத்தனர்.1880 மற்றும் 1890 களில் ஈரானில் பலதாரத்திருமணம் ஆண் அறிஞர்களால் கண்டிக்கப்பட்டது. இதே காலகட்டத்தில் இந்தியாவில் ராஜாராம் மோகன்ராய், ரமாபாய் முதலானோராலும் பெண்ணுரிமைக் கருத்துக்கள் முன்னெடுக்கப்பட்டன.

"'பெண்மை'என்ற தமிழ்ச்சொல் பெண்ணியம் என்ற சொல்லின் பொருளோடு வேறுபட்டு விளங்குகிறது. பண்பாடு, மரபு, இவற்றின் அடிப்படையில் பேணப்பட்டு வந்த பெண்ணின் இலக்கணங்களைக் குறிக்கவே பெண்மை என்ற சொல் பயன்படுத்தப்பட்டு வருகிறது[7].தமிழுக்குப் "பெண்ணியம்" என்ற சொல் அந்நியமாயினும் உருமாற்றத்துக்கான நடவடிக்கையாக அமையும் அதன் கோட்பாட்டை ஓரம்கட்டவோ, ஒதுக்கி வைக்கவோ முடியாது.ஏனெனில் பெண்ணியம் என்பதும் அதன் கோட்பாடுகளும் ஒரு சமூக மாற்றத்திற்கான நடவடிக்கை ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐக்கியநாடுகள்சபை 1975ஆம் ஆண்டை மகளிர் ஆண்டாக அறிவித்தது. 1975 தொடங்கி 1985 வரையான பதினொரு ஆண்டுகளை அனைத்துலக மகளிர் ஆண்டாகக் கொண்டாடத் தீர்மானித்ததை அடுத்து, இலங்கையிலும் பெண்ணியம் பற்றிய கருத்துக்கள் முன்னெடுக்கப்பட்டன.

இலங்கையில் தோற்றம் பெற்ற பெண்கள் அமைப்புக்கள் "சுய உரிமை போராட்டத்தில் தீவிரவாத இயக்கங்கள் பலம் பெற்று வளரவும், அதிகளவு பெண்கள் அணியில் சேரவும், தமிழ்ப் பெண்மையின் பாரம்பரியப் படிமங்கள் மாற்றுருவாக்கம் பெறவும் பேரளவில்" உழைத்தன.1970களுக்குப் பின் ஆயுதப்போராட்டம் வலுப்பெற்ற சூழ்நிலையில் மனித உரிமைகள் மீறப்பட்ட சூழலில் இத்தகைய மனித உரிமை மீறல்களுக்கு எதிராக 1971 இல் சிவில் உரிமை இயக்கம், 1972 இல் சற்யோதய, 1979 இல் நிறுவப்பட்ட இனங்களுக்கு இடையிலான நீதி,சமத்துவத்திற்கான இயக்கம் முதலானவை தோற்றம் பெற்றன. இவ்வமைப்புக்களில் பெண்கள் சுயாதீனமாக இயங்கினாலும் இவை தனித்துவமான பெண்கள் அமைப்பாகத் தொழிற்படவில்லை. பெண்கள் மீது கொண்ட விசேட அக்கறை,பெண்களுக்கு எதிரான அடக்குமுறை, பாரபட்சம், வீட்டிலும் வெளியிலும் பெண்கள் மீது திணிக்கப்படும் இரட்டைச் சுமை ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு 1980களுக்குப் பின் பெண்களுக்கெனத் தனிப்பிரிவுகள் உருவாக்கப்பட்டன.

1980 இல் 'பெண்கள் முன்னேற்றச் சங்கம்' ஏற்படுத்தப்பட்டது.இச்சங்கம் உத்தியோகபூர்வ அமைப்பில்லாதிருந்தாலும் இரண்டு வருட காலம் இயங்கியது.இதன் பின் உருவாக்கப்பட்ட 'பெண்கள் ஆய்வு வட்டம்' பெண்களின் ஆராய்ச்சி, எழுத்தாற்றலை ஊக்குவிப்பதற்கான நோக்கில் உருவாக்கப்பட்டது.இந்த ஆய்வு வட்டத்தில் சர்வமங்களம் கைலாசபதி, சிவரமணி, ஔவை, மல்லிகா, சோமேசசுந்தரி, பார்வதிகந்தசாமி, ரஜனிதிரணகம, சுல்பிகா முதலானோர் அங்கம் வகித்தனர். இவ்வமைப்பினால் வெளியிடப்பட்ட 'சொல்லாதசேதிகள்', 'கேள்வி, பதில் வடிவிலான பெண்ணிலைவாதம்' குறித்தான நூல்கள் இரண்டும் முக்கியமானவை.

1982 இல் பொலிரெக்ஸ் ஆடைத் தொழிற்சாலையில் நிகழ்ந்த வேலைநிறுத்தப் போராட்டமே,இலங்கையில் பெண்ணுரிமை, பெண் விழிப்புணர்வைத் தூண்டிய முக்கிய நிகழ்வாகக் கருதப்படுகிறது. தேசிய மட்டத்திலான முதற் பெண் நிகழ்வாக 1983 இல் கொழும்பு நகரமண்டபத்தில் கொண்டாடப்பட்ட சர்வதேசப் பெண்கள் தினத்தைக் கூறலாம். "அன்றைய தினம் பயங்கரவாதத் தடைச் சட்டத்தை ரத்து செய்தல், தமிழ் அரசியல் பெண்கைதியான நிர்மலா நித்தியானந்தனை விடுதலை செய்தல், தோட்டத்தொழிலாளருக்குச் சமமான சம்பளம், பிரஜாவுரிமை வழங்கல் முதலானவற்றை அடிப்படையாகக் கொண்டு சாலை மறியல் போராட்டமும் இடம் பெற்றது" இக்காலப்பகுதியில் தோற்றம் பெற்ற சமாதானத்திற்கான பெண்கள் அமைப்பு (WFP) சமாதானத்திற்கும் ஜனநாயகத்துக்குமான பாலமாக இயங்கியதுடன் வன்முறைகள் முடிவுக்கு கொண்ட வரப்படவேண்டும் என்றும் குரல் கொடுத்தது. பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்ட பெண்களுக்கான சட்ட உதவிகளையும் இவ்வமைப்பு வழங்கியது.1987 இல் இனப்பிரச்சனை உக்கிரம் அடைந்த சூழலில் வீணான அழிவுகளைத் தடுத்த நிறுத்தும் வகையில் தாய்மாரும் மகள்மாரும் (MDL) என்னும் அமைப்புத் தோன்றியது.1990களில் இவ்வமைப்பு மனித உரிமைகள் இயக்கத்தோடு இணைந்து அரசியல் தீர்வு, அதிகாரப் பகிர்வு முதலான விடயங்கள் தொடர்பாகவும் கலந்துரையாடியது.

1990இல் தெற்கில் இடம் பெற்ற அரசியல் வன்முறை அங்கு அன்னையர் முன்னணி என்னும் அமைப்பை உருவாக்கியது.சட்டத்துக்கு அப்பால் கொலை செய்யப்பட்ட ஆயிரக்கணக்கானவரின் தாய், மனைவிமார் ஒன்றிணைந்து ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி உறுப்பினரின் ஆதரவுடன் இம்முன்னணியைத் தொடங்கினர். பிற்பட்டகாலத்தில் அரசியல் பலத்தை மாற்றக்கூடிய சக்தி மிக்க அமைப்பாக இது உருவானது. இலங்கையில் 1994 இல் நிறுவப்பட்ட தீவிரமான பெண்ணிய அமைப்புக்களில் ஒன்று ஜனநாயகத்துடன் சமாதானத்துக்கான இயக்கம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசு, விடுதலைப்புலிகளுக்கு இடையில் போர்நிறுத்தத்தை மேற்கொண்டு சமாதானத்தை ஏற்படுத்துவற்கான முன்முயற்சிகளை இவ்வமைப்பு எடுத்தது.

திருநெல்வேலியைச் சேர்ந்த பெண்கள், ஆஜன்ரீனாவைச் சேர்ந்த பிளாஸா டெல்மயோ அன்னையரைப் பின்பற்றி யாழ்ப்பாண அன்னையர் முன்னணியை நிறுவினர். தம் பிள்ளைகளை விடுவிக்குமாறு 1984 இல் ட்றிமர் மண்டபத்திலிருந்து கச்சேரி வரை இம் முன்னணியினரால் நடாத்தப்பட்ட ஊர்வலம் வரலாற்று முக்கியத்தவம் வாய்ந்தது. இயக்கங்களுக்கிடையே உள்முரண்பாடுகள் ஏற்பட்டபோது அப்போது எல்லாம் அன்னையர் முன்னணி தலையிட்டு சமரசம் செய்து வைப்பதில் முனைப்போடு செயற்பட்டது. இனங்களுக்கு இடையில் உறவையும் ஐக்கியத்தையும் ஏற்படுத்தும் வகையில் செயற்பட்ட அமைப்பு இதுவாகும்.

1989 இல்ஆரம்பிக்கப்பட்ட பூரணி பெண்கள் நிலையம், பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்பட்டவருக்கும், வதிவிடம் அற்றவருக்கும் வதிவிடம் வழங்குவதை நோக்கமாகக் கொண்டு நிறுவப்பட்டது.மனித உரிமை, பெண்ணுரிமை முதலானவற்றைப் பிரதான குறிக்கோளாகக் கொண்டும் இயங்கிய இவ்வமைப்பில் ராஜினி திரணகம, சிவரமணி ஆதலான பலரும் அங்கம் வகித்தனர். ஆயினும் இவ்வமைப்பு 1991 இல் முடிவுக்கு வந்தது.

1990 இல் இலங்கையில் நடைபெற்ற போரால் சனத்தொகையில் 1.2 இலட்சத்துக்கும் அதிகமான மக்கள் கொழும்பை அண்டிய பகுதிக்கு இடம் பெயர்ந்தனர்.இந்நிலையில் இடம்பெயர்ந்தவர்களைக் கருத்தில் கொண்டு யாழ்ப்பாணத்தின் அன்னையர் முன்னணியினரும் பெண்கள் ஆய்வு வட்டத்தினதும் செயற்பாட்டாளராக இருந்து இடம் பெயர்ந்த பெண்கள் சிலரும்,முஸ்லிம் பெண்கள் ஆய்வு, கொழும்பு அக்ஷன் ∴போறம் ஆகியவற்றோடு இணைந்து பெண்களும் ஊடகக்கூட்டும் (woman and media collective) சந்திப்பொன்றை மேற் கொண்டனர்.இச்சந்திப்பின் பயனாக இடம்பெயர்ந்தவர்களின் மத்தியில் வேலை செய்வதற்காக சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையம் உருவானது.பெண்களுக்கு எதிரான வன்முறைகளைக் கண்காணித்துக் கொண்டு இடம்பெயர்ந்தவர்களுக்கான உதவிகளைச் செய்து வந்த தெற்கிலுள்ள சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையம் 1995 இல் முஸ்லிம் ஆடவர்களின் முயற்சியினால் மூடப்பட்டது.இதனை அடுத்து மட்டக்களப்புக்கு மாற்றப்பட்ட இவ்வமைப்பு ஆயுதப் போராட்டத்தால் பாதிக்கப்பட்ட பெண்களுக்காக இற்றை வரை வேலை செய்கின்றது.கல்வி அறிவுக்கூடாகப் பெண்விழிப்புணர்வைத் தூண்டும் இவ்வமைப்பு பெண் கீழ்நிலைப்படுத்தப்படுவதைக் கண்டிப்பதுடன் பாலியல் சுரண்டல்களுக்கு எதிராகவும் போராடி வருவதுடன் “பெண்” என்னும் இலக்கிய சஞ்சிகையை தொடர்ச்சியாக வெளியிட்டும் வருகிறது.

1990களில் தோற்றம் பெற்ற பிறிதொரு அமைப்பான “யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட சங்கம்”, பெண்கள் சமூக அபிவிருத்தியை நோக்காகக் கொண்டு இயங்கியதைப் போல 1999 இல் உருவாக்கப்பட்ட “பொலநறுவ மாவட்ட பெண்கள் குழு”எல்லைப் புறக் கிராமங்களில் வாழும் பெண்களின் சமூக அபிவிருத்தியை நோக்காகக் கொண்டு இயங்கியது.1995 இல் பீஜிங் ஹெய்றோவில் நடைபெற்ற பெண்கள் பற்றிய நான்காவது மாநாட்டை ஒட்டி அமைக்கப்பட்ட “இலங்கைப் பெண்களின் அரச சார்பற்ற அமைப்புக்களின் அரங்கு”(SLWNGOF) வன்முறையும் யுத்தமும் அற்ற சுபிட்சமான வாழ்வைப் பெறும் நோக்கோடு உருவாக்கப்பட்டது.

ஈழத்தில் சமூக விடுதலையைக் கருத்திற் கொண்டு தோன்றிய பெண்கள் அமைப்பானது வெகுசனமட்டத்தில் விளைதிறனும் செயற்றிறனும் கொண்ட அமைப்பாக இயங்கியதுடன் பெண்ணிய உணர்வு நிலையையும் வளர்த்து எடுத்தது. பெண்ணியச் சிந்தனையை உள்வாங்கி குடும்பம்,தொழில் வாய்ப்பில் சமமின்மை; சமூக ஒடுக்குமுறை என்பவற்றுக்கெதிராகக் குரல் கொடுத்த இவ்வமைப்புக்களானது பெண்ணியம் பற்றிய விழிப்புணர்வையும் மக்கள் மத்தியில் ஏற்படுத்தியது.

■



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏழாலை பொதுநூலக உலக புத்தக தின நிகழ்வுகள்

















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ் நகரில் முதல் தர சாரதி பயிற்சிப் பாடசாலை

## மும்மொழிகளிலும் வாகன பயிற்சி அளிக்கப்படும்





இப்பொழுது
பருத்தித்துறை
01 ம் கட்டை சந்தியில்
021 492 3201
071 454 6958
077 722 5292

ஒவ்வொரு மாதமும் குலுக்கல் மூலம்
03 பரிசில்கள் வழங்கப்படும்

1ம் பரிசு துவிச்சக்கரவண்டி
2ம் பரிசு மின் விசிறி
3ம் பரிசு மின் அழுத்தி





# L கிருபா லேணர்ஸ்

(அரச அங்கீகாரம் பெற்ற சாரதி பயிற்சிப் பாடசாலை)

பெண்களுக்கு
நவீன காரில் பயிற்சி
வழங்கப்படும்.

- வாகன பயிற்சிகள் சுன்னாகக் கிளையிலிருந்து ஆரம்பிக்கப்படும்.
- குறிப்பிட்ட காலப்பகுதியில் விரைவாக சாரதி அனுமதிப்பத்திரம் வழங்கப்படும்.
- எழுத்துப்பரீட்சையில் சித்தியடைய விசேட வீதி ஒழுங்கு வகுப்புக்கள் நடைபெறும்.
- ஞாயிற்றுக்கிழமைகளில் மருத்துவ சான்றிதழ் (மெடிக்கல்) புகைப்படம் என்பவற்றை பெற்றுக்கொள்ள ஒழுங்குகள் செய்து தரப்படும்.
- அனுபவம் வாய்ந்த வாகன பயிற்றுனர்களால் வாகன பயிற்சிகள் வழங்கப்படும். தாங்கள் விரும்பிய நேரங்களில் வாகனப் பயிற்சி வழங்கப்படும்
- தவணை முறைக் கட்டணங்கள்.
- வான், கார், முச்சக்கரவண்டி, மோட்டார் சைக்கிள், லான்ட்மாஸ்ரர், ரக்டர், பஸ் என்பவற்றுக்கு பயிற்சியுடன் சாரதி அனுமதிப்பத்திரம் வழங்கப்படும்.
- ரெயலில் சித்தியடையத்தவறின் தொடர்பயிற்சி இலவசமாக வழங்கப்படும்.

# KIRUBA LEARNERS

*(Govt. Approved Driving Training School)*

தலைமைக் காரியாலயம்
226, கஸ்தூரியார் வீதி
யாழ்ப்பாணம்.
021 222 4353
021 492 3200

எமது கிளைகள்

| சாவகச்சேரி | நெல்லியடி | சுன்னாகம் | கிளிநொச்சி | விசுவமடு |
|---|---|---|---|---|
| 021 493 3202 | 021 300 6550 | 021 224 2022 | 021 228 5505 | 021 320 1515 |
| 031 330 1818 | 071 454 6957 | 071 454 6956 | 071 454 6955 | 071 454 6955 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*Krishna Printers Chunnakam*